
# திருக்கோணாசல வைபவம்



வே.அகிலேசபிள்ளை

அ

R. Lugasthian

உ
வீரகத்தி விநாயகர் துணை

# திருக்கோணாசல வைபவம்

இது
திருகோணமலை
ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை
அவர்களால் 1889 ஆம் ஆண்டில்
சத்தியரூபமாக இயற்றப்பட்டது

நூலின் பெயர் : திருக்கோணாசல வைபவம்

ஆக்கியோன் : ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளை.

பதிப்புரிமை : த.த.ஞானேஸ்வரன்.

முதற்பதிப்பு : 1950

இரண்டாம் பதிப்பு : 1999

பிரதிகள் : 1000

விலை : ரூபா. 100/-

கணனிஅச்சுப்பதிவு: கலர்டொட்ஸ் நிறுவணம்
31/21, டோசன் வீதி,
கொழும்பு - 2.

உ

# வெளியீட்டுரை

தேனினும் இனிய தெய்வத் தமிழ் இன்று திக்கெட்டும் பரவும் வண்ணம் பாரினில் பலபேர் பலவிதத்திலும் தம்மாலான பங்களிப்பை நல்கிக்கொண் டிருக்கும் இந்நாளில் யானும் ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தினவுஎடுத்துக்கொண்டிருந்தது. அப்போ, கோணேசர் ஆலயத்தில் அண்மையில் திருக்கோணமலையைச் சேர்ந்த நண்பர் ஒருவரால் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரக் கும்பா பிஷேக மலர் எனக்குக் கிடைத்தது. அம்மலரின் ஊடாக திருக்கோணேசப் பெருமானின் மகிமையையும், அக் கோவிலின் பல நூற்றாண்டுப் பின்னணி யைக் கொண்ட வரலாற்றையும் ஓரளவு அறிந்துகொள்ள முடிந்தது.

இப்புனிதக் கோவிலின் உண்மையான வரலாறு இன்று ஒருசிலரால் திரிபுபடுத்தப்பட்டு வருகிறது. இதனால் எமது வருங்கால சந்ததியினர் உண்மை வரலாற்றை அறியாது தவறாக வழிநடத்தப்படலாம். அதனைத் தவிர்க்க இக்கோவில் பற்றிய பழமையான வரலாற்று நூல்கள் ஏதும் கிடைக்குமா எனத் தேடிக்கொண்டிருந்த வேளையில், 1889ம் ஆண்டளவில் ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளை என்பவரால் எழுதப்பட்டு 1950ல் அவரது வழித்தோன்றல் ஸ்ரீமான். அ. அளகைக்கோன் என்பவரால் வெளியிடப்பட்ட **திருக்கோணாசல வைபவம்** எனும் நூல்பற்றி அறிந்தேன். அதன் பிரதியை பெற முயன்றபோது அந்நூல் இன்று கிடைத்தற்கரியதாகவும் ஒரே ஒரு பிரதிமட்டும் ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளை அவர்களின் வழித்தோன்றல் திரு அ. கணேசலிங்கம்அவர்களிடம் இருப்பதாகவும் அறிந்தேன்.

எனது திருமலை நண்பர் ஒருவர் மூலம் திரு. அ. கணேசலிங்கம் அவர்களுடன் தொடர்புகொண்டு அந்நூலை மறுபதிப்புச் செய்ய அனுமதியையும் ஒரு பிரதியையும் கேட்பித்தேன். திரு அ. கணேசலிங்கம் அவர்கள் பெருமனம்கொண்டு அதன் பிரதியையும் மறுபதிப்புக்கான அனுமதியையும் தந்துதவினார்கள். அத்துடன் இத்தகைய பயன்தரு முயற்சிகளை மேலும் விரிவுபடச் செய்யுமாறும் கேட்டுக்கொண்டு தமது ஆதரவையும் வாழ்த்துகளையும் நல்கினார்கள். அவர்களுக்கு எனது மனங்கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது வேண்டுகோளுக்கிணங்க இந்நூல் வெளிவருவதற்கு ஆரம்பம் முதல் பக்கதுணையாக இருந்து, வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் வெளியிடவுதவிய நண்பர் திருமலை திரு. கணேஸ் கீர்த்திதாஸ் அவர்க ளுக்கும் எமது அன்புகலந்த நன்றிகள் உரியன.

இறவாத புகழுடைய தமிழ் நூல்கள் தமிழ் மொழியில் வருதல் வேண்டும் என்ற நோக்கில் சமயம், தத்துவம், அறவியல், வரலாறு முதலிய துறைகளில் நல்ல பல நூல்களை ஆக்கியும் அச்சேற்றியும் வரும் (கலர்டொட்ஸ்) அருளொளிப் பதிப்பக உரிமையாளர் அடியார்க்கடியன் அவர்கள் இந்நூலை சிறப்பாக அச்சிட்டு உதவியமைக்கு எனது நன்றிகள் உரியதாகட்டும்.

காலங்கள் மாறும் போது கூடவே கருத்துகளும், கலாசாரங்களும் மாறலாம். ஆனால் உண்மை வரலாற்றை மாற்றவியலாது. அப்படி மாற்றினாலுங்கூட வரலாறு, மாற்றியவர்களை மன்னிக்காது. இது உலகறிந்த உண்மை. எனவேதான் பழமை வாய்ந்த நூலென ஒதுக்காமல் மாற்றம் ஏதும் செய்யாமல், கருத்துக்களை உள்ளது உள்ளபடியே புதுப்பொலிவுடன் பிரதியாக்கம் செய்து வெளியிடுகிறேன்.

எனது இந்த முயற்சிக்கு ஊக்கம் தந்து உறுதுணையாக இருந்த எனது பெற்றோருக்கும் எனது தாழ்மையான வந்தனங்களைச் சமர்ப்பிக் கின்றேன்.

ஓம் என்ற ஓங்கார ஒலிக்கு உருத்துடையவர் சிவன்
ஓம் என்ற ஓங்கார ஒலிக்கு கருத்துடையவர் சிவன்
ஓம் என்ற ஓங்கார ஒலிக்கு பலம் சேர்ப்பவர் சிவன்
ஓம் என்ற ஓங்கார ஒலிக்கு நலம் சேர்ப்பவர் சிவன்
ஓம் ஓம் ஓம் இதுவே ஓம் நமசிவாய எனும் மாமந்திரம்

தம்பு தம்பையா ஞானேஸ்வரன்

ஹம்பேர்க் - ஜேர்மனி.
1999 - 4 - 12



நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை

திருக்கோணேஸ்வர ஏரம்பநாதர்

7ம் நூற்றாண்டுக் குறியது

உ

# அணிந்துரை

திருக்கோணமலை - அன்பு இல்லத் தந்தை,
"இறைபணிச் செம்மல்" சுந்தரலிங்கம் ஐயா
அவர்கள் வழங்கியது.

திருக்கோணாசல வைபவம் என்னும் இந்நூல் வீரகத்தி விநாயகர் துணையோடு ஸ்ரீமான் சே. அகிலேசபிள்ளை அவர்களின் அரிய முயற்சியால் 1889ல் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த விபரங்களைச் சேர்த்து ஆக்கப்பட்டது. இது வெறும் நூலல்ல நமது மானம்காக்க, மரியாதைகாக்க, சந்ததியைக்காக்க், சரித்திரத்தைக் காக்க, இலங்கையில் எங்கள் உரிமைகளைக் காக்க எடுத்து வைக்கப்பட்டுள்ள பெரிய வரலாற்றுப் பொக்கிஷமாகும்.

நம்மவர், கால மாற்றத்திற்கு அமைய கடவுள் நம்பிக்கையையும் மாற்றிக்கொண்டு போகும் தன்மையால், இன்று சிவவழிபாடு அருகி வருகின்றது. "சிவபூமி" என்று திருமூலரால் போற்றப்பட்ட எமது ஈழமணித் திருநாட்டிலே இருக்கின்ற முக்கிய சிவஸ்தலங்கள் எல்லாம் இனக் கலவரங்களால் அழிக்கப்படுகின்றன. "சிவம் அழிந்தால் சவம். சிவம் என்றால் அன்பு. அன்பு அழிந்தால் அவலம். சிவம் அழிந்தால், அன்பு ஒழிந்தால், சவக்குழிகள் தோண்டப்படும் அவலம்தான் தோன்றும்." அந்நிலை இன்று நம் நாட்டில் தோன்றியுள்ளது. திருக்கோணேஸ்வரத்திலும்கூட இந்நிலை காணப்படுகிறது. திருக்கோணேஸ்வரம் காலத்திற்குக் காலம் மிலேச்சர்களின் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தும் ஆலயத்தை அடைத்து வைக்காமல் ஆறுகாலப் பூஜை இல்லாவிட்டாலும் அனுதினமும் பூஜைகள் நடைபெறுகின்றன. இது இன்றைய சூழலில் மிகுந்த அற்புதமே.

"திருக்கோணாசல வைபவம்" என்னும் இப் பொக்கிஷம் சிவவழிபாடு பற்றியும், எமது பாரம்பரியம் பற்றியும் பல சரித்திரச் சான்றுகளை உள்ளடக்கியதாக உள்ளது. எம் முன்னோர் கட்டிக்காத்து வந்த எமது இந்தப் பாரம்பரியங்களை நாம் இழந்துவிடலாமா? எமது எதிர்காலச் சந்ததிக்கு நாம் இவைகளைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டாமா? பாதுகாக்க வேண்டிய "திருக்கோணாசல வைபவம்" மறுபதிவு செய்யப்பட்டுள்ளதும், இது போன்ற இன்னும் பல நல்ல நூல்கள் மறுபதிப்புச் செய்யப்பட விருப்பதும் பாராட்டுக்குரியவையே. திருக்கோணேஸ்வரத்திற்கு இவ்வளவு, சரித்திரச் சான்றுகள் இருந்தும்கூட புனைகதையான

கோகர்ணகதை பேசப்படுவதை நாம் அறிவோம். காரணம், நாம் உண்மை வரலாற்றை அறிந்துகொள் ளாமையேயாகும். நாம் குடியோடு அழிக்கப்பட்டாலும் கோணேஸ் வரத்தை அழியவிடலாமா? நம்மை நாமே அறிந்து கொள்ளாமை யால்தான் நாம் அழிகின்றோம். நம்மை நாம் அறிந்து கொண்டால், எவரும் எம்மையும் எமது தனித்துவத்தையும் அழிக்க முடியாது. திருக்கோணேஸ்வரம் நம்முடையது. அதன் புனிதத்துவமும், வரலாற்று பின்னனிகளும் பாதுகாக்கப்படவேண்டும். நாம் இனியும் வரலாற்றுச் சிதைவுக்கு இடமளிக்கக்கூடாது.

எமது இந்த எழுச்சிக்குத் "திருக்கோணமலை வைபவம்" என்னும் நூல் பெரிதும் துணை நிற்கட்டும்.

இந்நூலை ஆக்கியோன், அச்சிட்டோன், பாதுகாத்தோன், மறுபதிவு செய்தோன், உதவியோன் எல்லோர்க்கும் எமது இனிய வாழ்த்துகள்.

வணக்கம்

இவ்வண்ணம்,
"என்றும் சிவசேவையில்"
சங்கரப்பிள்ளை சுந்தரலிங்கம்.

கட்டை பறிச்சான்.

உ

# பதிப்புரிமை

வரலாறு ஒரு வரப்பிரசாதம். இது எல்லாத் தேசத்திற்கும், எல்லா இன மக்களுக்கும் பொருந்தும். இப்படிப்பட்ட வரலாற்றுப் பின்னணியைத் தக்கவைக்க எடுக்கும் முயற்சி என்பது முழு மனித குலத்திற்குஞ் செய்யும் மகத்தான தொண்டு என்பதை நாம் முதற்கண் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் திரிபுபடுத்தப்பட்ட வரலாறுகளும் இன்று நம்மிடையே உலாவி வலம் வந்துகொண்டுதான் உள்ளன. இவற்றின் உள்நோக்கங்கள் ஒரு சிலரை மாத்திரம் திருப்திப்படுத்தப் பயன்படுவதனால் உண்மையான வரலாற்றில் உள்ள உயிரோட்டம் அவற்றில் இருப்பதில்லை.

கிழக்கிலங்கையின் பாரிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட திருக்கோணமலையும், திருக்கோணேசர் ஆலயமும் எவ்வித திரிபுக்கும் அப்பாற்பட்டது. காரணம், மகா வல்லமை பொருந்திய மாதொருபாகன் மாதுமை அம்பாள் சமேதராய் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஒரு புனித தலமாக இன்னும் விளங்குவதுதான்.

எனது மூதாதையரான ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்களால் 1889ம் ஆண்டு ஆக்கப்பட்ட **திருக்கோணாசல வைபவம்** என்னும் நூல் பல பெரியோர்களின் இடையறாத வேண்டு கோளுக்கிணங்க 1950 ஆண்டு எனது தந்தையாரான ஸ்ரீமான் அ. அளகைக்கோன் அவர்களால், பிரசுரித்து வெளியிடப்பட்டது. இன்று இவ்வரிய நூல் எம்மிடையே அருகி மறைந்து போய்விடுமோ என நான் கிலேசங்கொண்டிருந்த சமயம், Hamburg, Germany இல் வசிக்கும் இலங்கையரான திரு. தம்பையா ஞானேஸ்வரன் என்பவர் தனது தாய் தந்தையரின் வேண்டுகோளின்படி, அவரின் நண்பர் மூலமாக என்னைத் தொடர்புகொண்டு இவ்வரிய நூலை மீண்டும் வெளியிட்டு மக்களிடையே பிரபல்யம் அடையச் செய்யவேண்டும், குறிப்பாக இன்றைய இளைய தலைமுறையினருக்கு கடலுடன் சூழ்ந்த திருக்கோணமலையின் உண்மைச் சரித்திரம் என்றும் அகலா பசுமையுடன் அவர்களின் மனங்களில் கமழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை எனக்கு வெளிப்படுத்தி இந் நூலின் மறுபதிப்புக்கு என்னுடைய சம்மதத்தைக் கோரினார். நான் எனது பூரண சம்ம்தத்தை அவருக்குத் தெரிவிப்பதோடு, இதுவரை காலமும் பத்திரப்படுத்திப் பாதுகாத்து வைத்திருந்த இந் நூலின் பிரதியை மறுபதிப்பிற்காக அவரிடம் கொடுத்து அவரது முயற்சிக்கு எனது ஆத்ரவையும், ஆசிகளையும் நல்குகின்றேன். - ஓம் நமசிவாய.

A. GANESHALINGAM
MANAGER & TRUSTEE
VEERAKATHI PILLAIYAR TEMPLE
10-4-99

A. GANESHALINGAM
Manager & Trustee
VISVANATHA SWAMI SIVAN KOVIL
10-4-99.

உ

# முதலாம் பதிப்புரை

இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன் எமது தந்தையார் ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்கள் வெகு பிரயாசத்துடன் பல விடங்களிலும் சென்று சென்று தேடி எடுத்த நூல்களிலிருந்து தேர்ந்து எடுத்துக் கோத்து இச் சரித்திரத்தைத் தெளிவான வசனநடையில் எழுதியுள்ளனர். இதை அச்சேற்றி வெளியிடுவதற்குத் தடையாகப் பல வசதிக்குறைவுகள் நேர்ந்தமையின், வெளியிடாது 1-1-1910 ல் சிவபதமடைந்தார்.

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் இவ்விடம் வந்த ஸ்ரீமான் பொன். இராமநாதன் துரையவர்கள் இந் நூலைப் பற்றிக் கேள்விப்பட்டு, எமது தமையனார் அ. இராசகோன் அவர்களிடம் கேட்டு வாங்கிப் பார்வையிட்ட பின் இதை வெளியிடும்படி கேட்டார்கள். அவரும் அதற்கிசைந்து வெளியிடுவதற்கு எத்தனித்தார். பின் அவரும் நோய்வாய்ப் பட்டுத் தேகவியோகமானார்.

அக்காலந் தொடக்கம் திருக்கோணமலையிலுள்ள சைவ சமயிகள் பலரும் இந்நூல் இன்னும் சிலகாலமிருந்தால் சிதைந்து போகுமாகையால் இதனை அச்சேற்றி வெளியிடும்படி எம்மைக் கேட்டுக்கொண்டார்கள், நாமும் அவர் கேள்விக்கு உடன்பட்டுப் பிரகடனஞ்செய்து முடித்தோம்.

அ.அளகைக்கோன்.

திருக்கோணமலை,
விகிர்தி வருடம்
1950.

உ

# முகவுரை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால், பாடல்பெற்ற சிவக்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய திருக்கோணாசலத்தின் சரித்திரம் வடமொழி நூலாகிய தக்ஷிணகைலாய மான்மியத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதாக அறியக் கிடக்கிறது. அந்நூல் கோணைநாயகர் கோயிற் பூசகர்களாகிய இருபாகை முதன்மைகளிடமிருந்து, சில வருடங்களின் முன் மோசம்போய்விட்டது.

தென்மொழியில் செகராசசேகர மகாராசாவினாற் பாடப்பெற்ற தக்ஷிணகைலாய புராணமொன்றே இவ்விடத்து வழங்குகின்றது. அதுவன்றி பிற்காலத்தில் சில வித்துவான்களால் அந்நூலை ஆதாரமாகக்கொண்டு பாடப்பெற்ற கோணவரைப் புராணம், கரசைப் புராணம் எனும் நூல்களுமுள. அவைகளினும் திருக்கோணாசல மான்மியம் மிகச்சுருக்கமாகச் சொல்லப் பட்டிருக்கின்றது. இதுவன்றி, குளக்கோட்டு மகாராசாவினால் ஆக்கப்பட்ட கம்பைச் சாத்திரம், பெரிய வளமைப் பத்ததி, கல்வெட்டு என்னும் மூன்று நூல்களுமுண்டு. அவைகளில், குளக்கோட்டு மகாராசா திருப்பணி செய்த சரித்திரமும், கோணைநாயகர் கோயிற் சட்டதிட்டங்களும் சொல்லப்பட் டிருக்கின்றன.

திருக்கோணாசல மான்மியத்தை அறியப் பேரவாக்கொண்டிருக்கும் நம் சுதேசிகளுக்கு மேற் சொல்லப்பட்ட நூல்கள் கிடைப்பது மிக அருமையா யிருக்கின்றது. அதுபற்றி, மேற்சொல்லப்பட்ட நூல்களை மிகுந்த பிரயாசத் தினாற் சம்பாதித்து, அவைகளிலுள்ள சரித்திரங்களனைத்தையும் ஒன்றாகத் திரட்டி, யாவரும் எளிதில் அறியும்பொருட்டு வசனநடையிலியற்றி அரங் கத்தில் விடுத்திருக்கின்றேன்.

ஆயினும், தக்ஷிணகைலாய மான்மியம் என்னுந் தேன் சமுத்திரத்தை உண்டு தெவிட்டியிருக்கும் மகாத்துமிகள், அச்சமுத்திரத் தினின்றும் உற்பத்தியான சிறு கைவாய்க்கால் போன்ற இந் நூலைத் தம் உள்ளங்கைத் தேனாகக் கருதுவார்களாக.

ஆன்றோர் இதனுருவத்தைக் கண்டு இகழாது, காணப்படும் பிழைகளைத் திருத்திச் சுத்தமாக்கிக் கைக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றேன்.

இங்ஙனம்
ஆக்கியோன்.

திருக்கோணமலை,
சர்வதாரி. (1889.)

# மதிப்புரை

கோணைநாயகர் கோயில் ஆதீனவாசிரியர்
பிரமஸ்ரீ கு.கு.,கா.கு.,ப.கு. யோகீஸ்பரக்குருக்கள் அவர்கள்
எழுதியுதவியது

தக்ஷிணகைலாசமாகிய திருக்கோணாசலத்தின் வரலாற்றுச் செய்தி களையும், சிறப்புக்களையும் முறையாகவும் தொடர்ச்சியாகவும் பண்டைக் காலச் சைவமக்கள் எவரும் எழுத முன்வராதிருப்ப ஸ்ரீமான் வே. அகிலேச பிள்ளை அவர்கள் பல வருடங்களாக ஆராய்ச்சிசெய்து தொடர்புற இந் நூலைக் கரலிகிதப் பிரதியாக எழுதி, 1889-ம் ஆண்டில் நிறைவு செய்து வைத்தார்கள்.

குளக்கோட்டு மகாராசாவாற் கட்டப்பட்ட ஸ்ரீ கோணைநாயகரது ஆலயமும் மற்றும் திருப்பணிகளும் பின் வந்த பறங்கியராற் கையாளப்பட நேர்ந்த அமையத்தில், மனம் பொறாத சில சைவமக்கள் ஆலயத்தில் உள்ள விக்கிரகங்கள், மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் ஆதியவற்றைப் பாதுகாக்கும் முறையில் எடுத்து, நகரத்தின் சில ஒதுக்கிடங்களில் குழி தோண்டிப் புதைத்து மறைத்ததாகக் கர்ணபரம்பரையான வதந்திகள் உள.

தற்போது சில ஆண்டுகளின் முன்னதாக, திருக்கோணாசல நகரத்தின் ஓரோர் பகுதிகளில் ஸ்ரீ கோணைநாயகரது ஆலயப் பொருட்கள், விக்கிர கங்கள் ஆதியவைகளில் சில பூப்பரப்பின் கீழ் எடுக்கப்பட்டதாக வதந்திகள் உண்டு. தற்போது சில தினங்களின் முன்னதாக திருக்கோணமலை நகர சபையார் தோண்டுவிக்கத் தொடங்கிய ஒரு கிணற்றில் சுமார் மூன்று அடி ஆழத்தில் மூன்று தாம்பர விக்கிரகங்கள் எடுக்கப்பட்டு, நகரசபை மண்ட பத்தில் சைவமக்களுடைய பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததைக் கொண்டு, கர்ணபரம்பரையாக நாம் அறிந்துள்ள பழங்காலச் சரித்திரங்கள் உண்மை யென்று தீர்மானிக்கலாம்.

பறங்கிக்காரர் கோணேசராலயத்தைக் கைப்பற்றியவுடன், அதன் தங்கமயமான கோபுரச் சிறப்பையும், அமைப்பையும் கண்டு வியந்து, அக் கோணேசராலயத்தைப் படம்பிடித்து வைத்துக் கொண்டுதான் தரைமட்டமாக இடித்து, அக் கற்களைக் கொண்டுதானே தற்போது அரசாங்கப் பாதுகாப்பு ஸ்தலமாக உள்ள கோட்டையின் புறமதில்களை கட்டுவித்தன ரென்பர். அவர்கள் அப்போது பிடித்த கோணைநாயகரின் ஆலயப் படம் போர்த்துக்கல் தேசத்தில் தற்போது இருப்பதாக அறிந்து, அங்கிருந்து அதன் பிரதிப்படம்

ஒன்று இங்குள்ள சில சைவமக்களின் முயற்சியால் எடுக்கப்பட்டுள்ளது. அதன் அமைவையும் சிறப்பையும் உற்றுநோக்கிய சைவமக்கள் ஸ்ரீ கோணைநாயகரது ஸ்தலத்தில் ஓர் ஆலயத்தை அமைத்து, தற்போது அகப்பட்ட விக்கிரகங்களை யெல்லாம் ஆங்குப் பிரதிட்டை செய்து பூசை நடைபெறச் செய்ய வேண்டுமென அவாவுறுகின்றனர். பின்னர் இங்ஙனமெல்லாம் நிகழவிருந்த திருக்கோணாசல வைபவத்தைச் சீரழியாது சிறப்புறத் தொடர்புசெய்து முன்னர் எழுதிவைத்த ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்கட்கும், அக்கரலிகித பத்திரத்தையெல்லாம் பேணிவைத்துத் தற்போது அச்சிற்பதிப்பித்துச் சைவமக்கட்கு உதவிய அன்னார்தம் புத்திரன் ஸ்ரீமான் அ. அளகைக்கோன் அவர்கட்கும் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

பிரமஸ்ரீ கு.கு., கா.கு., ப.கு யோகீஸ்பரக்குரு.

விகிர்தி வருடம் ஆவணி மாதம் கஅ (18)ந் நாள்

# மதிப்புரை

Dr.K.Kanapathipillai, B.A.,PH., D., (London),
Vidhvan Annamalai University, Professor of Tamil University of Ceylon.


திருக்கோணமலை ஈழநாட்டிலுள்ள பழைய ஊர்களுள் ஒன்று. இது பலவகையாலும் சிறப்புற்று விளங்கியது. மிகப்பழைய காலந்தொட்டே இது தமிழ்க் கலைக்கும் பண்பாட்டிற்கும் நிலைக்களமானது. சைவ மக்களால் தக்ஷிணகைலாசம் என்னும் பெயரால் அழைக்கப்பட்டுத் தூய்மை செறிந்த இடமாகப் போற்றப்பட்டது. சைவ நாயன்மார்களுள் ஒருவராகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகத்தைப் பெற்ற பெருமையும் தொன்மையும் வாய்ந்தது. நீர்வளத்தை அளிக்கும் குளங்கள் பல அண்மையில் உள்ளமையால் குறைவற்ற உணவுப்பேற்றினை உடையது. இயற்கை பாதுகாப்பமைந்த பெருந்துறைமுகத்தைக் கொண்டுள்ளமை யினால் இன்று ஆசியநாடுகளிலுள்ள சிறந்த கடற்படைத் தளங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இத்துணைப் பெருமைவாய்ந்த திருக்கோண மலையோடு தொடர்பு பூண்ட வரலாறுகளும் புராணக்கதைகளும் பலவுள. நம் கலையும் பண்பாடும் வீழ்ச்சியுறாது வளரவேண்டுமாயின் இவற்றை யெல்லாம் நாம் கட்டாயமாக அறிந்திருக்கவேண்டும். அவ்வறிவைப் பெறு தற்கு அறிஞர் அகிலேசபிள்ளையவர்கள் ஆராய்ந்து தொகுத்தியற்றிய "திருக்கோணாசல வைபவம்" என்னும் இந் நூல் பெரிதும் பயன்படும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

இலக்கண இலக்கிய அறிவிற் சிறந்தவரும் கவிஞருமாகிய பிள்ளை யவர்கள் சமயப் பற்றும் மிகுதியாயுடையவர்கள். அது இந்நூலைப் படிப்பவர் எவர்க்கும் எளிதிற் புலனாகும். ஆசிரியர் இந்நூலைத் தவிர, கோணை நாயகர் பதிகம், வெருகல் சித்திரவேலாயுதசுவாமி பதிகம், விசாலாட்சியம்மை பெருங்கழிநெடில் விருத்தம் முதலாக இப்பட்டினத்தோடு தொடர்பு பூண்ட பல தோத்திர நூல்களையும் இயற்றியுள்ளார். அறிஞர் அகிலேசபிள்ளை அவர்கள் புரிந்த அருந்தொண்டிற்குத் தமிழுலகமும் சைவ உலகமும் என்றும் கடப்பாடுடையன. பிள்ளையவர்கள் இயற்றிய நூலை அச்சேற்றி உலகிற்குப் பயன்படச்செய்த அவர் புதல்வர் அளகைக்கோன் அவர்க ளுக்கும் நாம் என்றும் நன்றி உடையவராயிருத்தல் வேண்டும்.

க.கணபதிப்பிள்ளை.

விகிர்தி வருடம் ஆவணி மாதம்
கஅ (18)ந் நாள்

மிலேச்சரால் அழித்தும் அழியாமல் நின்று செங்கதிர்
வீசிநிற்கும் செஞ்சடையவனே
மானசீகலிங்கத்தை மனதால்பூஜை செய்து மௌனமாய்
இருக்கும் மௌனிகளால் அன்றி உன்னை வேறாரறிவார்




நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை

## திருக்கோணேஸ்வர மூலலிங்கம்

7ம் நூற்றாண்டுக் குறியது

அருவரா தொருகை வெண்டலை ஏந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவராயுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்த நன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமாமலை அமர்ந்தாரே.



நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை

## மாதுமைசமேத கோணேஸ்வரநாதர்

7ம் நூற்றாண்டுக் குறியது

# மதிப்புரை

யாழ்ப்பாணம் பரமேஸ்வரக்கல்லூரித் தலைவராகிய
திரு. சு. நடேசபிள்ளை B.A. B.L. அவர்கள்
எழுதி உதவியது

இலங்கையில் திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்ற இரண்டு தலங்களும் தேவாரப் பதிகங்கள் பெற்ற சிறப்புடையன ஆதலின் அவற்றைச் சைவமக்கள் பெரிதும் போற்றிவருகின்றனர்; இத்தலங்களில் இருந்த திருக்கோயில்கள் பறங்கிகளின் கொடுமையினாற் சிதைந்துபோயினும், இவற்றைப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்ற நல்லெண்ணம் இக் காலத்திற் சைவமக்களின் மனதில் பதிந்து இயக்கிவருவது திருவருட் செயலாகும். திருக்கேதீச்சரத்தைப் பற்றிய பழைய நூல்கள் எதுவும் இப்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் திருக்கோணமலையைப் பற்றிய வரலாறுகளைத் தக்ஷிணகைலாய புராணம், குளக்கோட்டன் கல்வெட்டு முதலிய நூல்களிற் பரக்கக் காணலாம். தக்ஷிணகைலாய புராணம் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர் ஒருவரால் செந்தமிழ்ச் செய்யுள் நூலாக இயற்றப்பட்டது. குளக்கோட்டன் கல்வெட்டு என்ற நூலும் செய்யுள் நடையிலுள்ளது. இந்நூல்களைக் கற்போர் மிகச் சிலரே. திருக்கோண மலையைப்பற்றி இந்நூல்களிற் கண்ட வரலாறுகளையும் வேறு நூல்களில் கண்ட வரலாறுகளையும் ஒருங்கு சேர்த்து, இத்தலத்தில் சில ஆண்டுகளுக்கு முன் சிறந்த புலவராக விளங்கிய திரு.அகிலேசபிள்ளையவர்கள் திருக் கோணாசல வைபவம் என்ற நூலை இயற்றினார்கள். ஆனால் அவர்கள் காலத்தில் இது வெளிவரவில்லை. இந்நூல் தெளிவான உரைநடையில் அமைந்துள்ளது. பக்திச் சுவை செறிந்துள்ளது. இந்நூலாசிரியரின் குமாரர் திரு. அளகைக்கோன் அவர்கள் இந்நூலை இப்பொழுது வெளியிட முன் வந்தது பேருபகாரச் செயலாகும்.

சு.நடேசபிள்ளை.

இராமநாதன் கல்லூரி,
இணுவில்
12.8.50

# மதிப்புரை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியராயிருந்து
இளைப்பாறியவரும், இந்துசாதனப் பத்திரிகாசிரியருமாகிய
பண்டிதர் ஸ்ரீ. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள்
எழுதி உதவியது

"திருக்கோணாசல வைபவம்" என்னும் நூல், இந்த ஈழநாட்டிலே தேவாரம் பெற்ற ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கும் கோணாசலத்தின் வரலாற்றையும் மகத்துவத்தையும் தமிழ் வசனநடையில் விரிவாக எடுத்துக் கூறுவது. இதனை இயற்றியவர் மேற்படி ஸ்தலத்தில் உதித்தவரும், சிறந்த தமிழ் வித்துவானும், பல நூல்களின் ஆசிரியராக விளங்கியவருமாகிய ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்கள் ஆவர். இந்நூல் அற்ப தமிழ்க் கல்விப் பயிற்சி உள்ளவர்கள் தாமும் இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடிய இலகுவான இனிய வசனநடையில் இயற்றப்பட்டது. இதன் கண் திருக்கோணாசல வைபவம் முதலாக அனுபந்தம் ஈறாக முப்பது விஷயங்கள் வரையில் அடங்கியுள்ளன. இந்நூல் மேற்படி ஆசிரியரின் புதல்வர்களில் ஒருவராகிய திரு. அளகைக்கோன் அவர்களால் இப்பொழுது சிறந்த முறை யில் அச்சிடுவித்து வெளிவரலாயிற்று.

திருக்கோணமலைச் சிவாலய புனருத்தாரணம் செய்தற்காகிய முயற்சிகள் தொடங்கியும், அப் புராதன ஆலயத்துக்குரிய சில மூர்த்திகள் புதைபொருளாகக் கண்டு எடுத்துப் போற்றப்படுவதுமாகிய இந்த வேளை யிலே, நீடித்த காலம் கையெழுத்துப் பிரதியாகக் கிடந்த இந்நூலும் அச்சு வாகனமேறி வருதல் தைவிகம் எனலாம். இந்நூலைத் திருக்கோணமலை வாசிகளல்லாமல் இலங்கையில் ஏனைய பாகங்களில் உள்ள தமிழ்மக்களும் ஏற்றிப் போற்றுதல் அவசியமாகும். மேலும், வித்தியாசாலை மாணாக்கர் கட்கு இந்நூல் சரித்திரபாடமாக உபயோகிக்கத்தக்கது.

ம.வே.திருஞானசம்பந்தன்.

# மதிப்புரை

திரிபாஷா விற்பன்னரும், சுன்னாகம் பிராசீன பாடசாலை ஸ்தாபகரும், மாகாண வித்தியாதிகாரி உத்தியோகத்தினின்றும் இளைப்பாறியவரும் ஆகிய
(முகாந்திரம்) பிரமஸ்ரீ தி. சதாசிவஐயர் அவர்கள்
எழுதியுதவியது

திருக்கோணமலை, இலங்கையில் மிகுந்த பழைமையும் பிரசித்தியும் வாய்ந்த தலமாகும். இதன் பூர்வ சரித்திரம் மிக மிக முற்பட்டுப் புராதன கால ஐதிகங்களுட் தொடங்குகிறது. பழைய காலத்திற் போல, இடைக் காலத்திலும் பிற்காலத்திலும் மிக்க பிரசித்தி பெற்ற தலமாகவே விளங்கி வந்திருக்கிறது. இத்தகைய தலத்தின் பழைய வரலாற்றை அறிய எவரும் ஆவலுறுதல் இயல்பே. எனினும், அவ்வித வரலாறொன்றை ஆக்கிப் பலர்க்கும் பயன்படும்படி வெளிப்படுத்துவது சாமானியர் ஒருவர்க்கு முடிந்த தன்று; தக்க கல்வியறிவும் அனுபவமும் பரந்த கேள்வியும் ஆராய்ச்சி வன்மையும் வாய்ந்தவர் ஒருவரே செய்தல் முடியும்.

"திருக்கோணாசல வைபவம்" என்னும் திருக்கோணமலையின் பழைய வரலாற்றைக் கூறும் இந்நூல் இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன், திருக்கோணமலை வாசர் ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. ஸ்ரீ. அகிலேசபிள்ளையவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்களால் நான்று மிகப் பிரசித்திபெற்றுச் சிறந்து விளங்கியவர்; கற்றுவல்ல பெரி யோருடைய பழக்கமும் மதிப்பும் பெற்றவர். இவருடைய தமிழ் நூற் பயிற்சியையும் பெரும் புலமையையும் நோக்கி, காலஞ்சென்ற சுன்னாகம் ஸ்ரீ அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் இவரைத் "தமிழறிஞன்" எனப் பாராட்டியிருத்தல் ஒன்றே இவருடைய கல்வியறிவாற்றல்களுக்குப் போதிய சான்றாகும்.

பிள்ளையவர்கள் திருக்கோணமலையின் பூர்வீகத்தைப் பற்றி, புராணங்களிலுள்ள வரலாறுகளையும், பிறநூற் செய்திகளையும், கர்ணபரம்பரையாக அங்கங்கே வழங்கின கதைகளையும், ஐதிகங்களையும், பரம்பரைகள், கல்வெட்டுகள் என்பவற்றைப் பலவிடங்களிலிருந்தும் பிரயாசப்பட்டுத் தேடி ஆராய்ந்து தொகுத்து, "திருக்கோணாசல வைபவம்" என்னும் பெயரிட்டு இந் நூலைச் செய்து முடித்தார்கள். இது சாமானியர் ஒருவராற் செய்து முடிக்கத்தக்கதன்று. பிள்ளையவர்களுடைய அறிவு வன்மையும் ஊக்கமும் விடாப்பிடியான உழைப்புந் துணையாக நின்று அவர்கள் இந்நூலைச் செய்து முடித்தற்கு உதவின.

எனினும் இதனை அச்சிட்டு வெளிப்படுத்துதற்கு முன் அவர்கள் காலமானது, தமிழர்களாகிய எமது தவக்குறைவே. பிள்ளையவர்கள் அப்போது செய்யாதுவிட்ட குறையை இப்போது அவர்களது குமாரர் ஸ்ரீமான் அ.அளகைக்கோன் அவர்கள் நிறைவேற்றி இதனை அச்சிட்டு வெளிப் படுத்தியிருக்கிறார்கள்.

இந்நூலில் உள்ளவை பல இக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு ஒவ்வாதனவாயினும், திருக்கோணமலையின் பழைய ஐதிகங்களை அறிய விரும்புபவர்களுக்கும், உண்மைச் சரித்திரம் எழுதுபவருக்கும் இது பெரிதும் பயன்படுவதாகும் என்பது எமது துணிவு.

முகாந்திரம். தி. சதாசிவ ஐயர்

சுன்னாகம்
8-8-50

# சிறப்புப் பாயிரம்

யாழ்ப்பாணம் நவாலியூர்
திரு. க. சோமசுந்தரப்புலவர் அவர்கள்
எழுதி உதவியது

## கலித்துறை

வானாடருந் தொழுங் கோணா சலதல மான்மியத்தை
மேனாளுரைத்தநன் னூலுள் விழுமிய வேதிரட்டித்
தானாக வேயொரு நூலுரைத் தான்தமிழ் நன்கறிந்த
ஆனாப் பெருஞ்சீ ரகிலேச பிள்ளை அருந்தவனே. (1)

வண்டு பலமலர் நாடிச்செந் தேனை மகிழ்ந்தெடுத்துக்
கொண்டொரு கூட்டினிற் கூட்டிவைத் தாலெனக் கூறுபன்னூல்
கண்டு விழுமிய சேர்த்தெடுத் தேகற்ற வர்மகிழ்ச்சி
கொண்டு சிறந்திடக் கோணேசர்மான்மியங் கூறினனே. (2)

தொழுவார்க்கருள் திருக்கோணேசன் பாதத்துணை பிடித்தே
வழுவா நெறிசே ரகிலேச பிள்ளை வரைந்தவந்நூல்
அழியா தவன் தருமைந்த னளகையர் கோனருளால்
எழுதா வெழுத்திலிடுவித் துலகினுக் கீந்தனனே. (3)

எப்பா வலர்க்கு மியையமுக் கோண வியல்பையுரை
அப்பா வலனுநல் லச்சிற் பதிப்பித் தளித்தவனும்
இப்பாலுறுதிகள் யாவையு மெய்தியிமையவரோ
டப்பா லுலகினும் பல்லூழி வாழி யமர்ந்தினிதே (4)

க.சோமசுந்தரப்புலவர்.

நவாலியூர்
9-8-50

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| வெளியீட்டுரை | iii |
| அணிந்துரை | v |
| பதிப்புரிமை | vii |
| முதலாம் பதிப்புரை | ix |
| முகவுரை | x |
| மதிப்புரைகள் | xi |
| சிறப்புப் பாயிரம் | xix |
| பொருளடக்கம் | xx |
| திருக்கோணாசல வைபவம் | 1 |
| திருக்கோணமலைச் சரித்திரம் | 2 |
| மச்சேந்திரபருவதச் சரித்திரம் | 7 |
| மாவலிகங்கைச் சரித்திரம் | 9 |
| அகஸ்தியமுனிவர் சரித்திரம் | 12 |
| இராவணன் சரித்திரம் | 15 |
| விட்டுணுமூர்த்தி சரித்திரம் | 19 |
| கன்னிகைத்தீர்த்தம் உற்பத்தியான சரித்திரம் | 23 |
| இராமர் சரித்திரம் | 25 |
| வரராமதேவர் சரித்திரம் | 25 |
| குளக்கோட்டுமகாராசா திரிகோணாசலத்தில் திருப்பணி செய்து .... | 28 |
| ஆடகசௌந்தரி சரித்திரம் | 32 |
| திருக்குளச் சரித்திரம் | 34 |
| திருக்கோணைநகரிற் குடியேறிய சரித்திரம் | 40 |
| குளக்கோட்டுமகாராசா மணம்புரிந்த சரித்திரம் | 45 |
| குளக்கோட்டுமகாராசா சிவபதமடைந்த சரித்திரம் | 46 |
| கயவாகுராசன் சரித்திரம் | 47 |
| நளச்சக்கரவர்த்தி சரித்திரம் | 51 |
| மாருதப்புரவீகவல்லி சரித்திரம் | 51 |
| புவனேகவாகு சரித்திரம் | 51 |
| பரராசசேகரன், செகராசசேகரன் சரித்திரம் | 52 |
| ஆரியச்சக்கரவர்த்தி சரித்திரம் | 52 |
| தனியுண்ணாப் பூபாலவண்ணிமை கனகசுந்தரப்பெருமாளிடம் ... | 53 |
| தம்பலகமச் சரித்திரம் | 57 |
| தற்கால சரித்திரம் | 59 |
| வெள்ளைவில்வத்தடி கோணநாயகர் கோயிற் சரித்திரம் | 60 |
| குளக்கோட்டுமகாராசா மதுரையிலிருந்து அழைத்து வந்த ......... | 61 |
| வெருகற் சரித்திரம் | 66 |
| கோணேசர் கல்வெட்டு | 69 |
| திருக்கோணேஸ்வரத் திருப்பதிகம் (தேவாரம்) | 84 |
| திருக்கோணேஸ்வரத் திருப்புகழ் | 90 |
| திருக்கோணேசர் பஜனை | 93 |
| இலங்கையிலுள்ள வரலாற்றுத் ... சைவாலயங்களும் தீர்த்தங்களும் | 95 |
| அநுபந்தம் | 97 |
| முடிவுரை | 100 |

உ

வீரகத்தி விநாயகர் துணை.

# திருக்கோணாசல வைபவம்

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் உள்ள பல நாடுகளுள் மிகவுஞ் சிறந்து விளங்குகின்ற ஈழநாடாகிய இலங்கையிலே *தக்ஷிணகைலாயம், திருக்கேதீஸ்வரம், முனீஸ்வரம், கரசையம்பதி, கண்டகிவடகாந்தாரம், குமரபுரம், மாவிட்டபுரம், வல்லிபுரம், பொன்னாலயம், பிரளயவைரவர் கோயில், திருக்கோயில், நகுலகிரி, சோதிஷ்காமகிரி, உகந்தகிரி, கந்தபருவதம், மச்சேந்திரபருவதம், தேனுபருவதம், திரிகூடபருவதம், சிவசோதிபதம், சமனாசலம், விநாயகாசலம், சப்பிரகாமம், சுவேலகிரி, அசுவகிரி, கழனிமலை முதலிய புண்ணிய ஸ்தலங்களும் மாவலி கங்கை, மாணிக்க கங்கை, காவேரி கங்கை, நகுலகிரித் தீர்த்தம், கன்னியாத் தீர்த்தம், நவக்கிரித் தீர்த்தம், யமுனாரித் தீர்த்தம், அமுதகளி முதலிய புண்ணிய தீர்த்தங்களும் உண்டு. இவைகளுள் தக்ஷிணகைலாயம், திருக்கேதீஸ்வரம் என்னும் இரண்டு ஸ்தலங்களும் சிவபெருமானுக்கும், வல்லிபுரம், பொன்னாலயம் என்னும் இரண்டு ஸ்தலங்களும் விட்டுணுவுக்கும் கண்டகிவடகாந்தாரம், சோதிஷ்காமகிரி, கந்தபருவதம் என்னும் மூன்று ஸ்தலங்களும் சுப்பிரமணியருக்கும் விசேஷ ஸ்தலங்களாகும். இலங்கை யானது மகாமேரு பருவதத்தின் சிகரங்களுள் ஒன்றை வாயுபகவான் பறித்துத் தென் சமுத்திரத்தின் மத்தியில் வைத்ததினால் உற்பத்தியானதாலும், தக்ஷிணகைலாயம் இருப்பதாலும், குபேரன் முதலிய தேவர்களிருந்து அரசு செய்தமையாலும், பரதகண்டத்திலுள்ள மற்றுந் தேசங்களைப் பார்க்கிலும் மிகுந்த விசேஷமுடைய தாயிருக்கின்றது.

---

* இலங்கையின் வரலாற்றுத் தொன்மைவாய்ந்த சைவாலயங்கள் - பார்க்க பக்கம்: 95.


# திருக்கோணமலைச் சரித்திரம்

திருக்கைலாச மலையிலே சிவபெருமான் அனந்தகோடி சூரியப் பிரகாசமுள்ள சிங்காசனத்தின் மேலே தமது அருட்சத்தியாகிய உமாதேவி யாரோடு இடப வாகனத்தின் மேல் வீற்றிருந்தருளினார். அப்போது பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களும், கணநாதர்களும் சிவபெருமான் முன்பு வந்து, அட்டாங்கமும் பூமியிற்றோயும்படி விழுந்து திருப்பாதங்களை நமஸ்கரித்து எழுந்து நின்றார்கள். சிவபெருமான் அவர்கள் மீது திருவிழிக் கடை பரப்பி அனுக்கிரகம் பாலித்தார். அதன் பின்பு சிவபெருமான் சகல தேவர்களையும் நோக்கித், தேவர்களே! பிரமாவுக்குப் படைத்தற் றொழிலை யும், விஷ்ணுவுக்குக் காத்தற் றொழிலையும், உருத்திரனுக்கு அழித்தற் றொழிலையும், ஆதிசேடனுக்குப் பூமியைத் தாங்குந் தொழிலையுங் கொடுத்தோம் என்று சொல்லியருளினார். அதுகேட்ட வாயுபகவான் சிவபெருமான் முன்பு வந்து திருவடிகளை வணங்கி வாய்புதைத்து நின்று, சுவாமி! பதினாலு உலகங்களிலும் இயங்குகின்ற என்னைப் பார்க்கிலும் இந்தச் சேடன் மிகுந்த வலிமையுடையவனா? என்றான். அது கேட்ட ஆதிசேடன் அதிக கோபங்கொண்டு, கால மதியுடைய வாயுபகவானே! எப்போதும் என்னுடைய போசனமாய் இருக்கப்பட்ட உனக்கு என்ன பலமிருக்கிறது? என்றான், அப்போது வாயு பகவான் ஆதிசேடனை நோக்கி, சேடனே! உன்னைப் போல நான் கெருடனுக்குப் பயப்படமாட்டேன். ஆனால் உன்னுடைய ஆன்மாவையும் நான் தாபரிக்கிறேன் என்பதை நீ அறியாமல் இந்தச் சபையிலே உனது வீரத்தைக் குறித்துப் புகழ்ந்து பேசினாய். ஆயின், சிவபெருமானுடைய உத்தரவைப் பெற்று நாமிருவரும் யுத்தஞ் செய்யலாம் வருவாயாக என்று அழைத்தான். ஆதிசேடனும் அதற்கு இசைந்தான். அதன் பின்பு இருவரும் சிவபெருமானிடம் உத்தரவு பெற்று யுத்தஞ் செய்ய எத்தனிக்கும் போது, தேவர்கள் இருவரையும் நோக்கி, நீங்கள் யுத்தஞ் செய்து உங்கள் வீரபராக்கிரமத்தை எங்களுக்குக் காட்ட எத்தனித்து விட்டீர்கள். ஆனால் நாங்கள் சொல்லும் பிரகாரமே நீங்கள் நடக்க வேண்டும். அது எவ்விதமெனில், ஆதிசேடன் திருக்கைலாச மலையின் சிகரங்களைத் தனது பணாமகுடங்களினால் மறைத்துக் கொள்ள வேண்டும். அப்போது வாயு பகவான் தனது வல்லமையினால் ஒரு சிகரத்தையாவது பறித்தெடுக்க வேண்டும். அப்படிச் செய்வீர்களானால் உங்கள் வல்லபத்தை நாங்கள் அறியலாம் என்றார்கள். தேவர்களுடைய வாக்கை இருவரும் கையேற்ற பின்பு, ஆதிசேடன் வெள்ளிமயமாகிய திருக்கைலாய மலையை அடியிலிருந்து சுற்றிக் கொண்டு போய் முடிகளைத் தனது பணாமகுடங்களினாலே மறைத்துக் கொண்டிருந்தான். அப்போது வாயு பகவான் மிகுந்த பராக்கிரமத்துடன் பிரசண்டமாக வீசினான். இவர்கள் செய்யும் கொடிய யுத்தத்தினால் அண்ட கோளங்கள்

இந்நூலை மறுபதிப்புச் செய்ய நிதியுதவிய
அறநெறிப் புரவலர்கள் தம் துணைவியருடன்



யாழ்ப்பாணம், கொட்டடி, சீனிவாசன் வீதியைச் சேர்ந்த
திரு. தம்பு தம்பையா தம்பதியர்



ஹம்பேர்ஹ் ஜேர்மனியைச் சேர்ந்த
திரு. தம்பையா ஞானேஸ்வரன் தம்பதியர்

அசைந்தன. சப்த சமுத்திரங்களும் வரண்டன. அட்ட நாகமும் அட்ட யானையும் அட்ட குலபருவதங்களும் தத்தம் இருப்பிடம் விட்டு அடி பெயர்ந்தன. முகிற் கூட்டங்கள் தீய்ந்தன. அக்கினி பகவானும் வெப்ப மாகினன். உலகத்திலுள்ள சராசரங்களெல்லாம் அச்சம் கொண்டன. பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் அயர்ச்சி கொண்டு, சிவபெருமான் முன்பு வந்து, திருப்பாதங்களை வணங்கி, வாய் புதைத்து நின்று, சுவாமி! ஆதிசேடனும் வாயு பகவானுஞ் செய்கின்ற கொடிய யுத்தத்தினால் அண்ட புவன சராசர மனைத்தும் இமைப்பொழுதுக்குள்ளாக ஒழிந்து விடுவதற்கு ஏதுவாயிருக்கின்றது. ஆகையால் தேவரீர் திருவுள மிரங்கிக் கிருபை பாலிக்க வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அப்போது சிவபெருமான் பிரமாவை நோக்கி, பிரமனே! இந்த உத்தர கைலாய பருவதத்திலே தெற்குப் பக்கத்திலுள்ள திரிகோண சிகரத்திலோர் கைலாயபீடத்தைச் சீக்கிரம் உண்டாக்குவாயாக என்று திருவாய்மலர்ந் தருளினார். உடனே பிரமாவானவர் உத்தரகைலாயமானது எவ்வித அலங் காரங்களை உடையதாக இருக்கின்றதோ அதுபோலத் திரிகோண சிகரத் திலே மிகவும் உத்தமமான ஒரு கைலாயபீடத்தைச் சீக்கிரத்திலே செய்து முடித்தார். அதன் பின்பு சிவபெருமான் அனந்தகோடி சூரியர்களது ஒளியைப் போலும் பேரொளியையுடைய சொர்ண மயமான இலிங்க ரூபியாகிப் பிரமாவினாற் சிருட்டிக்கப்பட்ட திரிகோண கைலாயபீடத்தின் மீது உலகமாதா வாகிய உமாதேவியார் இடப்பாகத்தின் மேவ எழுந்தருளியிருந்து, ஆதி சேடனை நோக்கி, சேடனே! நான் உனக்கு ஓர் இரகசிய வார்த்தையைச் சொல்லப் போகிறேன் மிகுந்த கவனத்தோடு கேட்க வேண்டும் என்று சொல்லியபோது, ஆதிசேடன் தனது ஆயிரந்தலைகளிலே ஒருதலையைச் சாய்த்தான். அப்போது சிவபெருமான் சேடனை நோக்கி, “சேடனே! கேட்பா யாக, குமரிக் கண்டமானது மற்றைய கண்டங்களைப் பார்க்கிலும் மிக விசேஷ முடையது. அதுவன்றித் தக்ஷண திசையில் உள்ளவர்களையும் இரக்ஷிக்க நாம் சித்தங்கொண்டோம்” என்று திருவாய் மலர்ந்தருளினார். ஆதிசேடன் தனது தலையிலே ஒன்றைச் சாய்த்துச் சிவபெருமானுடைய திருவாக்கைக் கவனமாகக் கேட்குந் தருணத்திலே, வாயுபகவான் சிவபெரு மான் எழுந்தருளியிருந்த திரிகோண சிகரத்தையும் அதற்குப் பக்கத்திலுள்ள வேறு இரண்டு சிகரங்களையும் பறித்தெடுத்தான். அதுகண்ட சிவபெருமான் வாயு பகவானை நோக்கி வாயுவே, இப்போது நீ பறித்தெடுத்த மூன்று சிகரங் களிலே திரிகோண சிகரத்தைவிடுத்து, மற்றை இரண்டு சிகரங்களில் ஒன்றைத் #தொண்டை நாட்டிலும் ஒன்றைச் √சோழ நாட்டிலுங் கொண்டுபோய்

---

\# தொண்டை நாட்டில் வைக்கப்பட்ட சிகரம் திருக்காளத்தியெனப் பெயர்பெறும். சிலந்தி, யானை, கண்ணப்பநாயனார், சிவகோசரியார், நற்கீரர் முதலியவர்கள் முத்தியடைந்த ஸ்தலம்.

√ சோழ நாட்டில் வைக்கப்பட்ட சிகரம் திருச்சிராப்பள்ளியெனப் பெயர்பெறும். செவ்வந்திப் புட்பத்துக்காகச் சிவபெருமான் மேற்கு முகமான ஸ்தலம்.

வைத்து வருவாயாக என்று திருவாய் மலர்ந்தருளினார். வாயு பகவான் சிவபெருமானுடைய திருவாக்குப் பிரகாரஞ் செய்து முடித்தான். அதன் பின்பு சிவபெருமான் வாயு பகவானை அழைத்து, நாம் எழுந்தருளியிருக்கும் திரிகோண சிகரத்தை எடுத்துக்கொண்டு போய் ஈழநாட்டிலே சமுத்திரக் கரையிலே வைப்பாயாக என்று சொல்லி அருளினார். அதைக் கேட்ட வாயுபகவான் வசந்தருதுவாகிய சித்திரை மாதத்திலே ஞாயிற்றுக் கிழமையும் பூரணைத் திதியும் அத்த நக்ஷத்திரமும் விருத்தி யோகமும் பத்திர கரணமுங் கூடிய சுபதினத்திலே குரு ஓரையிலே சனி முதலிய கிரகங்கள் மகர முதலிய ஆட்சி ராசிகளிலே இருக்க, இடப லக்கினத்திலே சிவபெருமான் வீற்றிருந்தருளிய திரிகோண சிகரத்தை எடுத்துவந்து, திரிகூடபருவதத் துக்கு முப்பது யோசனை தூரத்திலே சமுத்திரக் கரையிலே வைத்தான். அன்று தொடக்கம் அது தக்ஷிணகைலாயம் எனவும் திரிகோணமலை யெனவும் பெயர் பெற்றது.

திருகோணமலையானது முத்தி நகரங்களுள் ஒன்றாகிய மதுரைக்கு கிழக்குப் பக்கமாகவிருக்கும். திருகோணமலை பூமியின் கீழாக ஒரு யோசனை ஆழமும், பூமியின் மேலாக ஆறு தண்டம் உயரமும், பதினைந்து தண்டம் அகலமும் உள்ளதாயிருக்கும். இத் திரிகோண பீடத்திலே ஒன்பது பிரகாரமுண்டு. முதலாவதாகிய நவரத்தினப் பிரகாரத்தின் நடுவிலே கற்பகவிருக்ஷ மூலத்திலே ஆயிரம் ரத்தினத் தூண்களும், நூறு பொற் றூண்களும் நிரைத்துச் சிந்தாமணியாற் செய்யப்பட்ட ஓர் இரகசிய ஆலய முண்டு. அவ்வாலயத்துக்குப் பரமானந்தம் என்னும் பெயருண்டு. இந்த ஆலயமானது ஆறு மண்டபங்களையும், விசித்திர ரத்தினப்பிரகாச முள்ள நாலு கோபுர வாயில்களையும், கொடிகளால் விளங்குஞ் சிகரங்களையும், இரத்தினத் தோரணங்கள் அசைகின்ற சாளர வாயில்களையும் உடையதாக இருக்கும். அந்தச் சிந்தாமணி ஆலயத்தின் நடுவே சூடாமணியாற் செய்யப் பட்ட விமானம் ஒன்றுண்டு. அதன் கொடிமுடியானது கோடி சந்திரப்பிரகாசமும் வெண்மை நிறமும் மூன்று கோணமும் பராசத்தியின் ரூபமும் உடையதாக இருக்கும். அந்தச் சூடாமணி விமானத்தினுள்ளே பஞ்சப் பிரமமயமா யுள்ள இரத்தின மஞ்சத்தின் மத்தியிலே பதுமாசனத்தின் மீதிலே கோணைநாயகர் ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்களும், புட்பபாணம், கருப்புவில், அங்குசம், பாசம் என்பவைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களும், அனந்தகோடி சூரியப் பிரகாசமும், புன்சிரிப்பும் உடையராய், உலகமாதாவும் தாமெடுத்த மூர்த்தத்துக்கு ஏற்ற வடிவுகொண்டவரும் ஆகிய அன்னமென்னடையம்மை என்னுந் தமது தேவியார் இடப்பாகத்தின் மேவ வீற்றிருந்து அருளுவர்.

இரண்டாவதாகிய மரகதப் பிரகாரத்திலே புத்தி என்னுஞ் சத்தியோடு மகேசுரன் வசிப்பார். மூன்றாவதாகிய சூரியகாந்தப் பிரகாரத்திலே பதினொரு

உருத்திரர்கள் வசிப்பார்கள். நான்காவதாகிய சந்திரகாந்தப் பிரகாரத்திலே சிவசொரூப முள்ள ஐம்பத்தொரு சக்திகளும், சதாசிவத்தைத் தியானித்துக் கொண்டிருக்கும் ஒன்பது சக்திகளும் வசிப்பார்கள். ஐந்தாவதாகிய மாணிக்கப் பிரகாரத்திலே நடராஜமூர்த்தியும் ஏழு கோடி மகாமந்திரங்களும் உண்டு. ஆறாவதான படிக ரத்தினப் பிரகாரத்திலே விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், மகாகாளர், சிவகுமாரர், ஐயனார், நந்தி, பிருங்கி, துர்க்கை, உருத்திரசத்தி, கணங்கள், காமதேனு, இடபம், உருத்திரன், உருத்திராணி இவர்கள் யாவரும் வசிப்பார்கள். ஏழாவதான நீலரத்தினப் பிரகாரத்திலே அளவிறந்த பிரம்மாக்களும் விட்டுணுக்களும் இந்திரர்களும் தேவரிஷிகளும் பிரமரிஷிகளும் வசிப்பார்கள். எட்டாவதான சொர்ணப் பிரகாரத்திலே அமரர் சித்தர். அசுரர், கருடர், கந்தருவர், கின்னரர், கிம்புருடர், நிருதர், தைத்தியர், இயக்கர், விஞ்சையர், முனிவர், உரகர், பூதர், பைசாசர், அந்தரர், ஆகாய வாசியர், போகபூமியர் என்னும் பதினெண் கணத்தவர்களும், செயை, விசயை, சுபர், இறீ, சிறீ, மதி, துஷ்டி, சாந்தி, வேதா, காந்தி, சிர்த்தா, கீர்த்தி, புஷ்டி என்னுந் தேவ கன்னியர்களும், உருத்திர கூட்டங்களும், பூத சேனாதிபர்களும், தெய்வ பசுக்களும், சிந்தாமணி, சூடாமணியும் சங்கநிதி, பதுமநிதிகளும் அப்சர ஸ்திரீகளும் இருபத்தேழு நக்ஷத்திரங்களும் பன்னிரண்டு ராசிகளும் நான்கு வேதங்களும் இருபத்தெட்டு ஆகமங்களும் பதினெட்டு ஸ்மிருதிகளும் பதினெண் புராணங்களும் ஆறு சாஸ்திரங்களும் அறுபத்துநான்கு கலைஞானங்களும் உருத்திர சாரூபர்களும் நவக் கிரகங் களும் வசிப்பார்கள். ஒன்பதாவதான இரசதபிரகாரத்திலே பிரணவமயமான அநேக வெள்ளை யானைகளும் சதுர்வேத ரூபமான அனேக குதிரைகளும் அநேக பூதகணங்களும் வசிப்பார்கள். இந்தப் பிரகாரத்திலே உன்னதமான நாலு கோபுரங்களையுடைய நாலுவாயில்களுண்டு. அந்த நாலு வாயில் களின் வழியாகப் பிரமலோகம் தேவலோகம் நாகலோகம் அயோத்தியாபுரி என்னும் இடங்களுக்குப் போகக்கூடியதாக இருக்கும். இப்பிரகாரத்துக்கு அப்பால் நாலுதிக்கிலும் நாலு யோசனை தூரம் வரைக்கும் சாம்பூநதம் என்னும் பொன்மயமான பூமியுண்டு . அதிலே மந்தாரம் பாரிசாதம் குங்குமம் அகில் சல்லியகரணி சந்தானகரணி மிருத்துசஞ்சீவி முதலிய விருக்ஷங்களாற் சூழப்பட்ட சிங்காரமான நந்தவனங்களும், அவ்வனத்தின் நடுவிலே அன்னப் பக்ஷிகள் வசிக்கின்ற ஓர் பொற்றாமரைத் தடாகமும், அட்டகுல பருவதங் களும், சப்தநதிகளு முண்டு. அனேக உருத்திரர்களும் பூதகணங்களும் அவ்வனத்திலே வசிப்பார்கள். அந்தப் பொன்மயமான பூமி ஒருவெள்ளி மதிலாற் சூழப்பட்டிருக்கும். அந்த வெள்ளிமதிலுக்கப்பால் ஒரு பொன் மதிலுண்டு. அந்தப் பொன்மதிலிலே எட்டுக்கோபுரவாயிலுண்டு. அவற்றிலே கிழக்குவாசலிலே விநாயகரும், தென்கிழக்குவாசலிலே வீரபத்திரரும், தெற்கு வாசலிலே நந்தியும், தென்மேற்கு வாசலிலே வைரவரும், மேற்கு வாசலிலே சுப்பிரமணியரும், வடமேற்கு வாசலிலே பத்திரகாளியும், வடக்கு வாசலிலே

மகாகாளரும், வடகிழக்கு வாசலிலே ஐயனாரும் தங்களுடைய கணங்க ளோடு கூட வசிப்பார்கள். தக்ஷிணகைலாயத்துக்கு எட்டுத்திக்கிலும் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் திக்குப்பாலகர்கள்; சசி, சுவாகா, சங்காரி, தாமசி, பார்க்கவி, சதாகதி, சம்பர்க்கரி, உருத்திராணி என்னும் தங்கள் மனைவியரோடு கூட வசிப் பார்கள். திருக்கோணமலைக்கு மூன்று கோணத்திலும் வேதா, விரிஞ்சி, பூசிருஷ்டர், பதுமநாபர், பிதாமகர், கமலவாசி, சுயம்பு, சதுர்முகர், விசுவ சிருஷ்டர் என்னும் ஒன்பது பிரமாக்களும், விட்டுணு, தாமோதரர், கிருஷ்ணர், வாசுதேவர், அச்சுதர், சரோருகர், ஸ்ரீபதுமநாபர், கேசவர், நாராயணர், சக்கரபாணி என்னும் பத்து விட்டுணுக்களும்; சங்கரர், சம்பு, கிரீசர், சமாரிஷர், கலாதரர், விரூபர், பகவான், சூலி, வாமேசர், தீபதிமூர்த்திமான், கங்காதரர் என்னும் பதினொரு உருத்திரர்களும் வசிப்பார்கள்.

திருக்கோணமலையிலே ஏழு குகைகள் உண்டு. அதில், வடக்குத் திசையிலுள்ள குகையிலே அகஸ்தியர், புலஸ்தியர், வாம தேவர், அரிதர், உரோமசர், புலகர், உசத்தியர், வசிட்டர் முதலிய ரிஷிகள் பிரதிஷ்டையுடன் இருப்பார்கள். வடமேற்குக்குகையிலே நாகலோகத்துக்குப் போகும் வழி யுண்டு. வடகிழக்குக் குகையிலே மோக்ஷ வீடுண்டு. மேற்குக் குகையிலே மகாவலிகங்கை வந்து பிரவாகிக்கும். தென்மேற்குக் குகையிலே வெள்ளி யினாற் செய்யப்பட்ட ஓர் ஆலயமுண்டு. அந்த ஆலயத்து வாசலிலே அநேக பூதங்கள் காவலாக இருக்கும். மேற்குக் குகையிலே இரத்தின தீர்த்தமும், கிழக்குக் குகையிலே மவுத்திக தீர்த்தமும் உண்டு.

# மச்சேந்திர பருவதச் சரித்திரம்

சிவபெருமானிடத்திலே அருமையான வரங்களைப் பெற்றவனும், கெட்டசித்தமும், மூடபுத்தியும் உடையவனுமாகிய இரணியன் என்னும் ஓர் அசுரன், இந்திராதி தேவர்களுக்கெல்லாம் மிகுந்த நிட்டூரங்களைச் செய்துவந்தான். தேவர்கள் அவனுடைய இடுக்கண்களைச் சகியாதவர் களாகி, மேலுந் தாங்கள் வருத்தத்தை அடையாமல், மந்திர சித்தியுள்ள ஒரு கங்கணத்தைத் தங்கள் கையிற் தரித்திருந்தார்கள். அதைக் கண்ட இரணியன் மிகுந்த கோபங்கொண்டு, அக் கங்கணங்கள் எல்லாவற்றையும் அறுத்துச் சமுத்திரத்தில் எறிந்து விட்டு, தனது குலகுருவாகிய சுக்கிராச் சாரியனை அழைப்பித்து, அக் கங்கணங்களிலுள்ள மந்திர சித்தியெல்லாம் ஒழிந்து போகும்படியாக ஒரு கிரிகையைச் செய்வித்தான். அப்போது தேவர் கள் மிகுந்த வியாகூலத்தோடு திருக்கோணமலைக்கு வந்து, கோண நாயகரைப் பிரார்த்தித்துக்கொண்டு கோபுர வாயிலில் நின்றார்கள். அச் சமயத்திலே விட்டுணு மூர்த்தி அவ்விடம் வந்து, தேவர்களை நோக்கி " தேவர்களே! உங்கட்கு நேரிட்ட துன்பம் யாது? அதைச் சொல்லுங்கள். நான் தீர்த்து உங்களைக் காத்துக்கொள்வேனென்றார். தேவர்கள் நடந்த சங்கதிகளை விபரமாகச் சொன்னார்கள். அதைக் கேட்ட விட்டுணு மூர்த்தி தேவர்களைப் பார்த்து, நான் இவ்விடம் திரும்பி வரும்வரைக்கும் அமுத பானஞ் செய்துகொண்டிருக்கக் கடவீர்கள் என்று சொல்லி, பின்பு, கோண நாயகர் எழுந்தருளி இருக்கும் ஆலயத்துட் பிரவேசித்துச் சுவாமியுடைய திருவடிகளை வணங்கி வாய்புதைத்து நின்று, தேவர்களுக்கு நேரிட்ட துன்பங்களையும், அவர்கள் திருக்கோபுரவாயிலில் வந்து நின்று முறையிட்ட தையும் சொன்னார். அப்போது கோணநாயகர் விட்டுணுவைப் பார்த்து, இரணியன் நம்மிடத்திலே மிகுந்த வரத்தைப் பெற்றுக்கொண்ட தன்மையி னாலே எப்போதுந் தேவர்களை வருத்துகின்றான். ஆனால், நீ இப்போது மச்ச ரூபங்கொண்டு சமுத்திரத்துட் பிரவேசித்து, இரணியன் எறிந்த கங்கணங்கள் எல்லாவற்றையும் எடுத்துவந்து தேவர்கள் கையிற் கொடுத்து, அவர்களை இரட்சிப்பாயாக என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அதைக்கேட்டு விட்டுணுமூர்த்தி மச்ச ரூபங்கொண்டு, சமுத்திரத்துட் சென்று, இரணியனால் எறியப்பட்ட கங்கணங்க ளெல்லாவற்றையும் எடுத்துவந்து, திருக்கோணமலைக்கு முன்பாகத் தலையையும் திரிகூட பருவதத்துக்கு நேராக வாலையும் வைத்து, தாமெடுத்துக்கொண்ட மச்சக் கூட்டை விட்டு வெளியே வந்து, தேவர்களுக்குக் கங்கணங்களைக் கொடுத்துத் தேவலோகத்துக்குப் போகும்படி அனுப்பிவிட்டு, பின்பு கோணநாயகருடைய திருப்பாதங்களைப் பூசை செய்து வணங்கி விடை

பெற்றுப் கொண்டு தன்னிருப்பிடத்திற்குப் போனார். அந்த மச்சக்கூடானது ஒரு பெரிய மலையாகி, தக்ஷிணகைலாயமாகிய திருக்கோணமலையுடன் அணைந்திருக்கின்றது. அந்நாள் துவக்கம் அம்மலைக்கு #மச்சேந்திர பருவதமெனவும், திருக்கோணமலை நகருக்கு மச்சேந்திரம் எனவும் நாமங்கள் உண்டாயின. மச்சேந்திர பருவதத்திலிருந்து செப, தப, தியானாதிகள் செய்பவர்கள் விட்டுணு சித்தியைப் பெறுவார்கள். திருக்கோணமலைக்கு அருகிலுள்ள கந்தசுவாமி மலையை எப்போதுந் தரிசிப்பவர்கள் சுப்பிரமணியருடைய பதவியைப் பெறுவார்கள்.

---

# மச்சேந்திர பருவதத்தின் வழியாகவே தற்காலத்திலுள்ளவர்கள் திருக்கோணமலைக்குச் சென்று சுவாமிதரிசனஞ் செய்துவருகிறார்கள்.

# மாவலிகங்கைச் சரித்திரம்

ஆதிகாலத்திலே, திருக்கைலாயமலையிலே, நவரத்தின சிங்கா சனத்தின் மீது சிவபெருமானும் உமாதேவியும் எழுந்தருளியிருக்கும் போது, உமாதேவி சிவபெருமானை நோக்கி, சுவாமி! தேவரீருடைய சடாமகுடத்தி னுள்ளே சத்தங் கேட்கிறது, யாது காரணமென்று வினவினார். சிவபெருமான் உமாதேவியைப் பார்த்து, வாராய் தேவியே! சடையிலே யாதுமில்லை. என் சிரசிலுள்ள சலத்தின் சத்தம் என்று சொல்லியருளிய போது, உமாதேவி பின்னும் உற்றுப்பார்க்கும் அளவில் ஒரு பெண்ரூபம் தோன்றியதைக் கண்டு ஐயம்கொண்டு சடாமகுடத்தை அவிழ்த்துப் பார்க்க எத்தனித்தார். அப்போது சடாமுடியில் இருந்த கங்கா தேவியானவள் பயப்பட்டு விந்து ரூபமானாள். அஃதுணர்ந்த சிவபெருமான் தலை சொறிவதுபோல் தனது திருக்கரத்தை சடையுள்வைத்து விந்து ரூபமான கங்காதேவியை நகத்தினால் எடுத்து தெளித்தார். கங்காதேவியானவள் இலங்கைக்கு உத்தரபாகத்தில் உள்ள லவண சமுத்திரத்திலே வந்துவிழுந்து பாதாளத்திலே போயிருந்து சிவபெரு மானை நோக்கி தோத்திரம் செய்துகொண்டு இருந்தாள். கங்காதேவி தோத்திரம் செய்யும் சத்தமானது சிவபெருமானுடைய திருச்செவிகளுக்கு கேட்டமையால் உடனே கங்காதேவியை அழைத்து, கங்கையே! எனக்கு அதிக பிரீதியும் அற்புதமுமான சிவனொளி பாதமலையில் உள்ள எனது இரு பாதத்தின் மத்தியிலும், நவக்கிரியிலும், தக்ஷணகைலாயத்திற்குப் பக்கத்திலும், திருக்கேதீஸ்வரத்திலும், கதிர்காமத்திலும், தர்மார்த்த மோக்ஷத்தை நமது அடியார்கள் அடையும்பொருட்டு போய் இருப்பாயாக என்று திருவாய் மலர்ந்தருளினார். அதைக் கேட்ட கங்கையானவள் அதிக மகிழ்ச்சி அடைந்து, சிவனொளிபாத மலையிலே உள்ள சிவபெருமானுடைய இருபாதத்தின் நடுவில் இருந்து மாவலிகங்கை எனவும், மாணிக்க கங்கை எனவும், காவேரி கங்கை எனவும் பெயர்கொண்டு சுபதினத்திலே பிரவா கிக்கத் தொடங்கினாள். இந்த மூன்று கங்கையிலும் மாவலிகங்கையானது அதிகபலத்தோடும் சத்தத்தோடும் நுரையும் குமிழியும் கொண்டு புண்ணிய விருக்ஷங்கள் கரையிலே சூழ்ந்துநிற்க வடக்குமுகமாகப் பிரவாகித்து திருக் கோணமலைக்கு வந்து மேற்குப் பக்கத்திலுள்ள குகையிலே தங்கிப் பின்பு வெளியே புறப்பட்டு, கிழக்குப் பக்கமாக சமுத்திரத்தில் பாயும். மாணிக்க கங்கையானது கிழக்கு முகமாக பிரவாகித்து கதிர்காமத்தை அடைந்து கிழக்குச் சமுத்திரத்தில் பாயும். காவேரி கங்கையானது மேற்கு முகமாகப் பிரவாகித்து திருக்கேதீஸ்வரத்தை பிரதக்ஷிணம் செய்துகொண்டு சமுத்திரத் திற்பாயும். இந்த மூன்று கங்கையும் அனேககிளைகள் கொண்டு பல நாமங் களைப் பெற்று #நதிகளாகவும், நதங்களாகவும் சமுத்திரத்தில் பாய்கின்றன.

# நதி - பெண்ஆறு, நதம் - ஆண்ஆறு

இலங்கையில் உள்ள கங்கைக்குள் மாவலிகங்கை அதிகம் விசேடம் உடையதாய் இருக்கிறது. சிவபெருமான் மாவலிகங்கையை உலக ரக்ஷகத் துக்காக உண்டாக்கினார். மாவலிகங்கையானது தக்ஷிணகைலாயமென்னும் சிரசு தொடக்கம் சிவனொளிபாதம் என்னும் கால்வரையும் வியாபித்து, ஒரு புருடவடிவாய் இருக்கிறது. மாவலி கங்கையைக் கண்ணினால் கண்டாலும், மனதினால் தியானித்தாலும், ஸ்நானம் செய்தாலும் போகம், மோக்ஷம் இரண்டும் கிடைக்கும். ஒருவன் நூறு யோசனைக்கு அப்பால் இருந்து இக்கங்கையை நினைத்தாலும், இதில் ஸ்நானம் செய்தவர்களைத் தீண்டி னாலும், அவன் அனேக பலன்களை அடைவான். இறந்தவர்களுடைய அத்தியை இக்கங்கையில் இட்டால் அவ்வத்தியானது எத்தனை வருடம் இருக்குமோ அத்தனை வருடகாலம் அவர்கள் சொர்க்க லோகத்தில் இருப்பார்கள். பூமியில் விழுகின்ற மழைத்துளிகளை கணக்கிட்டாலும் இக்கங்கையில் ஸ்நானம் செய்தவனுக்குக் கிடைக்கும் பலனை சொல்வது அரிதாகும்.

பகீரதி என்னும் கங்கை விட்டுணுவினுடைய பாதத்தில் நின்றும் உற்பத்தியானது போலவே, மாவலிகங்கை சிவபெருமானுடைய பாதத்தின் நின்றும் உற்பாத்தியாய் இருக்கின்றது. சித்திரை மாதத்து சித்திரை நக்ஷத்திரத்திலும்; வைகாசி மாதப் பூரணைத் திதியும், விசாக நக்ஷத்திரமும் கூடிய தினத்திலும்; ஆனி உத்தரத்திலும்; ஆடி மாதப் பூரநக்ஷத்திரமும் அமாவாசையும் கூடிய தினத்திலும்; ஆவணி மாத மூல நக்ஷத்திரமும் பானு வாரமும் கூடிய நாளிலும்; புரட்டாதி மாதத்திலே திருவோண நாள் கூடிய சனிக்கிழமையிலும்; ஐப்பசி மாதத்தில் சதய நாள் கூடிய சுக்கிர வாரத்திலும்; கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நக்ஷத்திரத்திலும்; மார்கழி மாதத்திலே திருவாதிரை நாளிலும்; தை மாதத்தே பூரணை கூடிய பூச நாளிலும்; மாசி மாதத்திலே பூர்வபக்ஷத்து சப்தமித் திதியிலும்; பங்குனி உத்தரத்திலும் அர்த்தோதயம், மகோதயம், பஞ்சபருவம், அயனம் சங்கிராந்தி, விஷப்புண்ணிய காலம், கிரகணகாலம் முதலான மற்றும் புண்ணிய காலங்களிலும் விதிப்படி சங்கற்பம் செய்து ஸ்நானம் செய்வார்க ளாயின் கொலை, களவு, கள்ளுண்ணல், குருநிந்தை, பொய் என்னும் பஞ்சமா பாதகங்களினால் உண்டான தீங்குகளெல்லாம் நீங்கி இம்மையிலே இந்திர போகத்தை அனுபவித்து மறுமையிலே முத்தி அடைவார்கள். இக்கங்கையிலே நீசன் ஸ்நானம் செய்வானாயின் மறு பிறவியிலே உயர் குலத்தில் வந்து பிறப்பான். தேவர்கள் ஸ்நானம் செய்தால் நல்ல பதவியைப் பெறுவார்கள். முனிவர்கள் ஸ்நானம் செய்தால் தவசித்தி அடைவார்கள். இராக்கதர்கள் ஸ்நானம் செய்வார்களாயின் தேவர்களாகப் பிறப்பார்கள். அரசர்கள் ஸ்நானம் செய்வார்களாயின் மறுபிறவியிலும் இராசரீகத்தைப் பெறுவார்கள். பிராமணர்கள் ஸ்நானம் செய்வார்களாயின் பிரமபதத்தை

பெறுவார்கள். வைசியர்கள் ஸ்நானம் செய்வார்களாயின் குபேரனைப் போலும் மிகுந்த செல்வத்தைப் பெறுவார்கள். சூத்திரர் ஸ்நானம் செய்வார்களாயின் மறுபிறவியிலே பிரமகுலத்திலே வந்து பிறப்பார்கள். விலங்கு சாதிகள் பக்ஷிசாலங்கள் ஸ்நானம் செய்யுமாயின் மறுபிறவியிலே மானுடராகப் பிறக்கும். அன்னதானம், சொர்ணதானம், கோதானம், பூதானம், கன்னிகா தானம், திலதானம், துலாபார தானம் முதலிய தானங்களை கொடுப்பத னாலும், பதினாலு உலகங்களிலுமுள்ள அறுபத்தாறுகோடி என்னும் கணக்கான தீர்த்தங்களிலே ஸ்நானம் செய்வதனாலும், நாலு வேதங் களையும் சாங்கோ வாங்கமாக அத்தியயனஞ் செய்வதினாலும், நைமி சாரணியம் புட்கரம் குருஷேத்திரம் காசிப்பிரயாகை மதுரை முதலிய புண்ணிய ஸ்தலங்களில் இருந்து நூறு வருடம் தவம் செய்வதினாலும் உண்டாகும் பலன்கள் இந்த மாவலிகங்கையிலே ஒருதரம் செய்யும் ஸ்நானத்தினால் உண்டாகும்.

# அகத்தியமுனிவர் சரித்திரம்

சகலபுவன சராசரங்கள் அனைத்தையும் ஈன்ற உலகமாதா வாகிய உமாதேவி இமயபருவதராசனுக்குப் பிள்ளையாகப் பிறந்து, திருக்கைலாசத் திலிருந்து யோகநிட்டை சாதிக்கும் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்து கொண்டிருக்கும் போது, இந்திராதி தேவர்கள் அனைவரும் சிவபெரு மானிடத்து வந்து சூரபதுமன் செய்யும் ஆக்கினைகளை விபரமாக முறையீடு செய்தார்கள். அப்போது சிவபெருமான் தேவர்களைப் பார்த்து, " தேவர்களே! இமயபருவதத்திருந்து நம்மை நோக்கித் தவசுசெய்யும் பர்வதவர்த்தனியை திருமணம் புணர்ந்து உங்களுக்கு இடுக்கண் செய்கின்ற சூரபதுமன் முதலிய அசுரர்களை எல்லாம் சம்மாரஞ் செய்யும்பொருட்டு ஒரு புத்திரனைத் தருவோம். நீங்கள் யாதுக்கும் அஞ்சாது போகக்கடவீர்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன் பின்பு சிவபெருமான் இடபதேவரைப் பார்த்து நாம் திருமணத்தின் பொருட்டு இமயபருவதத்துக்கு எழுந்தருள வேண்டி இருப்பதால் பிரம்மா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களுக்கும் ரிஷிக் கூட்டங்களுக்கும் தெரிவித்துவரக் கடவாய் என்று சொல்லி அருளினார். அதைக்கேட்ட இடபதேவர் சிவபெருமான் சொல்லியருளிய பிரகாரம் சகலருக்கும் அறிவித்தார். அஃதறிந்த தேவர்களும் முனிவர்களும் மற்றும் கணத்தவர்களும் திருக்கைலாசத்திலே வந்து கூடினார்கள். அவ்வேளை வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. அதுகண்ட தேவர்கள் எல்லாம் மிகவும் அச்சம் கொண்டு சிவபெருமான் முன்பு சென்று சுவாமி! உத்தரம் தாழ்ந்து தக்ஷணம் உயர்ந்த படியால் எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமும் அச்சமும் உண்டாகின்றது. இந்த ஆபத்தை தேவரீர் விலக்கி அருள வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் விட்டுணுவை நோக்கி நமது திருமணக்கோலம் காணும் பொருட்டு, சப்த சமுத்திரங்களையும் குடங்கையில் அடக்கிய அகத்திய முனிவன் இவ்விடம் வந்தமையால் தான் உத்தரம் தாழ்ந்து தக்ஷணம் உயர்ந்தது. ஆகையால் அம்முனிவனை நம்மிடம் அழைத்து வாரும் என்று சொல்லி அருளினார். அதைக் கேட்ட விட்டுணு மூர்த்தி சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய பிரகாரம் செய்து முடித்தார். அப்போது சிவபெருமான் அகத்திய முனிவனை நோக்கி, பூமி அந்தரம் சுவர்க்கம் என்னும் மூன்று உலகத்திலும் உனக்கு மேற்பட்ட முனிவரை யாம் கண்டதில்லை. நீ இப்போது நமது திருமணக்கோலம் காணும் பொருட்டு இவ்விடம் வந்தமையால் உத்தரம் தாழ்ந்து தக்ஷணம் உயர்ந்துவிட்டது. ஆகையால் நீ இவ்விடம்விட்டு உனது வாசஸ்தலமான பொதிகைமலைக்குப் போய்விடவேண்டும். ஆனால் தக்ஷணகைலாயத்துள்ள மாவலிகங்கைக்கு அருகான கரசயம் பதியிலும் #மறைசைப் பதியிலும்

# மறைசைப்பதி - வேதாரணியம்

நமது திருமணக்கோலக் காட்சி காணப்பெறுவாய் என்று திருவாய்மலர்ந் தருளினார். அதுகேட்ட அகத்தியமுனிவர் மிகுந்த சந்தோஷத்துடன் அவ்விடம் விட்டு நீங்கினார். அப்போது உத்தரம் தக்ஷணம் இரண்டும் தராசு நுனிபோன்று பேதம் இல்லாது இருந்தன. அதன் பின்பு சிவபெருமான் திருமணக்கோலம் கொண்டு சகல தேவர்களும் புடைசூழ்ந்துவர இமயபருவதத்துக்குச் சென்று பர்வத இராசகுமாரியைத் திருமணம் புணர்ந்து தேவி சமேதராக இடபாரூட ராகி திருக்கைலாயத்தில் வீற்றிருந்து அருளினார்.

பின்பு அகத்தியமுனிவர் தக்ஷணதிசைக்குப் போகும் போது ஆகாயம் வரை அளாவிநின்று தவத்தவர்களுக்கு நிட்டூரஞ் செய்யும் கிரவுஞ்சனெனும் அசுரனுக்கு சாபமிட்டும், அப்பாற் சென்று தமக்கு வஞ்சனைசெய்த வில்வலன், வாதாவி என்னும் இருவரையும் கொன்றும், இன்னும் அனேக அற்புதங்களை உலகத்தவர்கள் காணும்படி செய்தும், காசி முதலிய புண்ணிய ஸ்தலங்களை தரிசித்துக்கொண்டும், ஈழநாடாகிய இலங்கையை அடைந்து உத்தரகைலாயத் திலே திருமணக் கொண்டாட்டம் இருப்பதால் தக்ஷணகைலாசமாகிய திருக்கோணமலையிலும் அக்கொண்டாட்டம் இருக்கும் ஆகையால் திருக் கோணமலைக்குச் சென்று கோணநாயகரைத் தரிசிக்க இது காலமல்லவென்று நினைத்துத் திருக்கோணமலைக்கு முக்காத வழியிலுள்ள கழனிமலையை அடைந்து சிவபெருமானை பூசைசெய்து கொண்டிருந்தார்.

அன்னாள் துவக்கம் கழனிமலைக்கு திரிகோண கண்டவரை என்னும் ஒரு நாமம் உண்டானது. அதன் பின்பு மாவலிகங்கையானது சிவனொளி பாத மலையிலிருந்து உற்பத்தியாகி சமனாசைலதத்தை வலப்பிரதக்ஷணஞ் செய்துகொண்டு திருக்கோணமலைக்கு வந்து கோணநாயகருடைய திருப் பாதங்களை விளக்கிச் செல்வதை அகத்திய முனிவர் கண்டு, இக்கங்கை மிகவும் பெருமை உடையதாய் இருப்பதால் இதிலே ஸ்நானம் பண்ண வேண்டும் என்று கருதி, மாவலிகங்கையை அடைந்து, தண்டு கமண்டலம் முதலியவற்றைக் கரையிலே வைத்து, கங்கையில் இறங்கி ஸ்நானம் செய்யும் போது, ஓர் அசரீரிவாக்கு அகத்திய முனிவருக்கு சொன்னதாவது: "முனிவனே! இந்த மாவலிகங்கைக்கு நிகரான தீர்த்தம் எவ்விடத்தி லாயினும் கிடைப்பது அரிது. ஆகையால் இக்கங்கையில் வந்து தீர்தமாடும் நமது அடியவர்கள் எப்போதும் நம்மைத் தரிசிக்கும் பொருட்டு, திருகோண மலைக்குத் தென்பக்கமாகவும் சிவனொலிபாதமலைக்கு வடபக்கமாகவும் மாவலிகங்கைக்குக் கிழக்குப் பக்கமாகவும் மிகுந்த பெருமிதங்களைப் பொருந்திய கரசையம்பதி என்னும் இடத்துக்குச் சென்று, அவ்விடத்திலே நம்மை நினைப்பாயயாக என்று சொல்லியது. அசரீரி வாக்குச் சொல்லிய யாவற்றையும் கேட்டு நின்ற அகஸ்திய முனிவர் ஆனந்த பரவசம் கொண்டு, சில நாழிகை அவ்விடத்தில் நின்று, கோணநாயகரை நோக்கி பலவாறான

தோத்திரங்களைச் சொல்லித் துதித்துக் கொண்டு, பின்பு கரசையம்பதியை அடைந்து, அவ்விடத்திலே விசுவகர்மாவை அழைத்து, அவனை நோக்கி, இவ்விடத்திலேயே விநாயகர், சிவபெருமான், உமாதேவி, சுப்பிரமணியர், சண்டேசுவரர் முதலிய தேவர்கள் எழுந்தருளி இருக்கும் பொருட்டு அலங் காரமான ஆலயங்களையும், இடபம், பலிபீடம், துவச ஸ்தம்பம் முதலிய வகைகளையும் சீக்கிரம் உண்டுபண்ணுவாயாக என்று சொன்னார். அதைக் கேட்ட விசுவகர்மா கோணநாயகருடைய கிருபையினாலே விசித்திரமான ஆலயங்கள், மண்டபங்கள், திருமடைப்பள்ளி, முதலியவைகளை உண்டு பண்ணி, தேவர்களும் அதிசயிக்கும்படியாக ஐந்து திருவீதிகளையும் உண்டு பண்ணினான். அதைக்கண்டு அகத்தியர் மிகுந்த சந்தோஷம் அடைந்து, சிவலிங்கப்பெருமான் முதலிய தேவர்களை அவ்வவர்களுக்கு உண்டு பண்ணப்பட்ட ஆலயங்களிலே தாபித்து, பஞ்ச சுத்தி செய்து, மகுடா கமத்திற் சொல்லிய பிரகாரம் மாவலிகங்கைத் தீர்த்தத்தினாலே மகாநியாச பூருவமாக அபிஷேகம் செய்து, சோடச உபசாரங்களால் பூசித்து, சிவலிங்கப் பெருமானுக்கு தீர்த்தேஸ்வரன் என்னும் திருநாமமும் கொடுத்து, சாட்டாங்க பூருவமாக நமஸ்கரித்து, தோத்திரம் செய்து கொண்டு இருந்தார்.

அப்போது சிவபெருமான் பாலவயது உள்ளவராயும், சந்திரனை அணிந்தவராயும், உமாதேவி சமேதராக, திருமணக்கோல வடிவுகொண்டு, ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கத்தின் நின்றும் பிரசன்னப்பட்டு அகத்திய முனிவருக்கு காட்சிகொடுத்தார். அதைக்கண்ட அகத்திய முனிவர் ஆனந்த பரவசம் கொண்டு உரோமஞ் சிலிர்ப்ப, ஆனந்த அருவி சொரிய பலதரமும் சிவபெருமானுடைய திருப்பாதங்களை நமஸ்கரித்து எழுந்து, சுவாமி! இந்தக் கோலத்துடன் இவ்விடத்திலே சதாகாலமும் இருந்து, மாவலிகங்கையில் வந்து தீர்த்தமாடி தேவரீரையும் தரிசிக்கின்றவர்களுக்கு கிருபைபாலித்து அருளவேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்போது சிவபெருமான் அகத்திய முனிவரைப் பார்த்து, "முனிவனே! நீ கேட்டபிரகாரம் வரம் தந்தோம்" என்று திருவாய் மலர்ந்தருளி #சிவலிங்கத்தே மறைந்தருளினார். அதன்பின் அகத்தியமுனிவர் திருகோணமலையை அடைந்து பாவநாசத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கோணநாயகரையும் அன்னமென்னடை அம்மையையும் தரிசித்துக்கொண்டு அவ்விடம்விட்டுப் புறப்பட்டு திருக்கேதீஸ்வரத்தை அடைந்து பாலாவிக் குளத்தில் ஸ்நானம் செய்து கேதீஸ்வரரையும் கௌரி யம்பிகையையும் தரிசித்து, அவ்விடத்திலே ஸ்ரீ கண்டரென்னும் நாமமுள்ள ஓர் இலிங்கத்தைத் ஸ்தாபித்துச் சிலநாள் அவ்விடமிருந்து பூசைசெய்து பின்பு சிவபெருமானிடத்தில் வேண்டிய வரங்களையும் பெற்றுக்கொண்டு சோழ நாட்டையடைந்து வேதாரணியத்திலும் சிவபெருமானுடைய திருமணக் கோலக் காட்சியைத் தரிசித்துக்கொண்டு பொதியமலைக்குப் போனார்.

# அகத்தியரால் தாபிக்கப்பட்ட சிவலிங்கம் தற்காலம் அகத்தியர் ஸ்தாபனம் என வழங்கிவருகின்றது.

# இராவணன் சரித்திரம்

தேவலோகம்போல் விளங்கும் இலங்காபுரியை அரசுசெய்த விச்சிரவசு என்பவனின் புத்திரனாகிய தசக்கிரீவன் பதினாயிரவருட காலம் அருமையான தவஞ்செய்து, மிகுந்த வரங்களைப் பெற்றுத் தனது தமையனாகிய குபேர னிடத்தில் இலங்கை அரசுரிமையைக் கைக்கொண்டு, பாவ புண்ணியங் களைச் சிறிதுங் கவனியாமல் தேவர்களுக்கு மிகுந்த நிட்டூரங்களைச் செய்து, இராச்சியபரிபாலனஞ் செய்துவரும் நாளையில், ஒருநாள் தாயாகிய கைகேசி நெற்குற்றிக் கொண்டு நிற்பதைத் தசக்கிரீவன் கண்டு, தாயே! பூமி அந்தரம் சுவர்க்கம் ஆகிய மூன்று உலகங்களும் அஞ்சும்படி நான் அரசு செய்பவனாயிருக்க நீ யாது காரணத்துக்காக நெற்குற்றுகின்றாயென வினவினான். அப்போது கைகேசி மகனை நோக்கி, மகனே! சிவலிங்கப் பெருமான் பேரிலே நான் கொண்டிருக்கும் அன்பு மிகுதியினாலே அவருடைய திருவுருவத்தை மாவினாலே நாளொன்றுக்கு ஆயிரஞ்செய்து, மாவலி கங்கைக் கரையிலே வைத்துப் பூசைசெய்து, பின்பு அவ்விலிங்கங்களைக் கங்கையில் விடுவது வழக்கமாதலால், நாளைக்கு மா இல்லாததினால் நெல் குற்றுகின்றேனென்று சொன்னாள்.

அதைக்கேட்ட தசக்கிரீவன் மிகுந்த கோபங்கொண்டு தாயைப் பார்த்து, எட்டுத் திக்கிலும் வசிக்கின்ற அட்ட கசங்களுடைய கொம்புகளை அடிகளோடு முறித்தெறிந்த பராக்கிரமசாலியாகிய நான் உனக்குப் பிள்ளையாக இருக்க, நீ சிவலிங்கப் பெருமானைப் பூசிப்பதற்கு அவரைப் போல மாவினால் உருவஞ்செய்ய வேண்டியதென்ன? இதோ நான் திருக் கைலாசமலைக்குச் சென்று சிவபெருமானிடத்தில் ஓர் இலிங்கம் வாங்கி வந்து தருகிறேன். நீ வைத்துப் பூசை செய்வாயாக என்று சொல்லி, ஒரு சிங்காரமான தேரில் ஏறி உத்தரகைலாயத்தை அடைந்து சிவபெருமானை நோக்கிப் பிரார்த்தித்தான். அப்போது சிவபெருமான் ஒரு வயோதிப பிராமண வடிவம் கொண்டு வந்து, தசக்கிரீவனுக்கு ஒரு சிவலிங்கத்தைக் கையில் கொடுத்து மறைந்தருளினார். தசக்கிரீவன் சிவலிங்கத்தைக் கொண்டு திரும்பி வரும்போது, தேவர்கள் கண்டு, விட்டுணு மூர்த்தியிடத்தில் போய், "சுவாமி! தசக்கிரீவன் சிவபெருமானிடம் சிவலிங்கம் வேண்டிக்கொண்டு போகிறபடியால் எந்தக் காலத்திலாவது அவனை நாங்கள் வெல்லுவது கூடாது. ஆகையால் தேவரீர் இதற்கு ஓர் உபாயம் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அதைக் கேட்ட விட்டுணுமூர்த்தி, உடனே வருணபகவானை அழைத்து, "வருணனே! நீ தசக்கிரீவனுடைய வயிற்றில் பிரவேசித்து சலப்பாதயை அதிகரிக்கச் செய்வாய்" என்று சொல்லி அருளினார். அதன் பின்பு, விட்டுணு மூர்த்தி விநாயகரிடம் சென்று நடந்த சம்பவங்களை விபரமாகச் சொல்லி

நீர் இப்போது தசக்கிரீவன் முன்பு சென்று அவன் கொண்டு போகின்ற சிவலிங்கத்தை எந்தவிதத்திலும் வாங்கி பூமியில் வைப்பீராக என்று சொல்லி அனுப்பினார். அப்போது விநாயகர் ஒரு பிராமணர் வடிவம் கொண்டு தசக்கிரீவன் முன்பு போனார். அவ்வேளையில் தசக்கிரீவனுக்கு சலஉபாதை அதிகரித்ததனாலே அவ்விடத்தில் நின்ற பிராமணரை நோக்கி, ஐயரே! நான் சலபாதைக்குப் போய்வரும் வரைக்கும் இந்த சிவலிங்கத்தை வைத்துக் கொள்ளும் என்று சொல்லி பிராமணர் கையில் கொடுத்துவிட்டுப் போனார். அப்போது வருணண் தசக்கிரீவனுக்கு சலபாதையை மிகவும் அதிகரிக்கும்படி செய்தான். அதனால் தசக்கிரீவன் விரைவில் வராது தாமதித்தான். நெடு நாழிகை வரைக்கும் தசக்கிரீவன் வராததைக் கண்ட விநாயகர் சீக்கிரமாக #சிவலிங்கத்தை பூமியில் வைத்து விட்டு மறைந்தருளினார். பின்பு தசக்கிரீவன் வந்து பார்க்கும் போது பிராமணன் இல்லாததினால் நெடு நாழிகையாகத் தேடித் திரிந்தான் அப்போது ஒரு பெரிய ஆலயமும் அதன் உள்ளாக தான் கொண்டு வந்த சிவலிங்கமும் இருப்பதைக் கண்டு மிகுந்த ஆச்சரியம் அடைந்தான். அதன் பின்பு தசக்கிரீவன் மறுபடியும் திருக்கைலாசத்துக்குச் சென்று சிவபெருமானிடம் ஒரு சிவலிங்கம் வாங்கிக் கொண்டு வரும் வழியிலே, விநாயகர் ஒரு சிறுபிராமணப் பிள்ளை வடிவத்தோடு தசக கிரீவனுக்கு எதிராகப் போனார் அவ்வேளை வருணன் தசக்கிரீவனுக்கு சலபாதை அதிகரிக்கும்படி செய்தான். அப்போது, தசக்கிரீவன் பிராமணப் பிள்ளையைக் கண்ட மாத்திரத்திலே அதிக சந்தோஷங்கொண்டு பிராமணப் பிள்ளையை நோக்கி, ஐயரே! நான் சலபாதைக்குப் போய்த் திரும்பி வரும் வரைக்கும் இந்தச் சிவலிங்கத்தைப் பூமியில் வையாமல் உமது கையிலே வைத்துக்கொள்ளும் என்று சொன்னான். அப்போது, பிராமணப்பிள்ளை தசக் கிரீவனை நோக்கி, நான் சிறுபிள்ளையாகையால் நெடுநேரம் வரைக்குங் கையிலே வைத்துக்கொள்ள மாட்டேன். ஆனால் மூன்று தரம் உன்னை அழைப்பேன். நீ வராதிருந்தால் பூமியிலே வைத்துவிடுவேனென்று சொல்லத் தசக்கிரீவனும் அதற்குச் சம்மதித்துப் பிராமணப்பிள்ளை கையிற் சிவலிங்கத்தைக் கொடுத்துவிட்டுச் சலபாதைக்குப் போய் உட்கார்ந்தான். அவன் போனவுடனே பிராமணப் பிள்ளை மூன்று தரம் அழைத்தும் வராததி னால், பூமியிலே பள்ளமான ஒரு இடத்தில் சிவலிங்கத்தை வைத்தார். தசக்கிரீவன் திரும்பி வந்து பார்த்த போது சிவலிங்கம் பூமியிலே இருப்பதைக் கண்டு அதிக கோபங்கொண்டு, தனது இருபது கைகளினாலும் இலிங்கத் தைத் தூக்கினான். அந்த *இலிங்கம் தூக்கப்படாமல் பசுவின் காதுபோலக்

# விநாயகராற் பூமியில் வைக்கப்பட்ட சிவலிங்கம் எழுந்தருளியிருக்குந் தலத்துக்கு வைத்திய நாதம் என்று பெயர் வழங்கிவருகின்றது. அந்தத்தலம் காசிக்கப்பாலுள்ளது.

* இலிங்கம் பசுவின் காதுபோலக் குழைந்ததினால் அந்தத் தலத்துக்கு கோகர்னமென்றும், அந்த லிங்கத்துக்கு கபாலலிங்கம் என்றும் பெயருண்டாகி வழங்கிவருகின்றது. கோகர்னமென்னும் ஸ்தலம் துளுவநாட்டிலுள்ளது.

குழைந்தது. அதைக்கண்ட தசக்கிரீவன் அதைவிட்டு பின்னும் சிவலிங்கம் வாங்கும் பொருட்டுத் திருக்கைலாசத்துக்குப் போகும்வழியில், விட்டுணு மூர்த்தி ஒரு வயோதிகப் பிராமணவடிவங் கொண்டு தசக்கிரீவன் முன்வந்து, நீ யார்? எங்கே போகின்றாய்? என்று வினவினார். அப்போது தசக்கிரீவன், பிராமணரை நோக்கி ஐயரே! நான் இலங்காபுரியை அரசு செய்யும் அரசன். என் பெயர் தசக்கிரீவன். சிவபெருமானிடத்திலே சிவலிங்கம் வாங்கும் பொருட்டு கைலாசத்துக்குப் போகிறேன் என்று சொன்னார். அதைக் கேட்ட பிராமணர், தசக்கிரீவனைப் பார்த்து, அரசனே! உம்முடைய புத்தி நன்றா யிருக்கிறது! ஏனெனில் நீ அரசுசெய்யும் இலங்காபுரிக்கு உத்தரபாகத்தில் தக்ஷணகைலாயம் இருக்கின்றது, அவ்விடத்திலுள்ள இலிங்கங்கள் மகா விசேஷமுடையன. அதில் ஒரு இலிங்கத்தை நீ பெற்றுக் கொள்ளாமல், இவ்வளவு பிரயாசப்பட்டு உத்தர கைலாசத்துக்கு வருவானேன்? என்று சொன்னார். அதைக்கேட்ட தசக்கிரீவன், அதிக சந்தோஷங்கொண்டு, தனது தேரிலேறி விரைவாகச் செலுத்திக்கொண்டு தக்ஷணகைலாயத்துக்கு வந்து, வடக்குத் திக்கிலே தேரை நிறுத்தி, இறங்கி வந்து கோணநாயகர் எழுந்தருளி யிருக்கும் ஆலயவாயிலில் நின்று பலவாறான தோத்திரங்களைச் சொல்லிப் பிரார்த்தித்தான். அவ்வாறாக நெடுநேரம் வரையிலுங் கோணநாயகரைப் பிரார்த்தித்தும் இலிங்கம் கிடையாததினால், மிகுந்த கோபங்கொண்டு, தக்ஷணகைலாய மலையின் கீழ் இறங்கிவந்து தனது இருபது கைகளினாலும் கைலாயமலையைக் கட்டிப்பிடித்து, பாறும்படி அசைத்தான். அவ்வேளை கைலாயபருவதமானது சற்றாயினும் அசையாதிருந்தது. அதைக்கண்ட தசக்கிரீவன், உக்கிரகோபம் உடையவனாகி மலையடியினின்று வெளியே வந்து, கையிலிருந்த வாளினால் பருவதத்திற்குத் தெற்குப் பக்கத்தில் ஓங்கி வெட்டினான். அப்போது பருவதத்தில் ஒரு சிறுதுண்டு உடைந்து மேற்குப் பக்கலிற் போய்விழுந்தது. வாளும் இரண்டு துண்டாக முறிந்தது. அதன் பின்பு, கைலாசமலையின் கீழாக இறங்கித் தனது இருபது புயங்களி னாலுந் தூக்கினான். தசக்கிரீவன் கைலாச பருவதத்தை வெட்டித் தூக்கியபோது. அந்த அதிர்ச்சியினால், இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்னும் சப்தகுல பருவதங்களும்; வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க் கோடகன் என்னும் அட்ட நாகங்களும்; ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பபந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் என்னும் அட்ட கசங்களும்; இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் அட்டதிக்குப் பாலகர்களும் தங்கள் இருப்பிடம்விட்டு அசைவுகொண்டார்கள். சப்த சமுத்திரங்களும் கொந்தளித்தன. பதினாலு உலகங்களும் நடுங்கின. பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்களும் அச்சமுற்றார்கள். தக்ஷண கைலாசபருவதத்திலே எழுந்தருளியிருக்கும் அன்னமென்னடையம்மையுந் துணுக்குற்றுக் கோணநாயகரைத் தழுவி

யணைத்தாள். அப்போது கோண நாயகர், புன்சிரிப்புக் கொண்டு, தேவியைப் பார்த்து, "பெண்ணே! அஞ்சாதிருக்கக் கடவாய்!" என்று திருவாய்மலர்ந் தருளினார். பின்பு கோணநாயகர் வீராசன முறையாக இருந்து, தமது திருப்பாத்தின் பெருவிரலினால் கைலாயமலையை ஊன்றினார். அப்போது கைலாயமலையானது, தசக்கிரீவனை நசுக்கியது. அதனால் அவனுடைய பத்துவாயிலுமிருந்து இரத்தங் கொப்பளிக்க உரத்த சத்தமிட்டுக் கொண்டு சமுத்திரத்துக்குள்ளாக அமிழ்ந்தினான். அவ்வேளை தேவர்களெல்லாம் மனமகிழ்ச்சிகொண்டு, தசக்கிரீவன் மாண்டுபோய்விட்டான். இனி எங்களுக் குண்டான அச்சமும் நீங்கியது என்று சொல்லி அவன் ஏறிவந்த தேரையுஞ் சமுத்திரத்துள் அமிழ்த்தி, புட்பமாரிபெய்து ஆனந்தக் கூத்தாடி இன்பசமுத் திரத்தில் மூழ்கியிருந்தார்கள்.

சிலகாலஞ் சென்றதன்பின் தசக்கிரீவன் சமுத்திரத்துளிருந்து வெளியே வந்து கோணநாயகர் எழுந்தருளியிருக்கும் ஆலயத்துக் கோபுரவாயிலில் நின்று, "சுவாமி! நாயினுங் கடையேனாகிய நான் ஆணவமிகுதியினாற் செய்த குற்றங்களைப் பொறுத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். பின்பு தனது தலையிலொன்றைத் திருகி, அதையொரு சுரைப்பத்தரை யாகவும், கையிலொன்றை முறித்து அதிலுள்ள எலும்புகளைத் தடியாகவும், விரல்களை முறுக்காணிகளாகவும், நரம்புகளைத் தந்திகளாகவும் சேர்த்து ஒரு வீணையாகச் செய்து, அவ் வீணையைக் கையிலேந்திக்கொண்டு கோபுரவாயிலில் நின்று, இசைக்குற்றம், உடற் குற்றம், பாடற்றொனிக்குற்றம், யாவும் நீக்கிச் சாமவேதத்தை இன்னிசையாகப் பாடினான். அப்போது இனிமையான இராகத்துடன் பாடுவதைப் பிடியன்னமென்னடை திருச்செவி சாய்த்துக் கேட்டு, மனமகிழ்ந்து, சுவாமியைநோக்கி, கோபுரவாயிலில் நின்று இனிமையான இராகத்துடன் பாடுகின்றவன் யாவனென்று கேட்க, கோணநாயகர் இடபதேவரைப் பார்த்து, கோபுரவாயிலில் நின்று பாடுகின்ற இராவணனை எனக்கு முன்பாக அழைத்து வருவாயாக என்று கட்டளை யிட்டார். அப்படியே இடபதேவர் இராவணனிடஞ் சென்று, அழைத்தபோது, இரத்தஞ் சிந்திய முகங்களோடுங் குறுகிய கரத்தோடும் வீணா தண்டத்தைத் தோளிலே சாத்திக்கொண்டு, சுவாமியின் முன்வந்து திருப்பாதங்களை வணங் கினான். அப்போது கோணநாயகர் திருவுளமிரங்கி, குறைந்த அவயவங்க ளெல்லாவற்றையும் பின்பு உண்டாகும்படி செய்து, ஒரு வாளும், தேரும் கொடுத்து, ஓர் இலிங்கமும் ஈந்து, இலங்காபுரிக்குப் போகும்படி விடை கொடுத்தார். இராவணன் பின்னும் பலதரஞ் சுவாமியுடைய திருவடிகளை நமஸ்கரித்துக்கொண்டு போனான்.

# விட்டுணுமூர்த்தி சரித்திரம்

இராவணன் இலிங்கத்தையுங் கையிலேந்திக்கொண்டு வரும்போது, விட்டுணுமூர்த்தி ஒரு பிராமண வடிவத்துடன் திருக்கோணமலைச் சாரல் வழியாகப் போனார். அப்போது இராவணன் பிராமணரைக் கண்டு முனிவரே நீர் யார்? எங்கிருந்து வருகின்றீர்? எவ்விடம் போகின்றீரென வினவினான். முனிவர் அதற்கு உத்தரமாக: நான் இப் பூலோகத்தில் உள்ள சிவஸ்தலங் களைத் தரிசித்துக் கொண்டு, கோணநாயகர் எழுந்தருளியிருக்கும் திரி கோணாசலத்தைத் தரிசிக்கும் பொருட்டு இலங்காபுரி மார்க்கமாக வருகிறேன் என்றார். அதைக்கேட்ட இராவணன், ஐயா! நீர் இலங்காபுரி மார்க்கமாக வருகிறேனென்று சொன்னீரல்லவா? அவ்விலங்காபுரியில் ஏதேனும் விசேஷ சம்பவங்கள் உண்டா? நான் அறியும்படி சொல்ல வேண்டுமென்று கேட்டான். அப்போது முனிவர் இராவணனைப் பார்த்து, இலங்காபுரியை அரசு செய்யும் அரசனொருவன் உளனாம். அவன் சமுத்திரத்தில் வீழ்ந்துவிட்டான் என்பதைக் கேள்வியுற்ற அவனது தாயார் மனக்கவலையால் உயிர் துறந்துவிட்டாள். இதுதான் அவ்விடத்திலுள்ள் விசேஷ சம்பவம். வேறுயாதும் யான் அறியே னென்று சொன்னார். அந்தச் சொல்லைக் கேட்டவுடன் இராவணன் மயங்கிப் பூமியில் விழுந்து பெருமூச்செறிந்து புலம்பினான். அவ்வேளையில் முனிவர் இராவணனை நோக்கி, நீ யாது காரணத்துக்காகப் புலம்புகின்றாயென வினவ இராவணன், இறந்துவிட்டாளென்று நீர் சொல்லிய பெண் எனது தாய். நான் இலங்கையை அரசு செய்யும் அரசன். என் பெயர் இராவணன். எனது தாயாருக்காகவே இவ்விடம் வந்து மிகுந்த வாதனைகளெல்லாம் அனுபவித்து கோணநாயகரிடத்தில் இவ்விலிங்கத்தை வாங்கினேன். நான் இலங்காபுரிக்குப் போவதற்கு முன்பாக எனது தாயார் இறந்துவிட்டபடியால் இச் சிவலிங்கத்தை யான் இனி என்ன செய்ய வேண்டும்? என்று முனிவரைக் கேட்டான். முனிவர் அதற்கு உத்தரமாக, நீ உனது தாயார் இறந்துவிட்டா ளென்னுந் துக்கத்தினாற் புலம்புகின்றாய். ஆனாற் கையிலே சிவலிங்கத்தை வைத்துக் கொண்டு அழுவது தகுதியல்ல, அவ்விலிங்கத்தை என்கையிலே தருவாயாக என்று சொன்னார். இராவணனும் அதற்கிசைந்து சிவலிங்கத்தை முனிவர் கையில் கொடுக்க, அவர் அதை வாங்கி, திரிகோணாசலத்துக்கு நிருதி திக்கில் வைத்துவிட்டு, பின்பு இராவணனை நோக்கி, பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

கேளும் இராவணா! பூமியிலே, பிறப்பதும் இறப்பதும் அவரவர் வினைப் பயனின்படியன்றி வேறொன்றல்ல. தோற்றப்படும் பொருட்களெவையோ அவையாவும் தோற்றிய விடத்திற்றானே பின்னும் போய் ஒடுங்கும். நீர் மேற் குமிழி போலவும், ஆகாயத்தின் மின் போலவும் உண்டாகி மறைகின்ற

இவ்வுடம்பை மெய்யென்றுணர்வது தப்பிதம். தாய், தந்தை, மனைவி, மக்கள் முதலிய உறவினர்கள் எல்லாம் வினைப் போகத்தினால் வந்தவர்கள். அவர்கள் நமக்குத் துணையென்று அறிவுடையோர் ஒருபொழுதும் எண் ணார்கள். இறந்தவர்களுக்காகத் துக்கிப்பது மடைமையே அன்றிப் பிறி தொன்றல்லவென்று பலவாறான தேற்றரவைச் சொல்லி, அவனுடைய துக்கத்தை ஒருவாறு சாந்தி செய்து, பின்னும் சொல்லுவார்: "இராசனே! உலகத்தில் அரிய தவங்களைச் செய்தும், புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கியும், சிவத்தலங்களை தரிசித்தும், விரதாதிகளை நோற்றும் புத்திரர் களைப் பெறுவது, தாங்கள் நற்கதி அடைதற்பொருட்டேயாம். அது எவ்வா றெனில், சிவபெருமான் அருளிய ஆகமங்களில் சொல்லிய பிரகாரம் கன்மாதி முதலிய ஈமக் கிரியைகளை புத்திரர் செய்து நிறைவேற்றுதலேயாம். ஆதலால் நீயுன் தாயாருக்குச் செய்யவேண்டிய கன்மாதியை இந்தப் புண்ணிய க்ஷேத்திரமாகிய திருகோணாசலத்தில் செய்து நிறைவேற்றுவா யானால் உனது தாய் நற்கதியடைவாள். இதில் நீ சற்றும் ஐயம் கொள்ள வேண்டாம்" என்று சொன்னார். அப்போது இராவணன் முனிவரை நோக்கி, ஐயா! இந்த திரிகோணாசலம் மிகுந்த மாட்சிமை உடைய புண்ணிய க்ஷேத்திரம் என்று சொன்னீரே, யாது காரணத்தினால் மகத்துவம் உடையது? அச் சரித்திரத்தை அடியேனுக்கு விபரமாகச் சொல்ல வேண்டும் என்று பிரார்த்தித்தான். அப்படியே சொல்லுகிறேன் என்று முனிவராக வடிவெடுத்து வந்த விட்டுணுமூர்த்தி தக்ஷணகைலாசமாகிய திரிகோணாசல மான்மியங் களைச் சொல்லத் தொடங்கினார்.

"கேளும் இராவணா! இந்தத் திரிகோணாசலத்தின் மகத்துவங்களை விபரமாகச் சொல்லுதற்கு யான் வல்லவனல்ல. ஆனால் சுருக்கமாகச் சொல்லுகிறேன். இந்த இலங்கை மண்டலத்தில் பொன்னுலக வாசிகளாகிய குபேரன் முதலிய தேவர்கள் இருந்து இராச்சியபரிபாலனம் செய்ததினால் இவ் விலங்கைக்கு ஈழமண்டலம் என்னுமோர் பெயர் உண்டாயிற்று. அன்றி யும், சிவபெருமான் திருவுளங்கொண்டு எழுந்தருளி இருக்கும் சிவஸ்தலங் களுள் ஒன்றாகிய, பாலாவியாறு சூழப்பட்ட மாதோட்ட மென்றழைக்கப்படும் திருக்கேதீஸ்வரத்தையும், அகத்தியமுனிவர் மாவலிகங்கைக் கரையில் பூசித்த சுயம்பு இலிங்கமானது எழுந்தருளியிருக்கும் கரசையம்பதியையும், சுப்பிரமணியக் கடவுளுடைய திருக்கரத்திலிருக்கும் வேலாயுதமானது பூர்வீகத்தில் பூமியின் கண் வந்து வீற்றிருந்த வெருகற்பதியையும், சுப்பிரமணியக் கடவுள் தேவிமாருடன் எழுந்தருளியிருக்கும் தலங்களுள் ஒன்றாகிய திருக்கோயில் என்னும் தலத்தையும் பூலோகத்தின் மத்தியில் இருந்து மேருமலையானது பிரகாசிக்கும் தன்மைபோல இலங்கை மத்தியில் மிகுந்த மாட்சிமை கொண்டு வளர்ந்தோங்கியிருக்குஞ் சிவனொளிபாத மலையையும், அகத்தியமுனிவர் திருமணக்கோலம் காண்பதற்கு தக்ஷண

கைலைக்கு வந்து சிவபெருமானைச் சிலகாலம் பூசித்துக்கொண்டிருந்த கழனி மலையையும், சுப்பிரமணியக் கடவுள் வள்ளிநாயகியைத் திருமணம் புணர்ந்து முத்துலிங்க தேசிகருக்குத் தரிசனங்கொடுத்துத் தடுத்தாண்டிமை கொணடு எண்ணிலாத் திருவிளையாடல்களைச் செய்திருக்கின்ற கதிரை மலையையும், மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகத்தை மாற்றிய தீர்த்தம் உண்டாகியிருக்கும் கீரிமலையையும், ஆறுமுகக் கடவுள் அடியார்களுக்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டு மனமுவந்து எழுந்தருளியிருக்கும் உகந்த மலையையும், இன்னும் அனேக விஷேச ஸ்தலங்களையும் தீர்த்தங்களையும் தன்னுள் அடக்கியிருக்கும் இலங்கை மண்டலத்தில், மிகுந்த மாட்சிமை பொருந்திய இத் திரிகோணாசலமானது எந்தத் தலத்திற்கும் மிக மேலான தாய் இருக்கும். பூலோகத்தில் உள்ள நவகோடி சத்திபீடத்தில் இது அதி சத்திபீடமென்று சொல்லப்படும். இத் திரிகோணாசலம் தக்ஷணகைலாயம் என்றும், இவ்விடத்திலுள்ள தீர்த்தம் பாவநாசத் தீர்த்தம் என்றும், இத் தலத்துக்குரிய விருக்ஷம் சுவேதகூவிளம் என்றும் சொல்லப்படும். இம்மலைச் சார்பில் வண்டுகளானது புஷ்பங்களில் மொய்த்திருப்பது போல, சதாகாலமும் தேவர்கள் முனிவர்கள் யோகிகள் யாவரும் வசிப்பார்கள். பிரம்மாவும் விஷ்ணுவும் காலம் தவறாமல் கோணநாயகருடைய திருவடிகளைப் பூசை செய்து கொண்டிருப்பார்கள். எண்ணுக்கடங்காத வைரவர்களும் காளிகளும் மலையைச் சுற்றி காவலாக நிற்பார்கள். மாவலிகங்கை இடைகலையாகவும், காவேரிகங்கை பிங்கலையாகவும், ஆகாயகங்கை சுழுமுனையாகவும் மலையின் கீழாகப்பாய்ந்து, கோணநாயகருடைய பாதங்களை விளக்கிச் செல்லும் பாதாளலோகத் தெல்லைவரைக்கும் ஊடுருவி, அண்டமுகட்டை யளாவி வளர்ந்து, சொல்லப்பட்ட மூன்று கங்கைக்கும் நடுவில் சமுத்திரத்தில் இருக்கும் இம்மலையானது, முக்கோணவடிவுடையதாக, பக்கங்களில் ஏழு குகைகளையும் நடுவிலோர் தமனியமண்டபத்தையும் தன்னுள் அடக்கி இருக்கும். மலைக்குக் கிழக்குத் திசையிலிருக்கும் குகைவழியாக ஆகாய கங்கை வரும். தெற்குத் திசையிலுள்ள குகையில் உருத்திரமூர்த்தி வசித் திருப்பார். மேற்குத் திசையிலுள்ள குகை விட்டுணு லோகத்துக்குப் போகும் பாதையாக இருக்கும். வடக்குத் திசையிலுள்ள குகையில் முனிவர்கள் இருந்து தவஞ்செய்வார்கள். தென்மேற்குத்திசையிலுள்ள குகையில் வெள்ளி யினால் செய்யப்பட்ட ஒருகோயில் உண்டு. அக்கோயிலை ஒரு பூதம் காத்திருக்கும். வடமேற்குத்திசையிலுள்ள குகை பாதாள லோகத்துக்குப் போகும் பாதையாக இருக்கும். வடகிழக்குத் திசையிலுள்ள குகை மோக்ஷத்தைக் கொடுக்கும் இடமாய் இருக்கும். இதில் முன் சொல்லப்பட்ட தமனியமண்டபத்தின் நடுவாக இருக்கும் ரத்தின சிங்காசனத்தில் உலகமாதாவாகிய பிடியன்னமென்னடை சமேதராகக் கோணநாயகர் எழுந்தருளியிருப்பார். இத் திரிகோணமலைக்கு சோமவாரம், சுக்கிரவாரம், சிவராத்திரி, திருக்கார்த்திகை, பங்குனி உத்தரம் முதலாக மற்றும்

புண்ணிய காலங்களிலும் வந்து அபிடேகஞ் செய்வித்து, வில்வத்தினால் அர்ச்சனை செய்விப்பவர்களும், திருவிளக்கேற்றி வைப்பவர்களும் இம்மையில் இந்திரபோகத்தை அனுபவித்து, மறுமையில் மோக்ஷவீட்டை பெறுவார்கள். சதாகாலமும் இம்மலையைத் தரிசிப்பவர்கள் பெறும் பேற்றை இன்னதென்று சொல்வதற்கு யாவராலுங்கூடாது. முற்சென்மங்களில் தாங்கள் செய்துகொண்ட தபோபலத்தினால் இத்தலத்தில் வந்து பிறப்பார்கள். இவ் விடத்தில் இறப்பவர்கள் யமதூதருடைய வாதனையின்றித் தேவர்கள் கொணரும் புஷ்ப ரதத்தில் ஏறிப்போய்க் கோணநாயகருடைய பாதநிழலை அடைவார்கள். இவ்விடத்தில் செய்யும் தான தருமங்கள் எல்லாம் ஒன்று, கோடியாக விருத்தியாகும். அனாசாரத்துடன் இம்மலைக்குச் செல்பவர்களும், இவ்விடத்திற் செய்யலாகாத குற்றங்களில் யாதாயினும் ஒன்றை செய்பவர்களும் இரௌரவாதி நரகங்களில் விழுந்து வருந்தி, பின்னும் எளிய பிறவிகளாகப் பிறந்து வருத்தமடைவார்கள். "அரசனே! இத் திரிகோணமலைக்கு மேலான தலமும், மாவலிகங்கைக்கு மேலான தீர்த்தமும், கோணநாயகருக்கு மேலான கடவுளும் பூமி, அந்தரம், சுவர்க்கம் என்னும் மூன்றுலோகங்களிலும் கிடைப்பதரிதாகும். ஆகையால் உனது தாயாகிய இராத்திரிகரிக்கு இந்தப் புண்ணிய தலத்தில் கன்மாதியைச் செய்து நிறைவேற்றுவாயானால் பெறுதற்கரிய மோக்ஷ வீட்டை அடைவாள். இது சத்தியம்" என்று இராவணனுக்கு திரிகோணாசல மான்மியத்தை முனிவராகிய விட்டுணுமூர்த்தி சொல்லி முடித்தார்.

# கன்னிகைத் தீர்த்தம் உற்பத்தியான சரித்திரம்

அப்போது முனிவர் சொல்லியவற்றை எல்லாம் இராவணன் கேட்டுத் தனது தாயாருக்கு இப்புண்ணிய ஸ்தலத்திற்றானே கன்மாதியைச் செய்து நிறைவேற்ற வேண்டுமென்னும் விருப்பங்கொண்டு, முனிவரை நோக்கி, ஐயா! நீரே ஆசாரியராகவிருந்து, தன் தாயாருக்குக் கன்மாதியைச் செய்து நிறைவேற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதைக் கேட்ட முனிவர், மிகுந்த சந்தோஷம் கொண்டு, அப்படியே செய்கிறேன் வாருமென்று இராவணனை அழைத்துக் கொண்டு, திரிகோணமலைக்கு மேற்குத் திக்கிலுள்ள கன்னிகா என்னுந் தலத்துக்குப் போய், அவ்விடத்தில் தனது கையிலிருந்த தண்டினால் ஏழிடத்தில் ஊன்றினார். முனிவர் ஊன்றிய ஏழு இடத்திலும் கடுஞ்சூடு, இளஞ்சூடு, கடுங்குளிர், இளங்குளிர் முதலிய ஏழுவகைப் பேதமுள்ள சலத்துடன் ஏழு கூவல்கள் உண்டாகின. அப்போது முனிவர் இராவணனை நோக்கி, இந்தப் பூங்காவனத்தில் தெய்வப் பெண்கள் எப்போதும் வந்து விளையாடிப் போவதால், இக்கன்னிகா மிகவும் விசேஷமான தலமாயிருக்கும். இத் தீர்த்தமானது, பாதாள லோகத்திலிருந்து உற்பத்தியானது. இது குமரித்தீர்த்தமென்று அழைக்கப்படும். இவ்விடத்தில், இறந்தவர்களுக்கு அந்தியேட்டி செய்து, இத்தீர்த்தத்திற் பிண்டமிடுவார் களானாற் கங்கை முதலிய நதிகளில் இறந்தவர்களடையும் கதியிலும் பெருமிதமான கதியை அடைவார்கள் என்று முனிவர் சொல்ல, இராவணன் முனிவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, சுவாமி! தேவரீரைப் பார்க்கினும் பெரியாரை யான் ஒருபோதுங் கண்டதில்லை. இனிக் கால தாமதஞ் செய்யாமற் கன்மாதியைச் செய்து முடிக்க வேண்டுமென்று சொல்லி, அந்தியேட்டிக்கு வேண்டிய பொருட்களை அழைப்பித்துக் கொடுத்தான். அப்போது முனிவர் ஒரு மண்டபம் கட்டுவித்து, அதிலிருந்து ஆகமவிதிப்படி அந்தியேட்டி செய்து, இராத்திரிகரியினுடைய உயிரை மகாசாலப் பிரயோகத்தினால் அழைத்து, முடியப்பட்ட புற்றளிகையி லாவாகித்து, தகனஞ்செய்து, மற்றும் கிரமங்களையும் முடித்துப் பின்பு, பாஷாணஸ்தாபனஞ் செய்து, இராவணனுடைய கையினால் எள்ளுந் தண்ணீருமிறைப்பித்து, பிண்டமிடுவித்து, பின்பு இராவணனை நோக்கி, இதோவிருக்கும் பாஷாணத்தை உனது புயத்தில் வைத்துப் போய்க் கன்னிகைத் தீர்த்தத்திற் போட்டு ஸ்நானஞ்செய்து வருவாயாக வென்றார். அப்படியே இராவணன் செய்து முடித்த பின்பு, விபூதிகொடுத்து, ஆசீர்வாதஞ் செய்து, இராவணனையும் அழைத்துக் கொண்டு திரிகோணாசலத்துக்கு வந்து, உனது தாயார் நற்கதியடைய வேண்டுமென்று நினைத்துக் கொண்டு கோணநாயகருடைய திருப்பாதங்களை நமஸ்கரித்துவாவென்று சொல்ல,

அவனும் அப்படியே செய்து முடித்தான். அதன் பின்பு முனிவர் இராவணனை அழைத்துக் கொண்டு மலையடிவாரத்தில் வந்து, பலவித தானங்களையும் கொடுப்பாயாகவென்று சொன்னார். அப்போது சிவபெருமான், பிரமா, விட்டுணுவாகிய முனிவர் இம்மூவரும் பிராமணவடிவத்துடன் இருந்து, முகிற்கூட்டங்கள் பொன்மழையைப் பெய்தாலொப்ப இராவணன் கொடுக்குந் தானங்களை வாங்கினார்கள். பின்பு அம்மூவரும் இராவணனை நோக்கி, உனது தாயார் மேலான பதவியைப் பெறுவாளென்று ஆசீர்வதித்து, தனித்தனியே ஒவ்வொருவரும் ஒவ்வொரு இலிங்கம் அவன் கையிற் கொடுத்து, இந்த மூன்று இலிங்கத்தையும் இம் மலையின் மூன்று கோணத் திலும் வைப்பாயாக வென்று சொல்லி மறைந்து போனார்கள். அப்போது, இராவணன் அதிசயமுற்று, கோணமலையை மும்முறை வலஞ்செய்து, கோணநாயகருடைய பாதங்களை நமஸ்கரித்து, மூன்று இலிங்கத்தையும் மூன்று கோணத்திலும் வைத்து, சுவாமியிடம் விடைபெற்றுத் தேரிலேறிக் கொண்டு இலங்காபுரிக்குப் போனான். முனிவர் அந்தியேட்டி செய்து தர்ப்பை சுட்ட போதில் இராத்திரிகரி பதைபதைத்து உயிர் துறந்தாள் என்பதை இராவணன் அறியாதவனாகி, இலங்காபுரியை அடைந்து, தனது தாயை நினைத்துச் சில நிமிஷங்களாகத் துக்கித்து, பின்பு தேற்றரவு கொண்டு இராச்சியபரிபாலனஞ் செய்திருந்தான்.

விட்டுணுமூர்த்தி உண்டாக்கிய ஏழு கூவல்களுந் தற்காலம் இருக்கின்றன. இவ்வூரவர்கள் அவ்விடத்திற்றானே அந்தியேட்டி செய்விக்கின்றார்கள்.

# இராமர் சரித்திரம்

பின்பு இராவணன் இலங்காபுரியை அரசு செய்து வரும் நாளில், அயோத்தியிலிருந்து அரசுசெய்த தசரதச் சக்கரவர்த்தியின் குமாரராகிய ஸ்ரீராமர் இலங்கைக்கு வந்து, துட்டகண்டராகிய இராவணன், கும்பகர்ணன், கவந்தன், கரணதூஷணன் முதலிய இராக்ஷதர்கள் எல்லோரையுங் கொன்று, விபீஷணனை இலங்கைக்கு அரசனாக்கி வைத்துப் பின்பு சீதாதேவி இலக்குமணன் முதலியவர்களோடு திரிகோணாசலத்தக்கு வந்து, கோண லிங்கரையும், பிடியன்னமென்னடையம்மையையும் தரிசித்து, வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொண்டு சென்றார்.

# வரராமதேவர் சரித்திரம்

அதன் பின்பு, சோழமண்டலத்திலிருந்து அரசுசெய்த மனுநீதி கண்ட சோழனின் வம்சத்தவராகிய வரராமதேவர் என்பவர், சிவபெருமான் பேரிற் கொண்ட அன்பு மிகுதியினால் அவரெழுந்தருளி இருக்குஞ் சிவத் தலங்க ளெங்குஞ் சென்று தரிசிப்பதிலும், சிவபூஜை செய்வதிலும், சிவசரித்திரங் களைக் கேட்பதிலும், சிவனடியார்களைச் சிவனெனப் பாவித்து அவர்களுக்கு அன்னம், சொர்ணம் முதலியன கொடுத்துப் பாதுகாப்பதிலும் தனது காலத்தைக் கழித்து வந்தார். அப்படியே செய்துவரும் நாளில், ஒருநாள் திரிகோணாசல மான்மியத்தைக் கேள்வியுற்று அவ்விடம் போய்ச் சுவாமியைத் தரிசிக்கவேண்டும் என்னும் விருப்பமுடையவராகி, மந்திரியை நோக்கி, நாம் திரிகோணாசல தரிசனம் செய்யவேண்டி இருப்பதால், ஆகவேண்டிய வைகளைத் திட்டஞ்செய்வாய் என்று கட்டளையிட்டார். அப்போது மந்திரி யானவன் பிரயாணத்துக்கு வேண்டியவைகளை யெல்லாஞ் செய்துமுடித்து அரசருக்கு அறிவிக்க, அவரும் மகிழ்ச்சிகொண்டு மந்திரி முதலான வர்களுடன் மாளிகையை விட்டுப் புறப்பட்டு வந்து, மரக்கலத்திலேறித் திரிகோணாசல சமுத்திரக் கரையில் வந்து இறங்கினார். அதன் பின்பு, வரராமதேவர் கோணமலையைத் தரிசித்துக் கொண்டு, பாவநாச தீர்த்தத்தில் இறங்கி ஸ்நானஞ்செய்து, அநுட்டானம் முடித்துக் கொண்டு, திருக்கோயிலுட் பிரவேசித்து, கோணலிங்கரையும் தேவியையும் கண்டு, சுவாமி! இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் தேவரீர் எழுந்தருளியிருப்பதை இந்தநாள் வரையிலும் யான் அறியாதிருந்தேனே என்று சொல்லி, ஆனந்த வருவி சொரிய, நாவானது குழற, பலவித தோத்திரங்களைச் சொல்லி, அட்டாங்க நமஸ்காரம் செய்து போனார். பின்பு, திரிகோணாசலத்தில் சிலகாலம் தங்கியிருந்து, நித்தியமுங் காலந்தப்பாது கோணநாயகருடைய பாதார விந்தங்களைப் பூசை செய்து வணங்கிவந்தார். ஒருநாள் கோண

நாயகர் வரராமதேவர் பேரில் திருவிழிக்கடைபரப்பி, அன்பனே! நீ இத் திரிகோணாசலத்தின் மகத்துவத்தையறிந்து, இவ்விடம் வந்து மிகுந்த பத்தியுடன் நாடோறும் நம்மைத் தரிசனஞ் செய்து வருகின்றாய். ஆனால், இனி உனது தேசத்திற்குச் சென்று, சத்துருக்களை வென்று, சகலசம்பத்துங் குன்றாமலிருந்து இராச்சிய பரிபாலனஞ் செய்து, பின்பு நமது பதவியில் வந்து சேருவாயாக என்று திருவாய்மலர்ந்தருளினார். அதைக் கேட்ட வரராமதேவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, பின்னுஞ் சிலநாளிருந்து சுவாமி தரிசனஞ் செய்துவந்தார். அதன் பின்பு, மிகுந்த திரவியங்களையும் பலவித இரத்தினாபரணங்களையும் மலையின் கீழாகவிருந்த ஒரு கூவலிற் சேமித்து, அத்திரவியங்கள் இவ்வளவென்றெழுதப்பட்ட ஒரு செப்பேட்டையும் அதில் வைத்துவிட்டு, திரிகோணாசலத்தைப் பிரதக்ஷணஞ்செய்து, கோணநாய கரிடம் விடைபெற்றுக்கொண்டு, சோழமண்டலம் போய்ச் சேர்ந்து, மனுநீதி குன்றாமல் கோணநாயகருடைய திருவடிகளை மறவாத சிந்தையுடன் இராச்சியபரிபாலனஞ் செய்துவந்தார். அக்காலத்தில், கோணநாயகருடைய அனுக்கிரகத்தினால் வரராமதேவரின் மனைவி கருப்பமுற்றுப் பத்துமாதமுஞ் சென்றதன்பின்பு, நவக்கிரகங்களும் கோணகேந்திரங்களில் ஆட்சி உச்சமாய் இருக்கச் சுபலக்கினத்தில் ஓர் ஆண்மகவைப் பிரசவித்தாள். அஃதறிந்த வரராமதேவர் பிராமணர் முதலியவர்களுக்கு அன்ன, சொர்ணங்களை அள்ளியிறைத்து, கோணநாயகருடைய கிருபையினால் நமக்குக் கிடைத்த பாக்கியம் இது என்று சொல்லி, குழந்தையை இருகையாலும் எடுத்து, பூரணசந்திரோதயம் போல விளங்கும் முகத்தை உற்றுப்பார்த்தார். அப்போது குழந்தையின் நெற்றியில் விலங்கின் கொம்பு போன்ற ஒரு சிறு கொம்பு உண்டாயிருப்பதைக் கண்டு, குளக்கோட்டன் என்னும் நாமந் தரித்து, மிகுந்த பரிவுடன் வளர்த்து வந்தார். ஐந்து வயது சென்றதன் பின்பு, வேதம் ஆகமம் ஸ்மிருதி முதலியவைகளையும், ரத, கஜ, துரக, பயிற்சிகளையும், தனுர்வித்தைகளையும் கற்பித்தார். அப்போது குளக் கோட்டன் மற்றும் நூல்கள் எல்லாவற்றினும் பதிநூல்களையே மிகுந்த கவனமாகப் படிப்பாராயினர். சில காலஞ் சென்றதன் பின்பு ஒருநாள் சூரிய குலத்து அரசர்களின் குருவாகிய வசிட்டமுனிவர் வரராமதேவருடைய கொலுமண்டபத்துக்கு வந்தார். அதுகண்ட அரசர் ஆசனம் விட்டெழுந்து போய், அவருடைய பாதங்களை வணங்கி, அழைத்து வந்து, ஓர் ஆசனத்தில் இருத்தி பின்பு தனது மனைவியையும் குளக்கோட்டனையும் அழைப்பித்து, முனிவருடைய பாதங்களை வணங்கிப் போகும்படி கட்டளையிட்டார்.

அவர்களும் அப்படியே செய்து, விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள். அதன் பின்பு, வசிட்டமுனிவர் வரராமதேவரை நோக்கி, கேளும் இராசனே! கோணநாயகருடைய கிருபையினால் உமக்குக்கிடைத்த புத்திரன் சாமுத்திரிக நூல்களிற் சொல்லப்பட்ட முப்பத்திரெண்டு லக்ஷணங்களும்

அமைந்தவனாகவும் வாலைப்பருவம் அடைந்தவனாகவும் இருப்பதனால், காலதாமதஞ் செய்யாமல் அவனுக்கு முடிசூட்டி, இராச்சியபாரத்தை ஒப்பு விக்கக் கடவாய் என்றார். அதுகேட்ட அரசர் மிகுந்த சந்தோஷம்கொண்டு, சுபமுகூர்த்தம் வைப்பித்து, பட்டணத்தை அலங்காரஞ் செய்வித்தார். பின்பு முகூர்த்தத் தினத்தில் இரத, கஜ, துரக, பதாதிகளும், மந்திரி, பிரதானிகளும் இருபக்கத்திலும் சூழ்ந்து நிற்க, சப்த சமுத்திரங்களும் ஏகோபித்து ஒலித்தாற் போலப் பேரிகை முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, அந்தணர் ஆசீர்வாதம் செய்ய, சகலவித ஆடம்பரத்துடன் வசிட்டமுனிவர் தனது இருகரத்தினாலும் நவரத்தினக் கிரீடத்தை எடுத்து குளக்கோட்டனுடைய சிரசில் தரித்து ஆசீர்வதித்தார். பின்பு, குளக்கோட்டமகாராசன் சிம்மாசனத்தை விட்டெழுந்து வசிட்ட முனிவரையும் தாய் தந்தையரையும் நமஸ்கரித்தான். அப்போது வசிட்டமுனிவர் குளக்கோட்டுமகாராசனுக்கு வாழ்த்துதல் செய்துகொண்டு தன் ஆச்சிரமம் போய்சேர்ந்தார். அதன் பின்பு, குளக்கோட்டு மகாராசன் இராச்சியப்பரிபாலனம் செய்துவரும் நாளையில் வரராமதேவர் இகவாழ்வை நீத்து கோணநாயகருடைய பாதாரவிந்தத்தை அடைந்தார். அப்போது குளக்கோட்டு மகாராசன் பிதாவுக்குச் செய்யவேண்டிய ஈமைக்கிரியைகள் அனைத்தையும் விதிப்படி செய்துமுடித்து, பின்பு பிரசைகள் எல்லாரும் புகழ்ந்து வாழ்த்தொலி செய்யும்படியாக எட்டுணையேனும் மனுநீதி குன்றாமல் செங்கோல் செலுத்தி இராச்சியபரிபாலனம் செய்துவந்தான்.

# குளக்கோட்டுமகாராசா திரிகோணாசலத்தில் திருப்பணி செய்துமுடித்த சரித்திரம்

பின்பு சோழமண்டலத்திலுள்ள ஒரு பிராமணர் சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் தலங்களெங்குந் திரிந்து சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு, திரிகோணாசலத்தக்கு வந்து, கோணலிங்கரையும் பிடியன்ன மென்னடையம்மையையுந் தரிசித்துப் பின்பு மலைச்சாரலில் இறங்கிப் படுத்து நித்திரைசெய்தார். அவ்வேளையில் ஒரு பூதமானது வந்து வேதியனைத் தட்டி எழுப்பி, நீர் யாவர்? எங்கிருந்து வருகிறீர் என்று வினவிற்று. அப்போது பிராமணர் பூதத்தை நோக்கி, நான் சோழ மண்டலத்தில் இருப்பவன் சிவதலயாத்திரை செய்துகொண்டு, கோண லிங்கரைத் தரிசிக்கும் பொருட்டு இவ்விடம் வந்தேன் என்று சொன்னான். அவ்வேளையில் பூதமானது பிராமணனை நோக்கிச் சோழமண்டலத்தை அரசு செய்துவந்த வரராமதேவர் இவ்விடம்வந்து சுவாமிதரிசனம் செய்துகொண்டு போகும்போது, இம் மலையின் கீழுள்ள ஒரு கூவலில் அனேக திரவியங்களை சேமித்துவைத்து அக்கூவலைப் பாதுகாத்துக்கொள்ளும்படி எனக்குக் கட்டளையிட்டுப் போனார். இச்சங்கதியை வரராமதேவருடைய பிள்ளைகளுக்குத் தெரிவிப்பாய் என்று சொல்லிப் போயிற்று. பின்பு, பிராமணர் சிலநாள் இருந்து கோண லிங்கரைத் தரிசித்து விடைபெற்றுக்கொண்டு, சோழமண்டலத்துக்குச் சென்று, பூதம் சொல்லிய யாவற்றையும் குளக் கோட்டு மகாராசனுக்கு விபரமாகச் சொன்னார். அப்போது குளக் கோட்டு மகாராசன் திரிகோணாசலத்தை தரிசனம் செய்யவேண்டும் என்று தம் உள்ளத்தில் தீர்மானித்து, மந்திரிகளை நோக்கி, யான் திரிகோணாசலத்துக்குப் போய் கோணநாயகரைத் தரிசித்து, அவ்விடத்தில் ஒரு திருப்பணியையும் செய்து முடிக்கவேண்டியிருப்பதால் அதற்கு வேண்டும் எத்தனங்கள் செய்து பிரயாணப்படுங்கள் என்று கட்டளை யிட்டான். அப்போது மந்திரிகள் மனநிறைவின்படி கையினால் செய்து முடிக்கும் திறமையுடையவர்களும், சிற்பநூல் வல்லவர்களுமாகிய உலககுரு ஆசாரி, சித்திரகுரு ஆசாரி, சதுர்வேதகுரு ஆசாரி, அட்சரகுரு ஆசாரி, வாமதேவகுரு ஆசாரி என்னும் ஐந்து ஆசாரிமார்களையும் அழைத்துக் கொண்டு, வேண்டிய திரவியங்களையும் ஒரு மரக்கலத்திலேற்றி, சேனைத்தளங்களையும் பிரயாணத்துக்கு ஆயத்தப்படுத்தி, அரசனுக்குத் தெரிவித்தார்கள். கோணநாயகருடைய பாதாரவிந்தம் என்னும் தெப்பத் தினால் பிறவியாகிய சமுத்திரத்தைக் கடக்கப்போகின்ற குளக்கோட்டு மகாராசன், மிகுந்த சந்தோஷம் கொண்டு, சகலரோடும் மரக்கலத்தில் ஏறி கோணநாயகர் எழுந்தருளியிருக்கும் சமுத்திரக்கரையில் வந்திறங் கினார். பின்பு குளக்கோட்ட மகாராசன் சிரசின்மேல் கூப்பியகையுடன்

கோணமலையை மும்முறை வலம்வந்து, பாவநாசத் தீர்த்தத்தில் இறங்கி ஸ்நானம் செய்துகொண்டு, திருக்கோயிலினுட் சென்று அட்டாங்க நமஸ் காரம் செய்து, அனற்படுமெழுகென மனமிகவுருக உரோமஞ்சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரிய பரவசம்கொண்டு, சிலநாழிகை வரைக்கும் கோண நாயகருடைய பாதங்களை வணங்கி நின்று, பின்பு தனது பிதாவாகிய வரராமதேவர் பொன் நிரப்பி வைத்திருக்கும் கூவலை நாடிப்போனார். அப்போது, பூதமானது எதிர்கொண்டு வந்து, இராசனே! உமது பிதாவானவர் இக்கூவலில் மிகுந்த திரவியங்களைச் சேமித்துவைத்து, இச்செப்பேட்டையும் என்கையில் தந்து, காவலாக வைத்துப் போனார். ஆகையால் இத்திரவி யத்தையும் செப்பேட்டையும் ஏற்றுக்கொள்ளுமென்று சொல்லி ஒப்பித்தது. அதன் பின்பு, குளக்கோட்டு மகாராசன் தனது முதன் மந்திரியை நோக்கி, ஆதியாகிய கோணநாயகரும் பிடியன்னமென்னடையம்மையும் எழுந்தருளி யிருப்பதற்கு, இந்திரலோகத்திலு மில்லையென்று சொல்லத்தக்க ஒரு கோயிலைக் கட்டி முடிக்கக்கடவாயென்று கட்டளையிட்டான்.

அப்போது மந்திரி மிகுந்த சந்தோஷங்கொண்டு, முன்பு இராவண னால் கோணம்லையில் வெட்டித்திறந்திருக்கும் இடத்தில் ஒருபகுதியை உலகத்தவர்கள் எக்காலமுங் காணும்படியாக விட்டு, மற்றப்பங்கைக் கற்களினால் அடுக்கிக் கட்டியடைத்துப் பின்பு சுபமுகூர்த்தத்தில் அத்திவார மிட்டு, சாதிக்கற்களினால் தளவரிசை இசைத்து, ஆகாய கங்கை, மாவலி கங்கை, காவேரி கங்கை என்னும் மூன்று கங்கையும் சந்திக்கும் சுழிமுனை யில் நவரத்தினங்களினால் முக்கோணமாக ஒரு சபையைக் கட்டி முடித்து, பொற்றக்கட்டினால் மேற்றளம் இசைத்து அதன் மேற் கற்பலகை பரவி, நடுவனாக பூகம்பழப் பிரமாணமான ஒரு துவாரம் விட்டு, அதன் மேல் தூபிக்குச் சொன்ன அங்கிஷப்படி தூபி செய்துமுடித்து பொற்சிகரமும் வைத்து, பின்பு முக்கோண சபையின் நடுவனாக இரத்தினங்களினால் ஒரு சிங்காசனமியற்றி, அதன் நடுவிலும் பூகம்பழம் அளவானதோர் துவாரம் விட்டு, சிங்காசனத்துக்கு இருபக்கத்திலும் இரண்டு தூண்டாமணி விளக்கு விதிப்படி செய்வித்துத் தூக்கி பின்பு அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலிய மண்டபங்களையும் விநாயகர், சுப்பிரமணியர் முதலிய தேவர்களுக்கு ஆலயங்களையும், திருமஞ்சனசாலை, யாகசாலை, பாகசாலை, புட்பசாலை, வாகனசாலை, விழாமண்டபம் முதலியவைகளையும் இரத்தினப் பிரகாசமாக விதிப்படி கட்டிமுடித்து, ஐந்து வீதியும் திருத்தி, பாவநாசச் சுனையையும் வெட்டிப் படித்துறைகளும் கட்டி, தாமரைத் தடாகங்கள், கூவல்கள், பிரமாலயங்கள், மடங்கள், அன்னசத்திரங்கள், நாற்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், குளக்கோட்டு மகாராசன் வசிப்பதற்கு மாளிகை, சந்திரகாந்த மேடை, முதலியவைகளையும் செய்துமுடித்து, நந்த வனங்களையும், உண்டுபண்ணி, ஐந்துமாவனத்தைச் சுற்றி மதிலுங்கட்டி,

நாலுவாயிலும் விடுத்து ஒவ்வொரு வாயிலிலும் ஆகாயத்தை அளாவும் படியாக நாலு கோபுரம் கட்டிச் சிகரங்களும் வைத்து, மதிலுக்குப் பிற்பக்கத்தில் தெப்பக்குளமும் வெட்டி அக்குளத்திற்கு மேற்குத் திக்கில் நின்ற வெள்ளை வில்வவிருக்ஷத்தடியில் தெப்பத் திருநாளுக்குக் கோண நாயகர் வந்து வீற்றிருப்பதற்கு அலங்காரமான ஒரு மண்டபமும் கட்டி முடிப்பித்தான்.

அதன்பின், கோணநாயகரையும், பிடியன்னமென்னடையம்மையையுந் திருக்கோயிலுள் வைத்துப் பிரதிஷ்டைசெய்வதற்கு, குளக்கோட்டு மகாராசன் தங்குலகுருவாகிய வசிட்டமுனிவரை வரும்படியாக நினைத்தான். அப்போது வசிட்டமுனிவர் அவ்விடம் வந்து கும்பாபிஷேகம் செய்வதற்கு சுபமுகூர்த்தம் வைத்து குளக்கோட்ட மகாராசனுக்குத் தெரிவிக்க அரசன் அளவிடற்கரிய சந்தோஷம் கொண்டு, வீதிகள் எங்கும் பூம்பந்தர்கள் இட்டு வாழைகள் கட்டி பூரண கும்பங்களும் பாலிகைகளும் வைத்து, விளக்கேற்றி சொர்ண லோகம் போல்ச் சிங்காரஞ் செய்வித்தான். அதன்பின்பு வசிட்டமுனிவர் கும்பாபிஷேகத்திற்கு செய்ய வேண்டிய கிரமங்கள் அனைத்தையும் விதிப்படி செய்துமுடித்து, தேவர்கள் புட்பமாரிபெய்ய, முனிவர்கள் வாழ்த்தொலிசெய்ய மங்கள வாத்தியங்கள் முழங்க; விபூதி, பஞ்சாக்ஷர, ருத்திராக்ஷத்தின் மேன்மை விளங்க, சிவனடியார்களின் வினைகள் நீங்க, தான தர்மங்கள் ஓங்க; குளக்கோட்டு மகாராசன் மனமானது மகிழ்ச்சியில் தேங்க; சைவ சமயம் தழைத்தோங்க, கோணநாயகரையும் பிடியன்னமென்னடையம்மை யையும் இரத்தின சிங்காசனத்தின் மீது ஸ்தாபித்து, வேத விதிப்படி கும்பா பிஷேகம் செய்து; பின்பு விநாயகர், சுப்பிரமணியர் முதலிய தேவர்களையும் அவரவர்களுக்குக் கட்டப்பட்ட ஆலயங்களில் வைத்து பிரதிஷ்டைசெய்து, குளக்கோடடு மகாராசனுக்கு ஆசீர்வாதம் செய்து, வசிட்டமுனிவர் தமது இருப்பிடத்துக்குப் போனார்.

அதன்பின்பு, குளக்கோட்டு மகாராசன் ஆகம விற்பனராகிய பாசுபதர்களை பூசைக்கு நியோகித்து, நாளொன்றுக்கு இரண்டவண அரிசியும் மற்றும் பொருளும் குறைவறக் கொடுத்து, ஆறுகாலப் பூசையும் நடத்துவித்து, சந்தோஷ உளத்தனாயிருக்கும் நாளையில், திருவிழாக்காலம் சமீபித்தது. அப்போது குளக்கோட்டு மகாராசன் நவரத்தினங்களால் குயிற்றப்பட்ட திருவாபரணங்கள், சுடர் திருவாசிகை முதலிய திருவாசிகைகள் கணக் கில்லாத சத்திரசாமரங்கள் அழகு பொருந்திய ஐந்து தேர் பொற்கேடகங்கள் முதலியவைகளையும் செய்வித்து சுபமுகூர்த்தத்தில் துவசாரோகணம் செய்வித்து, அங்குரார்ப்பணம் யாகம் முதலிய மற்றும் அங்கங்கள் எல்லாம் சிறக்க, பலவித வாத்தியங்கள் ஒலிக்கக், குடை கொடி ஆலவட்டம் நிழற்ற, சாமரையிரட்ட, சிவனடியார்கள் ஹரஹர என்று சொல்லுஞ் சொல்லானது

எவ்விடத்திலும் தழைக்க, தேவர்கள் புட்பமாரி பெய்ய, பிடியன்ன மென் னடையம்மை வாமபாகத்திலும், ஸ்கந்தமூர்த்தி நடுவிலும் வீற்றிருக்க, கோணநாயகர் திருவீதி வருகின்ற திருக்கோலத்தை குளக்கோட்டு மகாராசன் கண்டு, பேரானந்தம் கொண்டு திருநாளை நடாத்துவித்து, பங்குனி உத்தரத்தில் இரதோட்சவ, தீர்த்தோற்சவங்களும் செய்வித்து ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கி இருந்தான்.

இவையாவும் இற்றைக்கு நாலாயிரத்து நானூற்றெழுபத்தேழு (4477) வருடங்களுக்கு முன் நிகழ்ந்தவைகளாகும். அதன் பின்பு குளக்கோட்டு மகாராசன் ஒருநாள் நாற்கான் மண்டபத்தில் வந்திருந்து ஆதியாகிய கோணநாயகரின் நித்திய பூசைக்காக நாளொன்றுக்கு இரண்டவண அரிசி சோழமண்டலத்திலிருந்து அழைப்பித்து மற்றும் பொருட்களும் விடுத்து நித்திய நைமித்தியங்களிற் குறைவராமல் நடாத்தி வருகின்றோம்; நமக்குப் பிற்காலம் இது காரணங்களை யாவர் நடத்தப் போகிறார்கள் என்று தனக் குள்ளே ஆலோசித்து பின்பு அவ்விடத்தில் தானே குளங்களைக் கட்டி வயல் வெளிகளைத் திருத்தி வைப்பேனாயிற் கோணநாயகருக்கு ஒரு போதும் நித்திய நைமித்தியங்களுக்கு குறைவராது என்று தீர்மானித்து, மாவலிகங்கைக்கு சமீபமாயுள்ள ஓர் இடத்தில் அல்லைக்குளம் என்று அழைக்கப்படும் குளத்தையும் கட்டி வயல்வெளிகளையும் திருத்தி, செய்கை பண்ணுவித்தார். அவை அதிகம் பிரயோசனத்தை கொடாதது கண்டு வெண்டரசன்குளம் முதலிய குளங்களையும் வயல் வெளிகளையும் திருத்திச் செய்கை பண்ணி வைத்தார். அவைகளும் தன் மனத்துக்குத் திருப்தியாக இராததினால் மிகுந்த வியாகூலத்துடன் இருந்தார்.

# ஆடகசௌந்தரி சரித்திரம்

இஃதிவ்வாறிருக்க, பலவளங்களுஞ் செறிந்த கலிங்கதேசத்தில் அசோகமாநகரத்தை ஆளும் அசோகசுந்தரனென்னும் அரசனின் மனைவி யாகிய மனோன்மணி சுந்தரியென்பாள் ஒரு பெண்மகவைப் பிரசவித்தாள். அக் குழந்தையானது சீவிமுடித்த குழலோடும், குறையாத பற்களோடும் பிறந்தது. அதைக் கண்ட அசோகசுந்தரன் மிகுந்த அதிசயங்கொண்டு, சோதிடநூல் வல்லவர்களை அழைப்பித்து, பிள்ளையின் பலாபலன்களை விசாரித்தான். அப்போது சோதிடர்கள் அரசனை நோக்கி, இராசனே! இந்தக் குழந்தை பெண்ணாக விருந்தாலும் செங்கோல் செலுத்தி அரசுசெய்யக்கூடிய இராச யோகத்திற் பிறந்திருக்கின்றது. ஆனால், இத்தேசத்தை ஆளமாட்டாது; பரதேசத்தை ஆளும். ஆயின், இக் குழந்தையை நீர் மாளிகையில் வைத் திருப்பீர் ஆயின், வேற்றரசர்கள் உம்மோடு யுத்தஞ்செய்து இராச்சியத்தைப் பறிப்பார்கள். தேசவளங்கள் குன்றும். இன்னும் பலவகையான இக்கட்டுகளும் உமக்கு வந்து நேரிடுமென்று சொன்னார்கள். அதைக்கேட்ட அரசன் மிகுந்த வியாகூலமுற்று, மந்திரிகளுடன் யோசித்து, ஒரு பொற்பேழை செய்வித்து, அதற்குள் பிள்ளையை வைத்துப் பூட்டி, சமுத்திரத்தில் விடுவித்தான். அப்பேழையானது இலங்கைச் சமுத்திரக்கரையில் வந்து அடைந்தது. அதைக் கண்டவர்கள் அப்போது உன்னாச்சிகிரி என்ற இடத்திலிருந்து இலங்கையை அரசுசெய்யும் மனுநேய கயவாகுவுக்குப் போய்த் தெரிவித்தார்கள். அரசன் அதைக் கேட்டவுடன் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு, சேனை தளங்களுடன் பிரயாணப்பட்டு, அவ்விடம் போய்ச் சேர்ந்து, பேழையை எடுத்துத் திறந்தான். அப்போது மகாலக்ஷ்மி போலும் அழகுள்ள குழந்தையைக் கண்டு அதிசயித்து, தன் இருகரத்தினாலும் எடுத்து மார்போடணைத்து முத்தமிட்டான். அப்போது அக்குழந்தை நகைத்தது. அக்காரணத்தினால், அவ்விடத்துக்குப் பானகை யென்னும் பெயருண்டாகித் தற்காலமும் வழங்கிவருகின்றது. அதன் பின்பு இராசன் குழந்தையைச் சிவிகை மீது வைத்துக்கொண்டு தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்து, பிள்ளையில்லை என்னும் மன வியாதியினாற் பீடிக்கப் பட்டிருக்குந் தனது மனைவி கையிற்கொடுத்து, குழந்தை வந்த வரலாற்றை யுஞ் சொன்னான். அரசன் மனைவி மிகுந்த சந்தோஷமடைந்து, பிள்ளைக்கு ஆடகசௌந்தரி என்னும் பெயரிட்டு அன்பாக வளர்த்தாள். ஆடகசௌந்தரி வளர்பிறைபோல நாளுக்குநாள் வளர்ந்து, வாலைப் பருவத்தை அடைந்தாள். அப்போது மனுநேய கயவாகுராசன் ஒருநாள் ஆடகசௌந்தரியை நோக்கி, மகளே! எனக்குப் பிற்காலம் இராச்சியபாரத்தை ஒப்புக்கொண்டு மனுநீதி குன்றாமல் அரசுசெய்து வரவேண்டியது மல்லாமல், உனது இராச்சியத்தின் கீழ் எவ்வித பாரிய வேலைகளைச் செய்யத் தொடங்கும் போது, நீ பூதங்களை அழைப்பித்து அப்பணிவிடைகளைச் செய்விப்பாயாக வென்று சொல்லி;

விசித்திரயூகி என்னும் மந்திரியையும் அழைத்து, ஆடகசௌந்தரிக்கும் மந்திரிக்கும் பூதங்களை அழைக்கின்ற ஒரு மந்திரத்தை உபதேசஞ்செய்தான். பின்பு மனுநேய கயவாகு வினைவழியே ஊழ்வந்து முற்றியதாற் சிவபதம் அடைந்தான். அதன் பின்பு ஆடகசௌந்தரி இராச்சியபாரத்தை ஒப்புக் கொண்டு அரசுசெய்தாள்.

# திருக்குளச் சரித்திரம்

அக்காலத்தில் ஆடகசௌந்தரியின் ஏவலாளர் சிலர் இராக்கினியின் முன்பாக வந்து, பாதங்களை வணங்கி, தாயே! நும் அரசாட்சியின் கீழுள்ள திருக்கோணமலையில் சோழமண்டலத்துள்ள சைவனொருவன் வந்து மிகவும் அலங்காரமுள்ள கோயில்கள் மடங்கள் முதலியவைகளை உண்டுபண்ணி, அதிக ஆடம்பரத்துடன் இருக்கின்றானென்று சொன்னார்கள். அதைக்கேட்ட இராசபெருமாட்டி, மிகுந்த கோபங்கொண்டு, விசித்திரயூகி என்னுந் தனது முதன்மந்திரியை நோக்கி, நீ இந்தக் கணமே திருக்கோணமலைக்குப் போய் அக்கோயிலையும் இடித்துச் சமுத்திரத்திற்றள்ளி, அந்தச் சைவனையும் ஓடத்தில் ஏற்றி அனுப்பிவிட்டு வருவாயாகவென்று கட்டளைபண்ணி, ரத, கஜ, துரக பதாதிகளையுங்கூட்டி அனுப்பிவைத்தாள். மந்திரியானவன் இராசபெருமாட்டியின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, திருக்கோணா சலத்துக்கு வந்து சேர்ந்து, சூரியப்பிரகாசமாய் இலங்கும் பொற்சிகரங்க ளமைந்த கோயில்களையும் மற்றுஞ் சிறப்புக்களையுங் கண்டு, இத்திருப் பணியைச் செய்து முடித்தவன் தேவலோக வாசியாயிருக்க வேண்டும் என்று தன் உள்ளத்தே தீர்மானித்து, தான் ஏறிவந்த யானையை விட்டிறங்கி, குளக்கோட்டு மகாராசன் வீற்றிருக்கும் தமனியமண்டப வாயிலில் வந்து நின்று, உத்தரவு பெற்று உட்பிரவேசித்து, குளக்கோட்டு மகாராசனுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். அப்போது குளக்கோட்டு மகாராசன் ஆசீர்வதித்து, ஒரு பொற்பீடத்தில் உட்காரும்படி உத்தரவு செய்தான். சிலநாழிகையின் பின், சகலரையும் அறுசுவையுடன் போசனம் அருந்தச் செய்தபின், மந்திரியை அழைத்துக் கொண்டு சபாமண்டபத்துக்கு வந்து தாம்பூலம் அருந்தி, பரிமள சுகந்தம் பூசி, சம்பாஷணை செய்துகொண்டு இருக்கும் சமயத்தில், குளக்கோட்டு மகாராசா மந்திரியை நோக்கி, நீர் இவ்விடம் வந்த காரணம் யாதென்று வினவினார். அவ்வேளையில் மந்திரி பயபக்தியுடன் எழுந்துநின்று, மகாராசரே! தாங்கள் இவ்விடத்தில் எவர்களும் மனத்தாலும் நினைத்தற்கரிய மேலான ஒரு தருமத்தைச் செய்கின்றீரென்று உன்னாச்சிகிரியில் இருந்து அரசுசெய்யும் எங்கள் இராசபெருமாட்டியாகிய ஆடகசௌந்தரி கேள்விப்பட்டு, தாங்கள் செய்து முடிக்குந் திருப்பணி முதலிய தருமங்களுக்குத் தான் செய்ய வேண்டிய உதவிகள் யாதுமிருந்தாற் கேட்டுவரும்படி இவ்விடத்திற்கு என்னை அனுப்பினார் என்று, ஆடகசௌந்தரி சொல்லிய யாவற்றையும் முற்றாக மறைத்துச் சொன்னான். அப்போது குளக்கோட்டு மகாராசா புன்னகை செய்து, மந்திரியை நோக்கி, உனது இராசபெருமாட்டி உன்னிடஞ் சொல்லியது இவ்வாறன்று; இக்கோயிலையும் இடித்துக் கடலிற்றள்ளி, என்னையும் ஓடத்திலேற்றி அனுப்பிவிட்டு வரும்படி சொன்னதேயாம் என்று ஆடகசௌந்தரி சொல்லிய சரித்திரத்தை விபரமாகச்

சொன்னார். அதைக்கேட்ட மந்திரி மிகவும் ஆச்சரியமுற்று, தாங்கள் தேவ ராசர்களில் ஒருவரேயன்றிப் பூலோக ராசரல்ல. ஆனால் எனது பெருமாட்டி சிற்றறிவாற் சொல்லியவைகளைத் தேவரீர் மன்னிக்கவேண்டும். என்று பின்னும் அரசருடைய பாதங்களை வணங்கினான். அப்போது குளக்கோட்டு மகாராசா மந்திரியை இருகையாலும் தழுவி, விசித்திரயூகமந்திரி என்னும் பெயர் உனக்கே தகும். உங்கள் இராசபெருமாட்டி நமது வம்சத்தைச் சேர்ந்தவளாயினும் அவ்விபரங்களை அறியாமற்றான் நமக்கு இவ்வித வசனங்களைச் சொல்லியனுப்பினாளென்று ஆடகசௌளந்தரியின் விபரங் களை மந்திரிக்குச் சொல்லி, பின்னுஞ் சொல்லத் தொடங்கினார்: இது இவ்வாறிருக்க, ஆதியாகிய கோணநாயகருக்கு எக்காலத்துக்கும் நித்திய நைமித்திகங்களுக்குக் குறைவுவாராமற் செய்யவேண்டுமென் றெண்ணிச் சில குளங்களையுங் கட்டி, வயல்வெளிகளையுந் திருத்தினேன். அவை யெல்லாம் என் மனதிற் கிசையவில்லை. ஆனதால், எப்போதும் மாறாமடை பாயக் கூடிய ஒரு குளம் கட்டுவதற்குத் தகுந்த இடம் எவ்விடத்திலுண் டென்பதை எனக்குத் தெரியச் சொல்லவேண்டும் என்றார். அதற்கு உத்தர மாக, மந்திரி மகாராசனை நோக்கிச் சொல்லுவான்: இத்திருக்கோண மலைக்குத் தெற்குப்பக்கமாக நீர் சொல்லியபடி ஒரு வசதியுள்ள இடமிருக் கின்றது. எவ்விதமெனில், நான் இப்போது சொல்லிய இடத்தில் இரண்டு பெரிய மலைகளிருக்கின்றன. அவ்விருமலைகளையும் ஒன்றாகப் பொருந்தும் படி இடையிலோர் கட்டுக்கட்டவேண்டும். அப்படிக் கட்டி முடித்தால் ஒரு பெரிய குளமாகுமென்று சொன்னான். அப்போது குளக்கோட்டு மகாராசா மிகுந்த சந்தோஷங்கொண்டு, மந்திரியைப் பார்த்து, நீர் சொல்லியபிரகாரம் அவ்விரண்டு மலையையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டுவது மிகவும் பிரயாச மல்லவா? எவ்விதம் கட்டிமுடிக்கலாமென்று கேட்டார். அப்போது மந்திரி மகாராசாவை நோக்கி, மகாராசாவே! கற்பரசியாகிய எமது இராசபெருமாட்டி யைத் தேவரீர் விவாகஞ்செய்து கொள்வீரானால், ஒன்பது நாளைக்குள்ளாக அக்குளத்தையுங் கட்டி, வயல் வெளிகளையுந் திருத்தி ஒப்பிப்பேனென்று வாக்குக்கொடுத்தான். அதைக் கேட்ட குளக்கோட்டு மகாராசன் மிகுந்த சந்தோஷங் கொண்டு, நீர் சொல்லிய பிரகாரமாகக் குளத்தையுங் கட்டி, அக்குளத்தால் நீர்பாய்ந்து நெல்விளையக்கூடிய வயல்வெளிகளையுந் திருத்தித் தந்தபின் உமது இராசபெருமாட்டியை விவாகஞ் செய்து கொள்வே னென்று வாக்குப்பண்ணி, தனது கையிலிருந்த கணையாழியையுங் கொடுத்து, மந்திரியை அனுப்பிவைத்தான். பின்பு மந்திரியானவன் உன்னாச்சிகிரிக்குப் போய்ச்சேர்ந்து, ஆடகசௌளந்தரியைக் கண்டு வணங்கி, குளக்கோட்டு மகாராசாவினுடைய குலம், மரபு, குணாதிசயம் முதலியவை களையும் மகாராசா தன்னிடம் கேட்ட கேள்விகளையும், தான் மகாராசனை விவாகத்திற்கு இசையச் செய்த சங்கதிகளையும், கோணநாயகர் கோயிற் பெருமிதங்களையும் விபரமாகச் சொல்லி, மகாராசாவினுடைய கணையாழி

யையுங் கொடுத்தான். அப்போது ஆடகசௌந்தரி மிகுந்த சந்தோஷங் கொண்டு, மந்திரியின் யூகபுத்திக்காக அவனை மிகவும் வியந்து, பின்பு மந்திரியை நோக்கி, மலைபோலும் புயங்களையும் குறுகிய கால்களையு முடைய பூதங்களிற் சிலவற்றை அழைத்துக்கொண்டு போய் மகாராசா வுடைய மனமானது மகிழ்ச்சியடையும் படி கூடியவிரைவில் குளத்தையுங் கட்டி, வயல்வெளிகளையுந் திருத்திமுடித்து, பின்பு மகாராசாவையும் இவ்விடம் அழைத்து வருவாயாகவென்று கட்டளையிட்டாள்.

ஆடகசௌந்தரியின் கட்டளைப்படி, மந்திரியானவன் மனுநேய கயவாகு தனக்குபதேசித்த மந்திரத்தினாற் சில பூதங்களை அழைத்துக் கொண்டு திருக்கோணமலைக்கு வந்து, குளக்கோட்டு மகாராசாவைக் கண்டு, தேவரீர் காலதாமதஞ் செய்யாமற் பிரயாணப்படவேண்டு மென்று சொன்னான். அப்போது மகாராசா பேரானந்தங் கொண்டு, கோணநாயகரின் சந்நிதிக்குச் சென்று விடைபெற்று, மந்திரி முதலானவர்களோடுங் கூடிப்போய், ஒரு சோலையில் அலங்காரமான மண்டபமொன்று முடிப்பித்து, மந்திரியுடன் தங்கினார். அப்போது மந்திரி பூதங்களை நோக்கிப் பணியைத் தொடங்கும்படி கட்டளையிட, அவர்கள் சென்று ஆகாயத்தையளாவி நிற்கின்ற மரங்களைப் பிடுங்கி, ஊற்றுக்காணும்படியாக மண்டபப்படி வெட்டி, இருமலைகளையும் ஒன்றாகப் பொருத்திக்கட்டி, அலைகள்மோதிக் கட்டை உடையாதபடிக்குப் பெரிய கற்களை அடுக்கிக் கட்டினார்கள். அப்போது குளக்கோட்டு மகாராசா திருப்பணி செய்விக்கும் பொருட்டுச் சோழ மண்டலத்திலிருந்து அழைத்து வந்த, முன்சொல்லிய ஐந்து ஆசாரிமார்கள், மண்டபப்படியிலிருந்து மதகு வரைக்குஞ் செப்புப் பீலி வைத்துக் கபால சூத்திரம் போல இடைகலை பிங்கலை சுழுமுனையாக, மதகுகளை வகுத்துக் கட்டி, விசைகொண்டு வருகின்ற நீரானது, வந்து விழுந்து ஆறிப்பாயும்படி உடல்மையக் கிணறு, சிரமையக் கிணறு என்னும் இரண்டு கிணற்றையும் கட்டி, தண்ணீர் அதிகம் ஓடாமலும் நில்லாமலும் போக வரத்தக்க இரண்டு நாசிமதகுங்கட்டி, அம்மதகுகளின் மேல் சிகர குப்பாய மாகக் கற்பலகைகளைப் பரவி, கிழக்குப் பக்கத்திலுள்ள மையக்கிணற்றில் வந்து விழுகின்ற எவைகளையும் வெட்டிதத்தள்ளும்படி சக்கர கிருதியாக ஓர் இயந்திரமும் வைத்துத் தேவர்களும் வியக்கக் கூடிய பிரகாரமாகக் குளங்கட்டி முடித்தார்கள். பூதங்கள் அக்குளத்தால் தண்ணீர் பாய்ந்து நெல் விளையக்கூடிய இரண்டாயிரத் தெழுநூறு அவண நெல் விதைக்கும் வயல்வெளிகளையுந் திருத்தி, அவ்வெளிகளுக்கு நீர் பாயும்படியாக வாய்க்கால்களையும் வெட்டி, மாவலிகங்கை நீரும் குளத்தில் வந்து விழும் படி செய்து முடித்ததன் பின், கொட்டியாபுரத்திலுள்ள காடுகளை வெட்டித் திருத்தி, கதலி, பலா, மா, புன்னை, இருப்பை, பூகம் முதலிய மரங்களை அதிகமாகவைத்து அலங்காரமான சோலையாக்கி, அவ்விடத்திலும்

வயல்வெளிகளைத் திருத்தி முடித்தார்கள். பின்பு ஆசாரிமார்கள் திருக்குளத்தின் பெரியமதகுக்குக் கதவும் போட்டுப், பூட்டிட்டு, திறவுகோலைக் குளக்கோட்டு மகாராசனுடைய கையிற் கொண்டுவந்து கொடுத்தார்கள். அப்போது குளக்கோட்டு மகாராசா மிகுந்த சந்தோஷங்கொண்டு, மந்திரியுடன் போய்க் குளக்கட்டில் நின்று குளத்தின் சிறப்பைப் பார்த்து, மந்திரியை நோக்கி இத்திருக்குளமானது, கோணநாயகருடைய கிருபையினால் முடிந்ததென்று சந்தோஷத்துடன் சம்பாஷணை செய்துகொண்டிருக்கும் சமயத்தில், மாவலிகங்கை நீரானது குளமெங்கும் பரவி, இன்னும் அதிகமாகப் பெருக்கெடுத்து வருவதைக் குளக்கோட்டு மகாராசா கண்டு, அச்சங் கொண்டு, மதகு திறக்காவிடில் கங்கைநீரானது இன்னும் சொற்ப நேரத்துக்குள் குளக்கட்டை உடைக்கு மாதலால், மதகைத் திறக்க யார் வல்லவரென்று துக்கித்து, பின்பு காத்தற் தொழிலையுடைய மஹாவிட்டுணு மூர்த்தியை நினைக்க, அவரும் அவ்விடம் வந்துசேர்ந்தார்.

அப்போது குளக்கோட்டு மகாராசா அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்காரஞ் செய்து, "சுவாமீ! மாவலிகங்கையானது பெருகித் திருக்குளத்தில் வந்து நிரம்பியபடியால், குளத்தின் மதகைத்திறந்து, கங்கை நீரை வெளியிற் போக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு தேவரீரல்லாமல் மற்றொருவராலுங் கூடா" தென்று சொல்லிப்; பின்னும் அவருடைய பாதங்களை வணங்கினான். அப்போது விட்டுணுமூர்த்தி குளக்கோட்டு மகாராசனை நோக்கி, அரசனே! நீ இக்குளம் கட்டத் தொடங்கும்போது விக்கினேசுவரரை நினையாது விட்ட குறையினாற்றான் இது சம்பவித்தது. ஆகையால் விநாயகக் கடவுளை இக் குளக்கட்டினருகில் தாபிக்க வேண்டுமென்று சொல்லி, திருக்குளத்தின் பக்கலில் விநாயகரை ஸ்தாபித்து, அபிஷேகஞ் செய்து, முப்பழம், பணிகாரம் அவல், எள்ளுண்டை முதலியவைகளை அவர் முன்பு வைத்து நிவேதித்து, விதிப்படி பூசைசெய்து முடித்த பின்பு, விட்டுணுமூர்த்தி மண்டுப ரூபங்கொண்டு குளத்துட் பிரவேசித்து மதகைத் திறந்தார். விட்டுணுமூர்த்தியால் ஸ்தாபிக்கப் பட்ட விநாயகர் கட்டளைப் பிள்ளையாரென்னும் பெயருடன் திருக்குளக் கட்டருகில் தற்காலமும் இருக்கின்றார். அப்போது கங்கைநீரானது வெளியே பாய்ந்து, விநாயகக் கடவுளை வலஞ்செய்து, வயல் வெளிகளிற் பாயத் தொடங்கியது. அதைக் கண்ட குளக்கோட்டு மகாராசா விநாயகக் கடவுளை நமஸ்கரித்து, பின்பு விட்டுணுமூர்த்தியை நோக்கி, சுவாமீ! எக்காலமும் இத் திருக்குளத்துக்கு யாதொரு குறையும் நேரிடாதபடி தேவரீர் காத்துக் கொள்ள வேண்டுமென்றார். அதற்கு விட்டுணுமூர்த்தி குளக்கோட்டனை நோக்கி, நானும் பிரமதேவனும் அடிமுடி தேடி இன்னுங் காணாதிருக்குங் கோணநாயகருக்காகவே இக்குளத்தை நீ கட்டிமுடித்தாய். இதற்கு யாதொரு குறைவும் வராமல் எக்காலமும் யான் பாதுகாத்துக்கொள்வேன் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பின்பு விட்டுணுமூர்த்தி விநாயகரைத் தோத்திரஞ் செய்து கொண்டு அண்ணமார், வதனமார், நாயமார், மங்கலர், காளமாமுனி, இலங்கைச் சந்திகாவலர் முதலியவர்களையும், எழுராசாக்களையும், வைரவக் கூட்டங்களையும், காளி, பத்தினி முதலியவர்களையும் குளக்கட்டில் காவலாக நிறுத்தி, அவர்களை நோக்கி, ஒரு வருடம் பாற்பொங்கல், ஒருவருடம் பழம் பாக்கு வெற்றிலை முதலிய வகைகளில் மடை குறை வில்லாமல் உங்களுக்குக் கிடைக்கும். ஒருகாலம் குறைவுகண்டாலும், நீங்கள் மனதிற் கிலேசமடையாமல் திருக்குளத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது. இருபத்தெண்ணூழி சென்ற பின்பு, யாமிவ்விடம் வந்து உங்கள் குறைகளைத் தீர்ப்போம். இதுவன்றி, மழையில்லாக் காலத்தில் விதி முறையாகப் பச்சைப்பட்டுக் கொண்டு வந்து நேருவார்களாகில் மழை யுண்டாகும் படிக்கும்; சிவப்புப்பட்டு நேருவார்களாகில் வெயிலுண்டாகும் படிக்குங் கிருபைசெய்யுங்கள் என்று கட்டளை பண்ணி, பின்பு, குளக்கோட்டு மகாராசனை நோக்கி, நானிப்போது சொல்லியபிரகாரம் வருடந் தோறும் வழுவின்றி நடாத்திவர வேண்டியது என்று திருவாய்மலர்ந்தருளிப் போயினார். பின்பு குளக்கோட்டுமகாராசன் விட்டுணுமூர்த்தி சொல்லியபிரகாரம் வேள்வி முதலிய சடங்குகளைச் செய்து நிறைவேற்றி, விநாயகக்கடவுளிடம் விடை பெற்று, மந்திரியையும் அழைத்துக் கொண்டு தம்பலகமத்துக்குப் போய், வயல்வெளிகளின் சிறப்பையுங் கண்டு, அம்மார்க்கமாகத் திருக்கோணா சலத்துக்கு வந்து சேர்ந்தார்.

விட்டுணுமூர்த்தி சொற்படி, குளக்கட்டிலுள்ள தேவதைகளுக்குப் பாற்பொங்கல், மடை முதலிய வேள்விகளைக் குளக்கோட்டு மகாராசனால் உண்டு படுத்தப்பட்ட ஒரு பத்ததிப்படி தற்காலத்தில் உள்ளவர்களும் செய்து வருகின்றார்கள். மழை வெய்யில் தேவையான காலங்களில் பட்டு நேருகிற வழக்கம் இப்போதும் நடைபெற்று வருகின்றது.

பின்பு குளக்கோட்டு மகாராசா கோணநாயகரையும் பிடியன்ன மென்னடையம்மையையும் மற்றுந் தேவர்களையும் வணங்கி, அடியவனாகிய யான் செய்துமுடிப்பித்த #திருக்குளமானது எக்காலமும் மாறாமடை பாயவும், வயல்வெளிகளெங்கும் விளைவு பெருகவும் கிருபைபுரிய வேண்டுமென்று பிரார்த்தித்து, அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு, மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தார். அதன்பின்பு, குளக்கோட்டு மகாராசா தனது மந்திரிகளை நோக்கி, ஆதியாகிய கோணநாயகருக்கு நித்திய நைமித்தியங்களுக்குக் குறைவு வராமல் மாறாமடைபாயுந் திருக்குளமும் உண்டு பண்ணி, வயல்வெளி களையுந் திருத்தியிருக்கின்றோம். ஆகையால் அவ்வவ்விடங்களிலிருந்து

# கந்தளாய்க்குளம் A.D.275ல் கண்டியை அரசுசெய்த மகாசேனன் என்பவனால் ஒருமுறை பழுதுபார்ப் பிக்கப்பட்டது. பின்பு கிரெகோரி கவர்னர்காலத்தில் BARBER என்னும் இஞ்சினீயரால் 1870ம் ஆண்டு பழுதுபார்க்கப்பட்டது.

செந்நெல்விளைவு உண்டாக்குவதற்கு மிகுந்த குடிசனங்கள் வேண்டு மாகையால், நீங்கள் உத்தரதேசஞ் சென்று, குடிசனங்கள் அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டார். மந்திரிகள் குளக்கோட்டு மகாராசா சொற்படி சென்று, குடிசனங்களை அழைத்துவந்தார்கள். அக்குடிசனங்களின் சந்ததியில் உள்ளவர்கள் தற்காலமும் இருக்கின்றார்கள். அவர்கள் சிந்து நாட்டாரென்று அழைக்கப்படுகின்றார்கள். குளக்கோட்டு மகாராசா அக் குடிசனங்களைத் தம்பலகமம் கொட்டியாபுரம் என்னும் பகுதிகளிற் குடியேற்றி, அவர்களுக்கு வேண்டிய பொருட்களுமுதவி, விளைநிலங்களைச் செய்வித்து, திருக்குளத்தால் நீர்பாயுஞ் சிறப்பையும், விளைவின் பெருக்கத்தையுங் கண்டு, கோணநாயகருக்கு இனி ஒருபோதும் நித்திய நைமித்தியங்களுக்கு குறைவு வராதென்று மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார். அதன்பின்பு, கட்டுக் குளத்தூரிலும் சில விளைநிலங்களைத் திருத்தி அவ்விடங்களிலும் குடிசனங்களை இருத்திவைத்தார்.

# திருக்கோணைநகரிற் குடியேறிய சரித்திரம்

அதன் பின்பு குளக்கோட்டு மகாராசா கோணநாயகருக்குத் திருத்தொண்டுகள் செய்வதற்குக் குடிசனங்கள் வேண்டுமென்றெண்ணி, உத்தரதேசஞ் சென்று, மருங்கூர் என்னும் இடத்திலிருந்து முப்பது குடிசனங் களை அழைத்துவந்து, அவர்களைத் தானத்தாராக்கி, அவர்களுக்கு விளை நிலம் குடிநிலம் முதலியவைகளுங் கொடுத்து, திருக்கோணாசல நகரிற் குடியிருத்திவைத்தார். அதன்பின்பு காரையூரிலிருந்து இருபத்தொரு குடியை வரிபிடித்துவந்து விளைநிலம் முதலியவைகளையுங் கொடுத்துத் திருக் கோணாசல நகரிற் குடியிருத்திய பின்பு; கொல்லன், குயவன், ஏகாலி, நாவிதன், வள்ளுவன் அவர்கள் ஒவ்வொருவரிலும் ஐவைந்து குடிகளை அழைப்பித்து, அவர்களுக்கு வேண்டிய பொருட்களுமுதவி, ஐந்து குடிமை களையுந் திருக்கோணாசலநகரிற் குடியிருத்திவைத்தார்.

அதன் பின்பு தானத்தாராகிய முப்பது குடிகளுக்கும் குளக்கோட்டு மகாராசா சொன்னதாவது; நீங்கள் கோணநாயகருக்குச் செய்யுந் திருத்தொண்டுகள் யாதெனில், திருக்குளத்திலுள்ள ஏழு ராசாக்களுக்கும் பீதாம்பரமீதல், அறைமுதலில் வரவுசெலவுக் கணக்கெழுதல், திருச்சூகரத் திருவிளையாட்டு நடத்தல் முதலியவைகளாம் என்று சொல்லி, அவர்களில் ஏழுகுடி மனுஷருக்கு இராயரென்னும் பட்டமும்கட்டி, ஒரு குடிக்குக் கருகுலக் கணக்கன் என்னும் பட்டமுங் கொடுத்து, ஏழுகுடிராயரில் ஏழுபெண்களைத் தெரிந்து மாணிக்கங்களெனப் பெயர்கொடுத்து, அவர்களை நோக்கி, நீங்கள் ஏழுபேருங் கோணநாயகருக்கு முன்புநின்று நடனஞ்செய்தல், ஆலாத்தி யெடுத்தல், கோணநாயகர் திருச்சூகரத் திருவிளையாட்டுக்கு எழுந்தருளும் போது சுவாமிக்கு முன்பாகத் தங்க ஈட்டிகளைக் கொண்டு சென்று திருச்சூகரங் குற்றுதல், திருச்சூகரத் திருவிளையாடல் முடிந்தபின்பு உள் மண்டபத்தில் நின்று சகலருக்கும் மஞ்சனீரூற்றுதல் முதலியவைகளாமென்று சொல்லி கோயிற்றொழும்பு செய்யவிடுத்தார்.

பின்பு வரிப்பத்தாராகிய இருபத்தொரு குடிகளையும் நோக்கி, நீங்கள் கோணநாயகருக்குச் செய்யுந் திருத்தொண்டுகள் யாதெனில், திருக்கோயி லில் அலகிடுதல், கோமயந் தெளித்தல், பாத்திரங்கள் சுத்தி செய்தல், திருவிளக்கேற்றுதல், புட்ப பத்திரமெடுத்தல், மாலை கட்டுதல், பூரண கும்பங்கள் வைத்தல், பாலிகைபோடுதல், அபிஷேகத் திரவியங்கள் திட்டஞ் செய்தல், பழம் பாக்கு வெற்றிலை சந்தன மிழைத்தல், பீதாம்பரங்கள் செய்து கொடுத்தல், நடனமாதர்களுக்குப் பின்னின்று பண்ணோடு பாடுதல், வாத்தியஞ் செய்தல், திருச்சுண்ண மிடித்தல், கொடியேற்றுதல் இறக்குதல்,

# கன்னிகைத் தீர்த்தம் உற்பத்தியான சரித்திரம்

அப்போது முனிவர் சொல்லியவற்றை எல்லாம் இராவணன் கேட்டுத் தனது தாயாருக்கு இப்புண்ணிய ஸ்தலத்திற்றானே கன்மாதியைச் செய்து நிறைவேற்ற வேண்டுமென்னும் விருப்பங்கொண்டு, முனிவரை நோக்கி, ஐயா! நீரே ஆசாரியராகவிருந்து, தன் தாயாருக்குக் கன்மாதியைச் செய்து நிறைவேற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதைக் கேட்ட முனிவர், மிகுந்த சந்தோஷம் கொண்டு, அப்படியே செய்கிறேன் வாருமென்று இராவணனை அழைத்துக் கொண்டு, திரிகோணமலைக்கு மேற்குத் திக்கிலுள்ள கன்னிகா என்னுந் தலத்துக்குப் போய், அவ்விடத்தில் தனது கையிலிருந்த தண்டினால் ஏழிடத்தில் ஊன்றினார். முனிவர் ஊன்றிய ஏழு இடத்திலும் கடுஞ்சூடு, இளஞ்சூடு, கடுங்குளிர், இளங்குளிர் முதலிய ஏழுவகைப் பேதமுள்ள சலத்துடன் ஏழு கூவல்கள் உண்டாகின. அப்போது முனிவர் இராவணனை நோக்கி, இந்தப் பூங்காவனத்தில் தெய்வப் பெண்கள் எப்போதும் வந்து விளையாடிப் போவதால், இக்கன்னிகா மிகவும் விசேஷமான தலமாயிருக்கும். இத் தீர்த்தமானது, பாதாள லோகத்திலிருந்து உற்பத்தியானது. இது குமரித்தீர்த்தமென்று அழைக்கப்படும். இவ்விடத்தில், இறந்தவர்களுக்கு அந்தியேட்டி செய்து, இத்தீர்த்தத்திற் பிண்டமிடுவார் களானாற் கங்கை முதலிய நதிகளில் இறந்தவர்களடையும் கதியிலும் பெருமிதமான கதியை அடைவார்கள் என்று முனிவர் சொல்ல, இராவணன் முனிவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, சுவாமி! தேவரீரைப் பார்க்கினும் பெரியாரை யான் ஒருபோதுங் கண்டதில்லை. இனிக் கால தாமதஞ் செய்யாமற் கன்மாதியைச் செய்து முடிக்க வேண்டுமென்று சொல்லி, அந்தியேட்டிக்கு வேண்டிய பொருட்களை அழைப்பித்துக் கொடுத்தான். அப்போது முனிவர் ஒரு மண்டபம் கட்டுவித்து, அதிலிருந்து ஆகமவிதிப்படி அந்தியேட்டி செய்து, இராத்திரிகரியினுடைய உயிரை மகாசாலப் பிரயோகத்தினால் அழைத்து, முடியப்பட்ட புற்றளிகையி லாவாகித்து, தகனஞ்செய்து, மற்றும் கிரமங்களையும் முடித்துப் பின்பு, பாஷாணஸ்தாபனஞ் செய்து, இராவணனுடைய கையினால் எள்ளுந் தண்ணீருமிறைப்பித்து, பிண்டமிடுவித்து, பின்பு இராவணனை நோக்கி, இதோவிருக்கும் பாஷாணத்தை உனது புயத்தில் வைத்துப் போய்க் கன்னிகைத் தீர்த்தத்திற் போட்டு ஸ்நானஞ்செய்து வருவாயாக வென்றார். அப்படியே இராவணன் செய்து முடித்த பின்பு, விபூதிகொடுத்து, ஆசீர்வாதஞ் செய்து, இராவணனையும் அழைத்துக் கொண்டு திரிகோணாசலத்துக்கு வந்து, உனது தாயார் நற்கதியடைய வேண்டுமென்று நினைத்துக் கொண்டு கோணநாயகருடைய திருப்பாதங்களை நமஸ்கரித்துவாவென்று சொல்ல,

அவனும் அப்படியே செய்து முடித்தான். அதன் பின்பு முனிவர் இராவணனை அழைத்துக் கொண்டு மலையடிவாரத்தில் வந்து, பலவித தானங்களையும் கொடுப்பாயாகவென்று சொன்னார். அப்போது சிவபெருமான், பிரமா, விட்டுணுவாகிய முனிவர் இம்மூவரும் பிராமணவடிவத்துடன் இருந்து, முகிற்கூட்டங்கள் பொன்மழையைப் பெய்தாலொப்ப இராவணன் கொடுக்குந் தானங்களை வாங்கினார்கள். பின்பு அம்மூவரும் இராவணனை நோக்கி, உனது தாயார் மேலான பதவியைப் பெறுவாளென்று ஆசீர்வதித்து, தனித்தனியே ஒவ்வொருவரும் ஒவ்வொரு இலிங்கம் அவன் கையிற் கொடுத்து, இந்த மூன்று இலிங்கத்தையும் இம் மலையின் மூன்று கோணத்திலும் வைப்பாயாக வென்று சொல்லி மறைந்து போனார்கள். அப்போது, இராவணன் அதிசயமுற்று, கோணமலையை மும்முறை வலஞ்செய்து, கோணநாயகருடைய பாதங்களை நமஸ்கரித்து, மூன்று இலிங்கத்தையும் மூன்று கோணத்திலும் வைத்து, சுவாமியிடம் விடைபெற்றுத் தேரிலேறிக் கொண்டு இலங்காபுரிக்குப் போனான். முனிவர் அந்தியேட்டி செய்து தர்ப்பை சுட்ட போதில் இராத்திரிகரி பதைபதைத்து உயிர் துறந்தாள் என்பதை இராவணன் அறியாதவனாகி, இலங்காபுரியை அடைந்து, தனது தாயை நினைத்துச் சில நிமிஷங்களாகத் துக்கித்து, பின்பு தேற்றரவு கொண்டு இராச்சியபரிபாலனஞ் செய்திருந்தான்.

விட்டுணுமூர்த்தி உண்டாக்கிய ஏழு கூவல்களுந் தற்காலம் இருக்கின்றன. இவ்வூரவர்கள் அவ்விடத்திற்றானே அந்தியேட்டி செய்விக்கின்றார்கள்.

# இராமர் சரித்திரம்

பின்பு இராவணன் இலங்காபுரியை அரசு செய்து வரும் நாளில், அயோத்தியிலிருந்து அரசுசெய்த தசரதச் சக்கரவர்த்தியின் குமாரராகிய ஸ்ரீராமர் இலங்கைக்கு வந்து, துட்டகண்டராகிய இராவணன், கும்பகர்ணன், கவந்தன், கரணதூஷணன் முதலிய இராக்ஷதர்கள் எல்லோரையுங் கொன்று, விபீஷணனை இலங்கைக்கு அரசனாக்கி வைத்துப் பின்பு சீதாதேவி இலக்குமணன் முதலியவர்களோடு திரிகோணாசலத்தக்கு வந்து, கோண லிங்கரையும், பிடியன்னமென்னடையம்மையையும் தரிசித்து, வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொண்டு சென்றார்.

# வரராமதேவர் சரித்திரம்

அதன் பின்பு, சோழமண்டலத்திலிருந்து அரசுசெய்த மனுநீதி கண்ட சோழனின் வம்சத்தவராகிய வரராமதேவர் என்பவர், சிவபெருமான் பேரிற் கொண்ட அன்பு மிகுதியினால் அவரெழுந்தருளி இருக்குஞ் சிவத் தலங்க ளெங்குஞ் சென்று தரிசிப்பதிலும், சிவபூஜை செய்வதிலும், சிவசரித்திரங் களைக் கேட்பதிலும், சிவனடியார்களைச் சிவனெனப் பாவித்து அவர்களுக்கு அன்னம், சொர்ணம் முதலியன கொடுத்துப் பாதுகாப்பதிலும் தனது காலத்தைக் கழித்து வந்தார். அப்படியே செய்துவரும் நாளில், ஒருநாள் திரிகோணாசல மான்மியத்தைக் கேள்வியுற்று அவ்விடம் போய்ச் சுவாமியைத் தரிசிக்கவேண்டும் என்னும் விருப்பமுடையவராகி, மந்திரியை நோக்கி, நாம் திரிகோணாசல தரிசனம் செய்யவேண்டி இருப்பதால், ஆகவேண்டிய வைகளைத் திட்டஞ்செய்வாய் என்று கட்டளையிட்டார். அப்போது மந்திரி யானவன் பிரயாணத்துக்கு வேண்டியவைகளை யெல்லாஞ் செய்துமுடித்து அரசருக்கு அறிவிக்க, அவரும் மகிழ்ச்சிகொண்டு மந்திரி முதலான வர்களுடன் மாளிகையை விட்டுப் புறப்பட்டு வந்து, மரக்கலத்திலேறித் திரிகோணாசல சமுத்திரக் கரையில் வந்து இறங்கினார். அதன் பின்பு, வரராமதேவர் கோணமலையைத் தரிசித்துக் கொண்டு, பாவநாச தீர்த்தத்தில் இறங்கி ஸ்நானஞ்செய்து, அநுட்டானம் முடித்துக் கொண்டு, திருக்கோயிலுட் பிரவேசித்து, கோணலிங்கரையும் தேவியையும் கண்டு, சுவாமி! இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் தேவரீர் எழுந்தருளியிருப்பதை இந்தநாள் வரையிலும் யான் அறியாதிருந்தேனே என்று சொல்லி, ஆனந்த வருவி சொரிய, நாவானது குழற, பலவித தோத்திரங்களைச் சொல்லி, அட்டாங்க நமஸ்காரம் செய்து போனார். பின்பு, திரிகோணாசலத்தில் சிலகாலம் தங்கியிருந்து, நித்தியமுங் காலந்தப்பாது கோணநாயகருடைய பாதார விந்தங்களைப் பூசை செய்து வணங்கிவந்தார். ஒருநாள் கோண

நாயகர் வரராமதேவர் பேரில் திருவிழிக்கடைபரப்பி, அன்பனே! நீ இத் திரிகோணாசலத்தின் மகத்துவத்தையறிந்து, இவ்விடம் வந்து மிகுந்த பத்தியுடன் நாடோறும் நம்மைத் தரிசனஞ் செய்து வருகின்றாய். ஆனால், இனி உனது தேசத்திற்குச் சென்று, சத்துருக்களை வென்று, சகலசம்பத்துங் குன்றாமலிருந்து இராச்சிய பரிபாலனஞ் செய்து, பின்பு நமது பதவியில் வந்து சேருவாயாக என்று திருவாய்மலர்ந்தருளினார். அதைக் கேட்ட வரராமதேவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, பின்னுஞ் சிலநாளிருந்து சுவாமி தரிசனஞ் செய்துவந்தார். அதன் பின்பு, மிகுந்த திரவியங்களையும் பலவித இரத்தினாபரணங்களையும் மலையின் கீழாகவிருந்த ஒரு கூவலிற் சேமித்து, அத்திரவியங்கள் இவ்வளவென்றெழுதப்பட்ட ஒரு செப்பேட்டையும் அதில் வைத்துவிட்டு, திரிகோணாசலத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து, கோணநாயகரிடம் விடைபெற்றுக்கொண்டு, சோழமண்டலம் போய்ச் சேர்ந்து, மனுநீதி குன்றாமல் கோணநாயகருடைய திருவடிகளை மறவாத சிந்தையுடன் இராச்சியபரிபாலனஞ் செய்துவந்தார். அக்காலத்தில், கோணநாயகருடைய அனுக்கிரகத்தினால் வரராமதேவரின் மனைவி கருப்பமுற்றுப் பத்துமாதமுஞ் சென்றதன்பின்பு, நவக்கிரகங்களும் கோணகேந்திரங்களில் ஆட்சி உச்சமாய் இருக்கச் சுபலக்கினத்தில் ஓர் ஆண்மகவைப் பிரசவித்தாள். அஃதறிந்த வரராமதேவர் பிராமணர் முதலியவர்களுக்கு அன்ன, சொர்ணங்களை அள்ளியிறைத்து, கோணநாயகருடைய கிருபையினால் நமக்குக் கிடைத்த பாக்கியம் இது என்று சொல்லி, குழந்தையை இருகையாலும் எடுத்து, பூரணசந்திரோதயம் போல விளங்கும் முகத்தை உற்றுப்பார்த்தார். அப்போது குழந்தையின் நெற்றியில் விலங்கின் கொம்பு போன்ற ஒரு சிறு கொம்பு உண்டாயிருப்பதைக் கண்டு, குளக்கோட்டன் என்னும் நாமந் தரித்து, மிகுந்த பரிவுடன் வளர்த்து வந்தார். ஐந்து வயது சென்றதன் பின்பு, வேதம் ஆகமம் ஸ்மிருதி முதலியவைகளையும், ரத, கஜ, துரக, பயிற்சிகளையும், தனுர்வித்தைகளையும் கற்பித்தார். அப்போது குளக்கோட்டன் மற்றும் நூல்கள் எல்லாவற்றினும் பதிநூல்களையே மிகுந்த கவனமாகப் படிப்பாராயினர். சில காலஞ் சென்றதன் பின்பு ஒருநாள் சூரிய குலத்து அரசர்களின் குருவாகிய வசிட்டமுனிவர் வரராமதேவருடைய கொலுமண்டபத்துக்கு வந்தார். அதுகண்ட அரசர் ஆசனம் விட்டெழுந்து போய், அவருடைய பாதங்களை வணங்கி, அழைத்து வந்து, ஓர் ஆசனத்தில் இருத்தி பின்பு தனது மனைவியையும் குளக்கோட்டனையும் அழைப்பித்து, முனிவருடைய பாதங்களை வணங்கிப் போகும்படி கட்டளையிட்டார்.

அவர்களும் அப்படியே செய்து, விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள். அதன் பின்பு, வசிட்டமுனிவர் வரராமதேவரை நோக்கி, கேளும் இராசனே! கோணநாயகருடைய கிருபையினால் உமக்குக்கிடைத்த புத்திரன் சாமுத்திரிக நூல்களிற் சொல்லப்பட்ட முப்பத்திரெண்டு லக்ஷணங்களும்

அமைந்தவனாகவும் வாலைப்பருவம் அடைந்தவனாகவும் இருப்பதனால், காலதாமதஞ் செய்யாமல் அவனுக்கு முடிசூட்டி, இராச்சியபாரத்தை ஒப்பு விக்கக் கடவாய் என்றார். அதுகேட்ட அரசர் மிகுந்த சந்தோஷம்கொண்டு, சுபமுகூர்த்தம் வைப்பித்து, பட்டணத்தை அலங்காரஞ் செய்வித்தார். பின்பு முகூர்த்தத் தினத்தில் இரத, கஜ, துரக, பதாதிகளும், மந்திரி, பிரதானிகளும் இருபக்கத்திலும் சூழ்ந்து நிற்க, சப்த சமுத்திரங்களும் ஏகோபித்து ஒலித்தாற் போலப் பேரிகை முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, அந்தணர் ஆசீர்வாதம் செய்ய, சகலவித ஆடம்பரத்துடன் வசிட்டமுனிவர் தனது இருகரத்தினாலும் நவரத்தினக் கிரீடத்தை எடுத்து குளக்கோட்டனுடைய சிரசில் தரித்து ஆசீர்வதித்தார். பின்பு, குளக்கோட்டமகாராசன் சிம்மாசனத்தை விட்டெழுந்து வசிட்ட முனிவரையும் தாய் தந்தையரையும் நமஸ்கரித்தான். அப்போது வசிட்டமுனிவர் குளக்கோட்டுமகாராசனுக்கு வாழ்த்துதல் செய்துகொண்டு தன் ஆச்சிரமம் போய்சேர்ந்தார். அதன் பின்பு, குளக்கோட்டு மகாராசன் இராச்சியப்பரிபாலனம் செய்துவரும் நாளையில் வரராமதேவர் இகவாழ்வை நீத்து கோணநாயகருடைய பாதாரவிந்தத்தை அடைந்தார். அப்போது குளக்கோட்டு மகாராசன் பிதாவுக்குச் செய்யவேண்டிய ஈமைக்கிரியைகள் அனைத்தையும் விதிப்படி செய்துமுடித்து, பின்பு பிரசைகள் எல்லாரும் புகழ்ந்து வாழ்த்தொலி செய்யும்படியாக எட்டுணையேனும் மனுநீதி குன்றாமல் செங்கோல் செலுத்தி இராச்சியபரிபாலனம் செய்துவந்தான்.

# குளக்கோட்டுமகாராசா திரிகோணாசலத்தில் திருப்பணி செய்துமுடித்த சரித்திரம்

பின்பு சோழமண்டலத்திலுள்ள ஒரு பிராமணர் சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் தலங்களெங்குந் திரிந்து சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு, திரிகோணாசலத்தக்கு வந்து, கோணலிங்கரையும் பிடியன்ன மென்னடையம்மையையுந் தரிசித்துப் பின்பு மலைச்சாரலில் இறங்கிப் படுத்து நித்திரைசெய்தார். அவ்வேளையில் ஒரு பூதமானது வந்து வேதியனைத் தட்டி எழுப்பி, நீர் யாவர்? எங்கிருந்து வருகிறீர் என்று வினவிற்று. அப்போது பிராமணர் பூதத்தை நோக்கி, நான் சோழ மண்டலத்தில் இருப்பவன் சிவதலயாத்திரை செய்துகொண்டு, கோண லிங்கரைத் தரிசிக்கும் பொருட்டு இவ்விடம் வந்தேன் என்று சொன்னான். அவ்வேளையில் பூதமானது பிராமணனை நோக்கிச் சோழமண்டலத்தை அரசு செய்துவந்த வரராமதேவர் இவ்விடம்வந்து சுவாமிதரிசனம் செய்துகொண்டு போகும்போது, இம் மலையின் கீழுள்ள ஒரு கூவலில் அனேக திரவியங்களை சேமித்துவைத்து அக்கூவலைப் பாதுகாத்துக்கொள்ளும்படி எனக்குக் கட்டளையிட்டுப் போனார். இச்சங்கதியை வரராமதேவருடைய பிள்ளைகளுக்குத் தெரிவிப்பாய் என்று சொல்லிப் போயிற்று. பின்பு, பிராமணர் சிலநாள் இருந்து கோண லிங்கரைத் தரிசித்து விடைபெற்றுக்கொண்டு, சோழமண்டலத்துக்குச் சென்று, பூதம் சொல்லிய யாவற்றையும் குளக் கோட்டு மகாராசனுக்கு விபரமாகச் சொன்னார். அப்போது குளக் கோட்டு மகாராசன் திரிகோணாசலத்தை தரிசனம் செய்யவேண்டும் என்று தம் உள்ளத்தில் தீர்மானித்து, மந்திரிகளை நோக்கி, யான் திரிகோணாசலத்துக்குப் போய் கோணநாயகரைத் தரிசித்து, அவ்விடத்தில் ஒரு திருப்பணியையும் செய்து முடிக்கவேண்டியிருப்பதால் அதற்கு வேண்டும் எத்தனங்கள் செய்து பிரயாணப்படுங்கள் என்று கட்டளை யிட்டான். அப்போது மந்திரிகள் மனநிறைவின்படி கையினால் செய்து முடிக்கும் திறமையுடையவர்களும், சிற்பநூல் வல்லவர்களுமாகிய உலககுரு ஆசாரி, சித்திரகுரு ஆசாரி, சதுர்வேதகுரு ஆசாரி, அட்சரகுரு ஆசாரி, வாமதேவகுரு ஆசாரி என்னும் ஐந்து ஆசாரிமார்களையும் அழைத்துக் கொண்டு, வேண்டிய திரவியங்களையும் ஒரு மரக்கலத்திலேற்றி, சேனைத்தளங்களையும் பிரயாணத்துக்கு ஆயத்தப்படுத்தி, அரசனுக்குத் தெரிவித்தார்கள். கோணநாயகருடைய பாதாரவிந்தம் என்னும் தெப்பத் தினால் பிறவியாகிய சமுத்திரத்தைக் கடக்கப்போகின்ற குளக்கோட்டு மகாராசன், மிகுந்த சந்தோஷம் கொண்டு, சகலரோடும் மரக்கலத்தில் ஏறி கோணநாயகர் எழுந்தருளியிருக்கும் சமுத்திரக்கரையில் வந்திறங் கினார். பின்பு குளக்கோட்ட மகாராசன் சிரசின்மேல் கூப்பியகையுடன்

கோணமலையை மும்முறை வலம்வந்து, பாவநாசத் தீர்த்தத்தில் இறங்கி ஸ்நானம் செய்துகொண்டு, திருக்கோயிலினுட் சென்று அட்டாங்க நமஸ் காரம் செய்து, அனற்படுமெழுகென மனமிகவுருக உரோமஞ்சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரிய பரவசம்கொண்டு, சிலநாழிகை வரைக்கும் கோண நாயகருடைய பாதங்களை வணங்கி நின்று, பின்பு தனது பிதாவாகிய வரராமதேவர் பொன் நிரப்பி வைத்திருக்கும் கூவலை நாடிப்போனார். அப்போது, பூதமானது எதிர்கொண்டு வந்து, இராசனே! உமது பிதாவானவர் இக்கூவலில் மிகுந்த திரவியங்களைச் சேமித்துவைத்து, இச்செப்பேட்டையும் என்கையில் தந்து, காவலாக வைத்துப் போனார். ஆகையால் இத்திரவி யத்தையும் செப்பேட்டையும் ஏற்றுக்கொள்ளுமென்று சொல்லி ஒப்பித்தது. அதன் பின்பு, குளக்கோட்டு மகாராசன் தனது முதன் மந்திரியை நோக்கி, ஆதியாகிய கோணநாயகரும் பிடியன்னமென்னடையம்மையும் எழுந்தருளி யிருப்பதற்கு, இந்திரலோகத்திலு மில்லையென்று சொல்லத்தக்க ஒரு கோயிலைக் கட்டி முடிக்கக்கடவாயென்று கட்டளையிட்டான்.

அப்போது மந்திரி மிகுந்த சந்தோஷங்கொண்டு, முன்பு இராவண னால் கோணமலையில் வெட்டித்திறந்திருக்கும் இடத்தில் ஒருபகுதியை உலகத்தவர்கள் எக்காலமுங் காணும்படியாக விட்டு, மற்றப்பங்கைக் கற்களினால் அடுக்கிக் கட்டியடைத்துப் பின்பு சுபமுகூர்த்தத்தில் அத்திவார மிட்டு, சாதிக்கற்களினால் தளவரிசை இசைத்து, ஆகாய கங்கை, மாவலி கங்கை, காவேரி கங்கை என்னும் மூன்று கங்கையும் சந்திக்கும் சுழிமுனை யில் நவரத்தினங்களினால் முக்கோணமாக ஒரு சபையைக் கட்டி முடித்து, பொற்றக்கட்டினால் மேற்றளம் இசைத்து அதன் மேற் கற்பலகை பரவி, நடுவனாக பூகம்பழப் பிரமாணமான ஒரு துவாரம் விட்டு, அதன் மேல் தூபிக்குச் சொன்ன அங்கிஷைப்படி தூபி செய்துமுடித்து பொற்சிகரமும் வைத்து, பின்பு முக்கோண சபையின் நடுவனாக இரத்தினங்களினால் ஒரு சிங்காசனமியற்றி, அதன் நடுவிலும் பூகம்பழம் அளவானதோர் துவாரம் விட்டு, சிங்காசனத்துக்கு இருபக்கத்திலும் இரண்டு தூண்டாமணி விளக்கு விதிப்படி செய்வித்துத் தூக்கி பின்பு அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலிய மண்டபங்களையும் விநாயகர், சுப்பிரமணியர் முதலிய தேவர்களுக்கு ஆலயங்களையும், திருமஞ்சனசாலை, யாகசாலை, பாகசாலை, புட்பசாலை, வாகனசாலை, விழாமண்டபம் முதலியவைகளையும் இரத்தினப் பிரகாசமாக விதிப்படி கட்டிமுடித்து, ஐந்து வீதியும் திருத்தி, பாவநாசச் சுனையையும் வெட்டிப் படித்துறைகளும் கட்டி, தாமரைத் தடாகங்கள், கூவல்கள், பிரமாலயங்கள், மடங்கள், அன்னசத்திரங்கள், நாற்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், குளக்கோட்டு மகாராசன் வசிப்பதற்கு மாளிகை, சந்திரகாந்த மேடை, முதலியவைகளையும் செய்துமுடித்து, நந்த வனங்களையும், உண்டுபண்ணி, ஐந்துமாவனத்தைச் சுற்றி மதிலுங்கட்டி,

நாலுவாயிலும் விடுத்து ஒவ்வொரு வாயிலிலும் ஆகாயத்தை அளாவும் படியாக நாலு கோபுரம் கட்டிச் சிகரங்களும் வைத்து, மதிலுக்குப் பிற்பக்கத்தில் தெப்பக்குளமும் வெட்டி அக்குளத்திற்கு மேற்குத் திக்கில் நின்ற வெள்ளை வில்வவிருக்ஷத்தடியில் தெப்பத் திருநாளுக்குக் கோண நாயகர் வந்து வீற்றிருப்பதற்கு அலங்காரமான ஒரு மண்டபமும் கட்டி முடிப்பித்தான்.

அதன்பின், கோணநாயகரையும், பிடியன்னமென்னடையம்மையையுந் திருக்கோயிலுள் வைத்துப் பிரதிஷ்டைசெய்வதற்கு, குளக்கோட்டு மகாராசன் தங்குலகுருவாகிய வசிட்டமுனிவரை வரும்படியாக நினைத்தான். அப்போது வசிட்டமுனிவர் அவ்விடம் வந்து கும்பாபிஷேகம் செய்வதற்கு சுபமுகூர்த்தம் வைத்து குளக்கோட்ட மகாராசனுக்குத் தெரிவிக்க அரசன் அளவிடற்கரிய சந்தோஷம் கொண்டு, வீதிகள் எங்கும் பூம்பந்தர்கள் இட்டு வாழைகள் கட்டி பூரண கும்பங்களும் பாலிகைகளும் வைத்து, விளக்கேற்றி சொர்ண லோகம் போல்ச் சிங்காரஞ் செய்வித்தான். அதன்பின்பு வசிட்டமுனிவர் கும்பாபிஷேகத்திற்கு செய்ய வேண்டிய கிரமங்கள் அனைத்தையும் விதிப்படி செய்துமுடித்து, தேவர்கள் புட்பமாரிபெய்ய, முனிவர்கள் வாழ்த்தொலிசெய்ய மங்கள வாத்தியங்கள் முழங்க; விபூதி, பஞ்சாக்ஷர, ருத்திராக்ஷத்தின் மேன்மை விளங்க, சிவனடியார்களின் வினைகள் நீங்க, தான தர்மங்கள் ஓங்க; குளக்கோட்டு மகாராசன் மனமானது மகிழ்ச்சியில் தேங்க; சைவ சமயம் தழைத்தோங்க, கோணநாயகரையும் பிடியன்னமென்னடையம்மை யையும் இரத்தின சிங்காசனத்தின் மீது ஸ்தாபித்து, வேத விதிப்படி கும்பா பிஷேகம் செய்து; பின்பு விநாயகர், சுப்பிரமணியர் முதலிய தேவர்களையும் அவரவர்களுக்குக் கட்டப்பட்ட ஆலயங்களில் வைத்து பிரதிஷ்டைசெய்து, குளக்கோடடு மகாராசனுக்கு ஆசீர்வாதம் செய்து, வசிட்டமுனிவர் தமது இருப்பிடத்துக்குப் போனார்.

அதன்பின்பு, குளக்கோட்டு மகாராசன் ஆகம விற்பனராகிய பாசுபதர்களை பூசைக்கு நியோகித்து, நாளொன்றுக்கு இரண்டவண அரிசியும் மற்றும் பொருளும் குறைவறக் கொடுத்து, ஆறுகாலப் பூசையும் நடத்துவித்து, சந்தோஷ உளத்தனாயிருக்கும் நாளையில், திருவிழாக்காலம் சமீபித்தது. அப்போது குளக்கோட்டு மகாராசன் நவரத்தினங்களால் குயிற்றப்பட்ட திருவாபரணங்கள், சுடர் திருவாசிகை முதலிய திருவாசிகைகள் கணக் கில்லாத சத்திரசாமரங்கள் அழகு பொருந்திய ஐந்து தேர் பொற்கேடகங்கள் முதலியவைகளையும் செய்வித்து சுபமுகூர்த்தத்தில் துவசாரோகணம் செய்வித்து, அங்குரார்ப்பணம் யாகம் முதலிய மற்றும் அங்கங்கள் எல்லாம் சிறக்க, பலவித வாத்தியங்கள் ஒலிக்கக், குடை கொடி ஆலவட்டம் நிழற்ற, சாமரையிரட்ட, சிவனடியார்கள் ஹரஹர என்று சொல்லுஞ் சொல்லானது

நெற்குற்றுதல், தீர்த்த மெடுத்தல், எரிதுரும்புதவுதல், திருக்கோயிலுட் பணிவிடை முற்றுஞ் செய்தல் முதலியவைகளாமென்று சொல்லி, அவர்களில் ஐந்து குடிமனுஷருக்குப் பண்டாரத்தாரென்னும் பட்டமுங் கொடுத்துக் கோணநாயகர் சந்நிதியிற்றொழும்பு செய்யவிடுத்தார்.

அதன்பின்பு, திருநெல்வேலியிற் சிவபெருமான் கோயிலிலிருந்து முதன்மை செலுத்திவந்த மனுஷரில் ஒரு குடியையழைத்து, அவருக்குக் கனகசுந்தரப்பெருமாளென்னும் பட்டஞ்சூட்டி, கட்டுக்குளப்பற்று முற்றையும் அவருக்குச் சுதந்திரமாகக் கொடுத்து, குளக்கோட்டு மகாராசா அவருக்குச் சொன்னதாவது; நீர் கோணநாயகரின் உற்சவகாலங்களிற் கையிற் காப்புக் கட்டி, முன்னீடு செலுத்தி, விழாநடத்துவித்தலும், திருவாபரணங்களையும் மற்றுந் திரவியங்களையும் பாதுகாப்பதுமேயாம்; என்று சொல்லி, திருவாபரணங்கள் இன்னதென்றும், திரவிய இருப்பு இவ்வளவென்றும் பதியப்பட்ட "பெரியவளமைப் பத்திரம்" என்னுஞ் செப்பேட்டையும் அவர்கையிற் கொடுத்து, இனிமேல் கோணநாயகருக்கு வருந்திரவியங்களின் கணக்கை இதிற் பதிந்து வரவேண்டுமென்று கட்டளைசெய்து, உங்கள் மனுஷர் திருநெல்வேலிச் சிவபெருமான் கோயிலில் முதன்மைசெலுத்தி வருவது போலவே நீர் கோணநாயகர் கோயிலிலிருந்து முதன்மை செலுத்தி வருவீராக வென்று சொல்லி, நிலாவெளியென்னுங் கிராமத்திற் குடியிருத்தி வைத்தார்.

கனகசுந்தரப்பெருமாளின் வம்சத்தவர்கள் திருக்கோணாசல நகரிலும், கட்டுக்குளப்பகுதியில் குச்சவெளியென்னுங் கிராமத்திலும், கொட்டியாபுரப் பகுதியில் சம்பூர், கிளிவெட்டி என்னுமிடங்களிலும் தற்காலத்திலு மிருக்கிறார்கள். இதில் குச்சவெளியிலிருப்பவர்கள்தான் தம்பலகமம் கோணநாயகர் கோயில் முன்னீடு செலுத்தி வருகின்றார்கள். "பெரியவளமைப் பத்ததி" என்னுஞ் செப்பேடும் அவர்கள் வசத்திற்றானே இருக்கின்றது.

அதன்பின்பு, குளக்கோட்டுமகாராசா காஞ்சிபுரத்திலுள்ள புலவரொரு வராகிய சிவசிதம்பரப்பெருமாளென்பவரை அழைப்பித்து, சித்திரவித்தாரப் புலவரெனப் பட்டமுங் கொடுத்து, கம்பைச் சாத்திரம் என்னும் ஏட்டையும் அவர்வசங் கொடுத்து, நீர் எப்போதும் கோணநாயகருக்கு முன்பாக நின்று திராவிடவேதத்தைப் பண்ணோடு பாடவேண்டுமென்று சொல்லி, கொட்டியாபுரப் பகுதிக்கு அழைத்துப்போய், அப்பகுதியில் நீர் குடியிருப்பதற்குத் தகுந்த ஓரிடத்தைத் தெரிவு செய்து கொள்ளுமென்று சொல்லிப் பலவிடங்களையும் அவருக்கு காட்டியும், அவர் பிரியப்படாமல், பின்பு தமக்கு விருப்பமான ஓரிடத்தைக் கண்டு, இவ்விடம் நமக்குச் சம்பூர்ணமான இடமென்று சொல்லிய போது, அவ்விடத்திற்றானே அவரைக் குடியிருத்தி வைத்தார். அந்நாள் துவக்கம் அக்கிராமத்துக்குச் சம்பூர் எனப் பெயர் வழங்கிவருகின்றது.

குளக்கோட்டு மகாராசராற் கொடுக்கப்பட்ட கம்பைச்சாத்திரம் இப்போதும் புலவன்வம்சத்தாரிடம் இருக்கின்றது.

இவ்விதமாகக் கோணநாயகர்கோயிற் றொழும்புகள் செய்வதற்குக் குடிசனங்களை நியமித்து, தத்தம் பணிகளை அவரவர் செய்து வருகின்ற ஒழுங்கைக் கண்டு, குடிசனங்கள்மேற் குளக்கோட்டுமகாராசா மிகுந்த அன்பைவைத்துப் பாதுகாத்துவரும் நாளில், ஒருநாள் குளக்கோட்டு மாகாராசா இக்குடிசனங்களுக்கிடையில் நமக்குப் பிற்காலம் யாதேனுங் கலகமுண்டாகுமாயின் நடுவுநிலைமையாக நீதிசெலுத்தக்கூடிய ஒருவரில்லாவிடில் ஒருபோது கோயிற்றொழும்புக்கும் இடையூறு நேரிடக்கூடு மென்று தன்னுள்ளே சிந்தித்து, பாண்டிய ராசாக்களிருந்து அரசு செய்த மதுரைப் பட்டணத்திலிருந்து, சந்திரகுலத்தில் வந்தவதரித்த திருமலைநாடன் என்னும் ஒருவரை அழைத்து வந்து, "தனியுண்ணாப் பூபாலவன்னிமை" யென்னும் பட்டமுஞ் சூட்டி, குளக்கோட்டு மகாராசா வன்னிமையை நோக்கிச் சொல்லுவார்: கேளும் வன்னிமையே! நீர் பஞ்சமா பாதகங்களையும் விலக்கி, பரதாரங்களைத் தாயாகக்கருதி, தஞ்சமென்றவர்களுக்குத் தண்ணருள் புரிந்து, தன்னுயிர் கோல மன்னுயிரையும் பாதுகாத்து, துட்டநிக்கரக சிஷ்ட பரிபாலனம் என்பதைக் கைக்கொண்டு, கோணநாயகர் கோயிற்றொழும்பாளர் சகலருக்கும் முதலாகவிருந்து திருக்கோணாசலநகரை அரசுசெய்யக் கடவாயென்று சொல்லி இரத்தினசிம்மாசனத்தில் இருத்திவைத்தார்.

திருமலைநாடன் தனியுண்ணாப் பூபாலவன்னிமை மற்றும் வன்னி மைகள் சகலரும் திருக்கோணாசலநகரிற் குடியிருந்தவிடத்துக்கு இப்போதும் பூபாலக்கட்டு என்று பெயர் வழங்கி வருகின்றது.

பின்பு ஒருநாள் பாசுபதர்கள், தனியுண்ணாப் பூபாலவன்னிமை, கனகசுந்தரப்பெருமாள், சித்திரவித்தாரப்புலவன், தானத்தார், வரிப்பத்தார் முதலாக மற்றுஞ் சகலரையுங் குளக்கோட்டு மகாராசா வசந்தமண்டபத்துக்கு வரும்படிசெய்து அவர்களை நோக்கிச் சொன்னதாவது: "ஒருவன் பூவுலகின் கண் பிறந்து ஏகசக்கிராதிபதியாகி உலகம் முழுவதையும் அரசுசெய்து இந்திர போகத்தை யனுபவித்திருந்தாலும், அதனால் உண்டாகும் பயன் யாதுமில்லை. சிவபெருமானுடைய பாதங்களை நமஸ்கரித்து, அவருக்குத் திருத்தொண்டு செய்வானாயின் இம்மையிற் புகழையும் மறுமையில் முத்தியையும் அடைவானென்பது சத்தியம். இதுநிற்க, கோணநாயகருடைய சந்நிதியில் நீங்கள் நடத்தவேண்டியவைகளை யான் விபரமாகச் சொல்லு கின்றேன். அவ்விதம் எக்காலத்தும் நடத்திவரவேண்டியது. அவை யாதெனில்: ஒவ்வொருநாளும் கோணநாயகர் எழுந்தருளியிருக்கும் இரத்தினசபையி னுள்ளாகப் பசுநெய்யூற்றி, ஆயிரந் தீபமேற்றி, ஆலயங்களடங்கலுக்கும்

பதினாயிரம் விளக்கேற்றி, சந்தனம் கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களைப் பன்னீரிற் கரைத்து வீதியெங்குந் தெளித்து, பூரண கும்பங்கள் வைத்து, முளைப்பாலிகை பரப்பி, வாழை கமுகு நாட்டி, தோரணங் கட்டி, வீதியெங்கும் அலங்கரித்து, குங்குமப்பூ கோரோசனை கஸ்தூரி முதலிய திருமஞ்சனத் திரவியங்களரைத்துப் பன்னீரிற் கரைத்து கோணநாயகருக்கும் பிடியன்னமென்னடையம்மைக்குந் மற்றுந் தேவர் களுக்கும் அபிஷேகஞ்செய்து, பற்பல நிறமுள்ள பட்டுப் பீதாம்பரங்களையும் இரத்தினாபரணங்களையும் அணிவித்து, பரிமளச்சுகந்த புட்பமாலைகளை யுஞ்சாத்தி, விநாயகருக்கு வெள்ளிக்கிண்ணத்தில் ஆறுதளிகையும், சுப்பிரமணியக் கடவுளுக்குப் பொற்கிண்ணத்திற் பன்னிரண்டுதளிகையும் கோணநாயகருக்கும் தேவிக்கும் தங்கக்கிண்ணத்தில் அறுபத்துநாலு தளிகையும், மற்றுந் தேவர்களுக்கு ஐம்பொற்கிண்ணத்தில் நூற்றிருபத்தெட்டுத் தளிகையும், முன்னூறு கிண்ணத்தில் பிடியமுதும் பழவர்க்கங்களும், தங்கக் காளாஞ்சியில் தாம்பூலமும் வைத்து நிவேதித்து, தீபதூபங்கொடுத்து பின்பு, மகாமண்டபத்துக்கு வந்து, அவ்விடத்தில் ஒருமுழ நீளமும் அகலமும் உயரமும் உள்ளதாகச் சாதத்தைச் சொரிந்து தட்டி, அதைச் சுற்றி இருபத்தேழு பிடிசாதம் வைத்து, நெய்யிற்றோய்த்து ஐந்துதிரி கொளுத்தி அவ்வன்னக்குவியலிற் குத்தி, பால் பழம் பணிகாரவகை முதலாக மற்றும் நிவேதனத்துக்குரிய பொருட்களெல்லாவற்றையும் அவ்விடம் படைத்து, எங்கும் வாசனை கமழும்படி தூபங்களிட்டு, தீபாராதனை செய்து, சோடச உபசாரமுங் கொடுத்து, அர்ச்சனை செய்து, மகுட ஆகமப்பிரகாரம் பூசை நடத்த வேண்டியது. ஒவ்வொரு வருடத்திலும் உற்சவம் நடத்தி, பங்குனி உத்தரத்தில் ரதோற்சவம் நடத்த வேண்டியது. இப்படியே எக்காலத்திலும் நித்திய நைமித்திகங்கள் குறைவின்றி நடாத்திவருவீர்களாயின் கோண நாயகருடைய திருவருள் எத்துணையாகுமோ அத்துணைப் பாக்கியத்தை நீங்கள் அனுபவிப்பீர்கள்" என்று சொல்லி, பின்பு தனியுண்ணா பூபால வன்னிமையை நோக்கி, கட்டுக்குளப்பகுதி நாட்டிலிருப்பவர்களிடம் வருட மொன்றுக்கு ஆறு அவண நெல்லும், கொட்டியாபுரப் பகுதியிலிருப்பவர் களிடம் வருடமொன்றுக்கு நூறு அவண அரிசியும், எப்போதும் கோயிலுக்குச் செலவாகும். பழம் பாக்கு வெற்றிலை பால் தயிர் நெய் இருப்பை நெய் புன்னை நெய் முதலியவைகளும் வாங்க வேண்டியது. இருப்பை புன்னைப் பருப்புகளைக் கொட்டியாபுரப் பகுதியிலுள்ள இறையாத தீவென்னுமிடத்திற் செக்காட்டி எண்ணைய் எடுத்துக் #கெவுரிமுனையிலுள்ள ஓடக்காரனிடம் அந்நாட்டவர்கள் ஒப்பிக்க வேண்டியது. அவர்களால் அனுப்பப்படும் எண்ணெய், ஆநெய் முதலியவைகளைக் கோயில் வாயிலுக்குக் கிழக்குப் பக்கமாகக் கட்டி யிருக்கும் ஏழு கிணற்றிலும் விட்டுவைக்க வேண்டியது.

---

# கெவுரிமுனையென்பது இப்போது கெவுளியாமுனையென வழங்குகின்றது.

இதுவன்றி, ஆடை, ஆயம், கடல் வரத்துக்களுங் கோணநாயகருக்கே உரித்தாகும். மாறா மடைபாயுந் திருக்குளத்தையுங் கட்டி வயல்வெளி களையுந் திருத்தி எனக்காக அல்லது எனது வம்மிசத்தார்களுக்காக விடவில்லை. ஆதிநாயகருக்காகவே விட்டிருக்கிறேன். அனேக திரவியங் களையும் இருப்பில் வைத்திருக்கிறேன். அவைகளில் எட்டுணையேனுந் திருடினவர்களும், அவர்களுக்கு உதவி செய்தவர்களும், நாணத்தினால் அல்லது பாக்கிய மிகுதியினால் தங்கள் தொழும்பைச் செய்யாமல் கூலியாள்விடுத்துச் செய்வித்தவர்களும் இம்மையில் வறுமையுற்றுச் சந்ததியற்றுப் பொல்லாத வியாதிகளாற் பீடிக்கப்பட்டு மனவருத்தத்தோடு அலைந்துதிரிந்து, மறுமையில் எண்ணிலாத நரகங்களில் விழுந்து வருந்துவார்கள். இது சத்தியம்! சத்தியம்!! என்று சொல்லி, பின்பு தனியுண்ணாப் பூபாலவன்னிமையையும், கணகசுந்தரப் பெருமாளையும், சித்திரவித்தாரப் புலவனையும் நோக்கி, எனக்குப் பின்பு கயவாகு மகாராசன் இவ்விடம் வந்து கோணநாயகரைத் தரிசித்து இன்னும் அநேக விளை நிலங்களையுந் திருத்திக் குளங்களையுங் கட்டிக் கோணநாயகருக்காகவே விடுவான். அவன் வரமுன்பு பாசுபதர்கள் இறந்து விடுவார்கள். பின்பு பிராமணர் பூசை செய்வார்கள். அதன்பின்பு, இன்னும் அநேக ராசாக்கள் வந்து மிகுந்த திரவியங்களை இருப்பில் வைத்துச் சுவாமி தரிசனஞ்செய்து போவார்கள். அப்போது காலபேதத்தினால் பொய் களவு கொலை முதலிய பஞ்சமாபாதகங்களும் மிகும். அக்காலம் நீசர்கள் இலங்கையை அரசு செய்வார்கள். அப்போது கோணநாயகரைக் கொண்டு போய்க் கழனி மலையில் வைத்துப் பூசைசெய்து வணங்கக்கடவீர்கள் என்று சொல்லி, பின்பு சகலருக்கும் விடைகொடுத்தனுப்பினார். அதன்பின்பு, ஒருகாலத்தில் இவ்வருமானங்களிற் குறைவு கண்டாலும் கோணநாயகருக்கு நித்திய நைமித்திகங்கள் குறைவில்லாமல் நடைபெறுவதற்காக, மத்தளம் நாகம் பல்லவம் வெள்ளைக்கல் என்னும் திருக்கோணமலைக்கு நான்கு திசைகளிலுமுள்ள நான்கு மலைகளில் தொகையான திரவியங்களை இருப்பாக வைத்து, தேவதைகளைக் காவலாக நிறுத்தி, இத்திரவியங்கள் யாவுங் கோணநாயகருக்குச் சுதந்திரமான தென்று கற்களில் வரைந்து வைத்து, பின்பு கோணநாயகருடைய பாதங்களை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, ஆடகசௌந்தரியை விவாகஞ்செய்தற் பொருட்டு, மந்திரிமார் முதலிய சகலருந் தன்னைச் சூழ்ந்துவர உன்னாச்சிகிரிப் பட்டணம் போய்ச் சேர்ந்தார்.

# குளக்கோட்டு மகாராசா மணம்புரிந்த சரித்திரம்

பின்பு குளக்கோட்டு மகாராசா ஆடகசௌந்தரியை வேத விதிப்படி விவாகஞ்செய்து, சிலகாலம் உன்னாச்சிகிரிப் பட்டணத்திலிருந்து, பின்பு கோணநாயகரைத் தரிசிக்க வேண்டுமென்னும் எண்ணம் மேற்பட்டதனால், ஆடகசௌந்தரியையும் அழைத்துக் கொண்டு, காடு மலை ஆறுயாவுங் கடந்து, திருக்குளத்தில் வந்து சேர்ந்தார்கள். அப்போது ஆடகசௌந்தரி தோழிப் பெண்களுடன் திருக்குளத்தில் இறங்கிப் புனல் விளையாடி, பின்பு, போகும் போது குளக்கட்டில் ஓரிடஞ் சற்றுத் தாழ்ந்திருப்பது கண்டு, இவ்விடம் தாழ்ந்து விட்டதென்று இராசகுமாரத்தி தன்கையாற் றொட்டுக்காட்டி, பின்னால் வந்த தாதியர்கள் கற்களையடுக்கி மண்வெட்டிக் கொட்டிச் சில் நிமிஷங்களுக் குள்ளாகப் பள்ளமானது நிமிரும்படி உயர்த்திக் கட்டினார்கள். (அவ்விடத்திற்கு இப்போதும் “பெண்கள் கட்டு” என்று பெயர் வழங்கி வருகின்றது.) சில நிமிஷங்களில் அவ்வேலையைப் பெண்கள் செய்து முடிப்பாராயில், இராச குமாரத்தியுடன் வந்த பெண்களின் பெருக்கத்தை யாமெம்மாத்திரமென்று சொல்லக்கூடும். பின்பு, குளக்கோட்டு மகாராசாவும் நாயகியும் அவ்விடம் விட்டு நீங்கித் தம்பலகமத்துக்கு வந்து, விளை நிலங்களின் சிறப்பையுங் கண்டு, அம்மார்க்கமாகவே திருக்கோணாசலத்துக்கு வந்து, இருவரும் பாவநாசத் தீர்த்தத்தில் மூழ்கி, கோயிலுட்சென்று, கோணநாயகரையும் பிடியன்னமென்னடையம்மையையும் மற்றும் தேவர்களையும் வணங்கி விடைபெற்றுக் கொண்டு உன்னாச்சிகிரிப் பட்டணத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். பின்பு குளக்கோட்டு மகாராசா அவ்விடத்திற் சில காலம் இருக்கும் போது, ஆடகசௌந்தரி கருப்பமுற்று, பத்துமாதமும் சென்றதன் பின் ஓர் ஆண்மகவைப் பெற்றாள். அப்புத்திரனுக்கு இராசசிங்கன் எனப் பெயரிட்டு, பருவகாலத்தில் வித்தியாரம்பம் செய்வித்து, அன்பாக வளர்த்து வருங் காலத்தில், ஊழ் வலிப்படி ஆடகசௌந்தரி சிவபதமடைந்தாள். அதன் பின்பு, குளக்கோட்டு மகாராசா புத்திரனோடு சிலகாலமிருந்து, வாலைப் பருவமானவுடன் மணிமுடிசூட்டிப் பட்டாபிஷேகஞ் செய்து, இராச்சிய பரிபாலனத்தை அவனிடம் ஒப்புவித்து விட்டு, திருக்கோணா சலத்துக்கு வந்து சேர்ந்தார்.

# குளக்கோட்டு மகாராசா சிவபதமடைந்த சரித்திரம்

பின்பு, குளக்கோட்டு மகாராசா ஒருநாள் காலையிலெழுந்து, பாவநாசத் தீர்த்தத்தில் மூழ்கி, பீதாம்பரப் பட்டணிந்து, வீபூதி உருத்திராக்ஷந் தரித்து, விதிப்படி அனுட்டானம் முடித்து, பிராமணர்களுக்கு அன்ன சொர்ண தானங் கொடுத்து, தனியுண்ணாப் பூபாலவன்னிமை முதலாக மற்றுஞ் சகலருக்கும் வேண்டிய திரவியங்களையும் பூஷணங்களையுங் கொடுத்து, பின்பு வாசனை பொருந்திய புட்பங்களாய்ந்து கையிலெடுத்துக் கொண்டு கோபுரவாயிலையணுகி, இடபதேவரிடம் விடைபெற்று, கோணநாயகரையும் பிடியன்னமென்னடையம்மையையும் பிரதக்ஷணஞ் செய்து, பின்பு சுவாமி சந்நிதியில் வந்து நின்று, மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரிய இராகத்துடன் பலவாறான தோத்திரங்களைச் சொல்லி, சுவாமியி னுடைய பாதங்களிற் புட்பங்களைச் சொரிந்து நமஸ்கரித்து, சுவாமீ! பிறவி யாகிய சமுத்திரத்தில் விழுந்து வருந்திக் கிடக்கின்ற நாயினுங் கடையனாகிய என்னைத் தடுத்தாண்டு அருள்பாலிக்க வேண்டுமென்று பின்னும் அட்டாங்கமும் பூமியிற்றோயும்படி வணங்கினார். அப்போது கோணநாயகர், குளக்கோட்டு மகாராசாபேரிற் திருவிழிக்கடைபரப்பி அருள்பாலிக்க, இரசவேதையினால் இரும்பு பொன்னாவதுபோலக் குளக்கோட்டு மகாராசா அன்புருவாகி அனல்படுமெழுகென மனமிகவுருகிப் பேரின்ப சமுத்திரத்தி லமிழ்ந்தி, ஆனந்தபரவசமாக நின்று, சுவாமீ! உடல் பொருள் ஆவி என்னும் மூன்றும் தேவரீருக்குரிய தாகையால் இந்தக்ஷணமே ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சொல்லிப் பிரார்த்தித்தார். அப்போது குளக்கோட்டு மகாராசாபேரில் கோணநாயகர் கிருபைகொண்டு, தமது திருப்பாதங்களின் கீழ் சதாகாலமும் ஒரு தாமரை மலராக இருக்கும்படி அனுக்கிரகித்தார். பின்பு, பாசுபதர்களும் வன்னிமை முதலிய மற்றுஞ் சகலரும் கோயிலுட் சென்ற குளக்கோட்டு மகாராசா இன்னும் வெளியே வராதிருப்பது யாது காரணமென்று எங்குந் தேடிப்பார்த்தார்கள். ஓரிடத்திலாவது மகாராசனைக் காணாததினால் மிகுந்த வியாகூலங் கொண்டிருக்கும் போது, பாசுபதர்கள் கோயிலுட் சென்று, கோணநாயகர் எழுந்தருளியிருக்கும் இரத்தினசபையின் வாயிலில் நின்று எட்டிப்பார்த்த போது, கோணநாயகரின் திருவடியின் கீழ் ஒரு தாமரைமலரானது புதிதாக அலர்ந்திருப்பதைக் கண்டு, வெளியே வந்து, சகலருக்குந் தெரிவிக்க, எல்லோரும் குளக்கோட்டு மகாராசானுக்குக் கிடைத்த அரிய பதவியை நினைந்து நினைந்து பேரானந்த சமுத்திரத்தின் மூழ்கிப் பின்பு கோணநாயகருடைய திருத்தொண்டுகளைச் செய்து வாழ்ந்திருந்தார்கள்.

# கயவாகுராசன் சரித்திரம்

அதன் பின்பு கயவாகுராசனென்பவன் அநுரதபுரியிலிருந்து அரசுசெய்து வரும் நாளையில், திருக்கோணாசலத்துக்கு மூன்று நாழிகை தூரத்திலுள்ள நிலாவெளியூருக் கருகாயுள்ள தாமரைத்தடாகத்திற் கோணநாயகர் கோயிற் சைவர்கள் சிலர் போய்ப் பூப்பறித்த போது, நிலாவெளி மலையிலிருக்கும் விகாரையிலுள்ள சமணர்கள் சிலர் புட்பம் எடுக்கப்படாதென்று தடுத்தார்கள். (அத்தாமரைத் தடாகமும் விகாரையுந் தற்காலமு மிருக்கின்றன.) சைவர்கள் அவர்கள் சொல்லைக் கேளாமல் அவர்களை அடித்துத் துரத்திவிட்டுப் புட்பங்கள் ஆய்ந்து கொண்டு திருக்கோணாசலத்துக்கு வந்தார்கள். சமணர்கள் அநுரதபுரத்துக்குப் போய்க் கயவாகுராசனுக்கு நடந்த சங்கதி களைச் சொன்னார்கள். முன்பு சைவ சமயத்திலிருந்து பின்பு சமண சமயத்திற் பிரவேசித்தவனாகிய, கயவாகுராசன் மிகுந்த கோபங்கொண்டு, இப்போது நான் அவ்விடம் போய்க் கோயிலையும் இடித்துத்தள்ளி, அவ்விடத்திலுள்ள சகலரையும் சிரச்சேதஞ் செய்கின்றேனென்று சொல்லிக்கொண்டு, சேனை தளங்களுடன் புறப்பட்டு, காடு மலை யாவற்றையுந் தாண்டி மிகுவிரைவில் வந்து திருக்குளக்கட்டை அடைந்தான். அப்போது சடுதியில் கயவாகு ராசனுக்கு இரண்டு கண்ணும் பார்வையில்லாமற் போனது. அவ்வேளையிற் குருடனாகிய கயவாகுராசன் மிகுந்த வியாகூலத்தை அடைந்தான். அரசனுடன் கூடவந்த சமணகுருமார் சிலர் மாந்திரீகத் தொழிலாலும் ஔடதப் பிரயோகங்களாலும் கணப்பொழுதிற் சோஸ்தப் படுத்துகிறோம் என்று சொல்லிச் செய்தும் சித்திபெறாததினால் மௌனமாய் இருந்துவிட்டார்கள். அப்போது சிவபெருமான் ஒரு பிராமண வேடங்கொண்டு அவ்விடம் வந்து, கயவாகுராசனை நோக்கி, நீ கோணநாயகருடைய கோயிலை இடிப்பே னென்ற சொற் குற்றத்தினாற்றான் உனக்குக் கண்ணொளி மறைந்தது. ஆனால் இவ்வீபூதியை உனது நெற்றியிற் பூசுவையேல் பார்வை யுண்டாகு மென்று சொல்லித் தமது திருக்கையினாற் பையிலிருந்து விபூதியை யள்ளி அரசன்கையிற் கொடுத்தார். அரசன் இரண்டுகையினாலும் அவ் வீபூதியை வாங்கி, கோணநாயகரைத் தோத்திரஞ் செய்து நெற்றியிற் சாத்தியவுடன், ஒருகண் பார்வை உண்டாயிற்று. அப்போது கயவாகுராசன் பிராமணனுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். அவ்வேளை பிராமணவடிவாகவந்த சிவபெருமான் மறைந்தருளினார். அதைக்கண்ட கயவாகுராசன், ஆனந்தப் பரவசனாகி எளியேனாகிய என்னை ஒரு பொருட்டாக எண்ணி, பிராமண வேடங்கொண்டு இவ்விடம் வந்து எனக்கு கண்பார்வையைத் தந்தருளியவர் சிவபெருமானேயன்றி வேறொருவர்அல்லரென்று தீர்மானித்து, தன்னுடன் வந்தவர்களை நோக்கி, உலகத்துக்குக் கருத்தாவாகிய சிவபெருமான் ஒருவரே தெய்வம், அவர் அருளிய வேதமே வேதம். எச்சமயத்திற்கும்

மேலான சைவசமயமே சமயம். அச்சிவபெருமான் ஒருவரே ஆன்மாக்களுக்கு மலபரிபாகஞ்செய்து முத்தியளிக்கவல்லவர் என்று சொல்லிச் சிவபெருமானைப் பலவாறாகத் தோத்தரித்து, திருக்குளத்தின் சிறப்புக்களையுந் தன் ஒருவிழியாற் கண்டு மகிழ்ச்சிகொண்டு, சிவபெருமானுடைய கிருபையினால் தனக்குக் கண் தழைத்தவிடத்திற்கு கண்டழையூரென்றும், திருக்குளத்துக்குக் கண்டழைக்குளம் என்றும், பெயரிட்டு, அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தம்பலகமம் வந்து, வயல் வெளிகளின் சிறப்பையுங் கண்டு சந்தோஷமுற்று, கோணநாயகர்பேரிற் கொண்ட அன்பானது பின்னின்று பிடித்துத்தள்ள மிகவிரைவில் வந்து திருக்கோணாசலச் சமுத்திரக்கரையை யடைந்து, கோணநாயகர் கோயிற் பொற் சிகரங்களைக் கண்டவுடன் பூமியில் விழுந்து அட்டாங்க நமஸ்காரஞ் செய்தான். அப்போது, கயவாகு ராசனுக்கு மற்றக்கண்ணும் பார்வைபெற்றது. ஆதலால், அவ்விடத்திற் கண்டழைக்கல்லு என்று பெயரிட்டான். (இப்போதும் திருக்கோணநகரில் ஒரு பகுதியை கண்டழையென்று வழங்கிவருகின்றார்கள். கயவாகு மகாராசன் கோணநாயகர் கோயிலுக்குத் தீங்குசெய்ய வருகிறானென்பதைக் கேள்விப்பட்ட பாசுபதர்கள் அவன் வருமுன்னரே சமுத்திரத்திற் பாய்ந்து உயிர்துறந்துவிட்டார்கள். பின்பு கயவாகுராசன் திருக்கோணநகரில் தனது சேனைகளை நிறுத்தி கோணநாயகர் சந்நிதியுட் சென்று, பாவநாசதீர்த்தத்தில் இறங்கி ஸ்நானஞ்செய்து, கோயில்வாயிலில் நின்று, ஏழையேனையுமொருபொருட்படுத்தி, பிரம விட்டுணுக்களுந் தேடியுங் காணாத திவ்விய மலர்ப்பாதமானது பூமியிற் படும்படியாக நடந்துவந்து, எளியேனுக்குக் கண்பார்வையுங் கொடுத்தருளிய கடவுளே! எனது ஆணவமிகுதியினாற் தேவரீருடைய கோயிலை இடிப்பேனென்று சொல்லிய சொற் குற்றத்தை மன்னித்து, எளியேனை யடிமைகொண்டு கிருபை புரியவேண்டுமென்று பலவாறான தோத்திரங்களைச் சொல்லி நமஸ்கரித்தான். பின்பு கயவாகு ராசன், தனியுண்ணா பூபாலவன்னிமை முதலாக மற்றுஞ் சகலரையும் நோக்கி, இன்னேரம்வரையிலும் பூசை நடவாதிருப்பது யாதுகாரணத்தினாலென்று வினவினான். அதற்கு உத்தரமாக கனகசுந்தரப் பெருமான் கயவாகு ராசனை நோக்கி, தாங்கள் இக்கோயிலுக்குத் தீங்கு செய்ய வருகிறீரென்பதைப் பாசுபதர்கள் அறிந்து அச்சங் கொண்டு சமுத்திரத்தில் விழுந்திறந்து விட்டார்கள். ஆதலாற் பூசை செய்வதற்கு வேறொருவரு மில்லையென்று சொன்னார்கள். அதைக்கேட்ட கயவாகுராசன் ஆற்றொணாத் துயரமடைந்து, திருக்கோணசலேஸ்வரா! நாயினுங் கடையேனாகிய என்பொருட்டால் தேவரீருக்குப் பூசையில்லாமற் போக நேரிட்டதே! இதற்கு யாது செய்வேன்! என் செய்வேனென்று சத்தமிட்டுக் கொண்டு பூமியில் விழுந்து அயர்ந்தான். அப்போது கோணநாயகர் ஒரு பிராமணவடிவமாகக் கயவாகுராசனுக்குச் சொர்ப்பனத்திற் றோன்றி, ராசனே! நீ கவலைகொள்ள வேண்டாம். பாசுபதர்கள் தங்கள் ஊழ்வலிப்படி இறந்து விட்டார்கள். இப்போது

சதுர்வேத விற்பன்னராகிய இரண்டு பிராமணர் மகுட ஆகமங் கையிற் கொண்டு சமுத்திர மார்க்கமாகத் தெப்பத்தில் வருகிறார்கள். அவர்களை நீ போய் எதிர்கொண்டு கைகொடுத்திறக்கி வந்து பூசையை நடத்துவிப்பா யென்று சொல்லி மறைந்தருளினார்.

அப்போது கயவாகு ராசன் விழித்தெழுந்து, மனக்கவலை நீங்கி, தான் கண்ட சொப்பனப்படியே இரண்டு பிராமணர் தெப்பத்தில் வருவதைக் கண்டு ஆனந்தங் கொண்டு, சமுத்திரக்கரைக்குப்போய், தெப்பம் வந்து சேர்ந்தவுடன், ஒருவருக்கு வலக்கையையும், ஒருவருக்கு இடக்கையையுங் கொடுத்து இறக்கிவந்து, வலக்கையைக் கொடுத்தழைத்தவருக்கு வேதநாயக முதன்மை என்றும், இடக்கையைக் கொடுத்தழைத்தவருக்கு சைவநாயக முதன்மை என்றும் பட்டமுங்கொடுத்து, இருபாகை முதன்மைகளென் றழைத்து, இருவரையும் நோக்கி, சுவாமிகாள்! ஆதியாகிய கோணநாயக ருக்கு இரண்டுகாலப்பூசை நடத்துவது தவறிப்போனமையால், அதற்குண்டான பிராயச்சித்தஞ் செய்து பூசையை நடத்துங்கள் என்று சொன்னான். அப்போது பிராமணர் இருவருஞ் சமுத்திரத்தால் வந்த தோஷம் நீங்கும் பொருட்டு, பாவநாசத் தீர்த்தத்தில் மூழ்கி, அனுட்டானஞ் செய்து கொண்டு, திருக்கோயி லுட்சென்று, கோணநாயகரை வணங்கிக் கொண்டு, பிராயச்சித்தஞ் செய்து முடித்து, பின்பு மகுட ஆகமவிதிப்படி பூசைசெய்தார்கள். கயவாகு ராசனும் கோணநாயகரைத் தரிசனஞ் செய்து மகிழ்ச்சி கொண்டிருந்தான். அதன் பின்பு கயவாகு ராசன், தெப்பத்தில் வந்த பிராமணர் இருவருக்கும், சமுத்திரத் தில் விழுந்து இறந்த பாசுபதர்களின் பிள்ளைகளாயிருந்த இரண்டு பெண் களை விவாகஞ் செய்வித்து, அவர்களுக்கு வேண்டிய பூஷணாதி திரவியங் களைக்கொடுத்து, கோணநாயகருடைய பூசையை நடத்துவித்தான். அப்போது "பிராமணர் இருவரும் அரசனை நோக்கி, நாங்கள் இவ்விடத்தில் தனிக்குடியாக இருப்பதால் எங்களுக்கு நன்மை தீமை வருங்காலம் நாங்கள் என்ன செய்வோமென்று கேட்க, அரசன் அவர்களைப் பார்த்து, அவைகளைக் குறித்து நீங்கள் அஞ்சவேண்டாம். உங்களுக்கு நன்மை தீமை சம்பவித்த காலங்களில் தானத்தார் வரிப்பத்தார் இருவரும் அப்பணிவிடைகளைச் செய்வார்களென்று சொல்லி, அரசன் தானத்தார் வரிப்பத்தார்களைப் பார்த்து, இவர்களுக்கு வாழ்வு தாழ்வு வருங்காலங்களில் அப்பணிவிடைகளை நீங்களே செய்யவேண்டு மென்று சொல்லி, அவரவர் இன்ன இன்ன தொழும்புகள் செய்ய வேண்டு மென்று கட்டளைசெய்து, அக்கட்டளைகளை ஒரு செப்பேட்டில் எழுதிப் பிராமணர் கையிற் கொடுத்தான்.

அதன்பின்பு ஒருநாள் கயவாகு ராசன் திருவீதியைச் சுற்றிக் கொண்டுவரும் போது மலையின் கீழாக மிகுந்த சத்தம் உண்டாவதைச் செவிசாய்த்துக் கேட்டு, யாது காரணத்தினால் இம்மலையின் கீழ் மிகுந்த

சத்தம் உண்டாகின்றது? என்று வினவினான். அப்போது பிராமணர் அரசனை நோக்கி, ஆகாயகங்கை, மாவலிகங்கை, காவேரிகங்கை இம் மூன்றும் பாய்ந்து செல்லுகின்ற சுழிமுனையிற் கோணநாயகர் தேவிசமேதராக எழுந்தருளியிருக்கின்றார். அம் மூன்று கங்கையுஞ் சுவாமியைப் பிரதக்ஷணஞ் செய்து பாயும். அக்கங்கைகளில் தேவர்கள் முனிவர்கள் வந்து தீர்த்தமாடிக் கோணலிங்கரையுந் தேவியையும் பூசைசெய்து போவார்கள். இப்போதும் அவர்கள் வந்து தீர்த்தமாடுகிறாகள். அதனாற்றான் இவ்வொலி உண்டா கின்றது என்று சொன்னார்கள். அரசன் அதைக்கேட்டு மனமகிழ்ச்சி கொண்டு, பிராமணரை நோக்கி, நீங்கள் என்ன பிரயாசமெடுத்தாயினும் அத் தீர்த்தங் களை மொண்டு கொண்டு வந்து கோணநாயகருக்கு அபிஷேகம் செய்ய வேண்டுமென்று சொல்ல, பிராமணரும் அதற்கிசைந்து, பொற்குடங்களை எடுத்துக்கொண்டு, மலையின் கிழக்குப் பக்கத்தில் உள்ள குகை வழியே சென்று தீர்த்தம் எடுத்துவந்து, கோணநாயகருக்கு அபிஷேகஞ் செய்தார்கள். பின்பு கயவாகு மகாராசன் சிலகாலம் திருக்கோணாசலத்திலிருந்து, கோண நாயகருக்கு அதிகமாக இரத்தின பூஷணாதிகளையும் பீதாம்பரங்களையும் சம்பாதித்து, அறை முதலில் இருப்பாக வைத்து, ஆயிரத்து முன்னூற் றைம்பது அவண நெல்விதைப்புத் தரையையும் திருத்தி, குளங்களையும் கட்டி அவ்விடங்களிற் குடிகளையும் இருத்தி, குளக்கோட்டு மகாராசன் நாளொன்றுக்கு இரண்டவண அரிசி நிவேதனத்துக்கு நியமித்திருப்பதை அறிந்து தன் உபயமாக நாளொன்றுக்கு ஓர் அவண அரிசி சேர்த்து, நாளொன்றுக்கு மூன்று அவண அரிசி நிவேதனத்துக்கு நியமித்து, வடக்கு கரம்பகம், தெற்கு சங்கமக்கண்டி, கிழக்கு வங்காளக்கடல், மேற்கு முனீச்சரம் ஆகிய இந்நான்கு எல்லைக்குட்பட்ட இடங்களால் வருகின்ற வருமானி யங்களில் பத்தில் எட்டுப்பங்கு கோணநாயகருக்கும் இரண்டு பங்கு பிராமணர்களுக்கு மென்று நியமனஞ் செய்து, முன்னிருந்து செப்பேட்டிலும் வரன் முறையாக எழுதி, சொல்லப்பட்ட நாலு எல்லைக்கும் எல்லைகல் நாட்டி, கோயிலதிகாரி முதலாக மற்றுஞ் சகலருக்கும் வேண்டிய திரவியங் களையுங் கொடுத்து, கோணநாயகர் திருவிழாக்காலத்தில் எழுந்தருளி வருவதற்குப் பொற்கேடகங்களுஞ் செய்துவைத்து, பங்குனி உத்தரத் திருநாளுங் கண்டு சந்தோஷமடைந்து, தனியுண்ணா பூபாலவன்னிமை முதலாக மற்றுஞ் சகலரையும் நோக்கி, நீங்களும் உங்கள் சந்ததிகளும் கோணநாயகருக்கு எக்காலத்திலாவது தொழும்பு செய்யாது விடுவீர்களாயின் வறுமையினாலும் நோயினாலும் வருந்துவீர்களென்று சொல்லி, பின்பு கோணநாயகரிடம் விடைபெற்றுக்கொண்டு தன் இருப்பிடம் போய்ச்சேர்ந்தான்.

# நளச்சக்கரவர்த்தி சரித்திரம்

அதன் பின்பு, நிடத நாட்டிலிருந்து அரசு செய்த நளச் சக்கரவர்த்தி, திருக்கோணாசலத்தின் பெருமையைக் கேள்வியுற்று வந்து, பாவநாசதீர்த்தத்தில் மூழ்கி, கோணநாயகரையுந் தேவியையும் தரிசனஞ் செய்து, விலைமதித்தற்கரிய மரகதரத்தினம் பதித்த ஒரு #முக்கோணப் பதக்கமுஞ் சாத்தி, இன்னுமனேக திரவியங்களும் அறைமுதலில் இருப்பாகவைத்து, செப்பேட்டிலும் கருகுலகணக்கிலும் பதிப்பித்து, பின்பு கோணநாயகரிடம் விடைபெற்றுக் கொண்டு, நிடததேசத்துக்குப் போனார்.

# மாருதப்புரவீகவல்லி சரித்திரம்

பின்பு உத்தரதேசத்திலிருந்து மாருதப்புரவீகவல்லி என்னும் இராசகுமாரத்தி தனது முகம் குதிரைமுகத்தை ஒத்திருந்ததாற் சோழமண்டலத்திலுள்ள தீர்த்தங்களில் மூழ்கியும் சிவஷேத்திரங்களைத் தரிசித்தும் விரதாதிகளை நோற்றும் அம்முகரூபம் மாறாதிருந்ததினால், மிகுந்த வியாகூலங் கொண்டிருக்கும்போது, ஈழ மண்டலத்திலுள்ள கீரிமலைத் தீர்த்தத்தில் நீ போய் ஸ்நானஞ் செய்வாயானாற் சோஸ்தமடைவாயென்று சொப்பனங் கண்டு, அப்படிக்கு அவ்விடம் வந்து தீர்த்தமாடி, சுயரூபம் பெற்று, அவ்விடம் நின்று நீங்கித் திருக்கோணாசலத்துக்கு வந்து சுவாமிதரிசனஞ் செய்து, விடைபெற்றுக்கொண்டு உத்தரதேசத்துக்குச் சென்றாள்.

# புவனேகவாகு சரித்திரம்

அதன் பின்பு, புவனேகவாகு என்னும் அரசன் திருக்கோணாசலத்தின் பெருமையைக் கேள்வியுற்று வந்து, பாவநாசதீர்த்தத்தில் படிந்து, கோணநாயகரைத் தரிசித்து, அனேக திரவியங்களையும், நகைகளையும் அறைமுதலில் வைத்து, கருகுலக்கணக்கிலும் செப்பேட்டிலும் பதிப்பித்து, கோணநாயகரிடம் விடைபெற்றுக் கொண்டு, தனது தேசத்துக்குப் போய் அரசு செய்திருந்தான்.

---

# நளச்சக்கரவர்த்தி கொடுத்த முக்கோணப் பதக்கம் 1854ம் தம்பலகமம் கோணநாயகர் கோயிலிலிருந்து, பின்பு களவுபோய்விட்டது. அப்பதக்கத்தின் பிற்பக்கத்தில் நளச் சக்கரவர்த்தி உபயமெனப் பெயர் வெட்டப்பட்டிருந்தது.

# பரராசசேகரன், செகராசசேகரன் சரித்திரம்

அதன்பின்பு, யாழ்ப்பாணத்திலிருந்து செங்கோல்செலுத்தி அரசுசெய்த பரராசசேகரன், செகராசசேகரன் என்னுமிருவரும், திருக்கோணாசலத்துக்கு வந்து, பாவநாசச்சுனையில் தீர்த்தமாடி இரவிகுல திலகனாகிய குளக்கோட்டு மகாராசாவைத் தடுத்தாட்கொண்ட ஸ்ரீ கமலபாதமிதுவே என்று சொல்லிக் கோணநாயகருடைய பாதங்களில் விழுந்து நமஸ்காரஞ் செய்து, அனேக இரத்தினாபரணங்களையும் திரவியங்களையும் அறைமுதலில் இருப்பாக வைத்து, கருகுலக்கணக்கிலும் செப்பேட்டிலும் பதிப்பித்து, சுவாமி சந்நிதியில் திருவிளக்கேற்றத் திரிக்கு நூல் குறைவாயிருந்தமையால், ஏழு குளமுங் கட்டி, ஏழு வெளியுந் திருத்தி, அதிற் குடிசனங்களையும் இருத்தி, எப்போதும் கோணநாயகர் கோயிற்றிருவிளக்குக்கு நூல் குறையாமல் நீங்கள் கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளைசெய்து, தமது தேசத்துக்குப் போய் அரசுசெய்திருந்தார்கள். ( அக்காலந் தொடக்கம் அவ்வூர் திரியாய் என்னும் பெயர் பெற்றுத் தற்காலமும் வழங்கிவருகின்றது.)

# ஆரியச்சக்கரவர்த்தி சரித்திரம்

அதன் பின்பு, ஆரியச்சக்கரவர்த்தி என்பவன் யாழ்ப்பாணத்திலிருந்து அரசு செய்துவரும் நாளில், திருக்கோணாசலமான்மியத்தை அறிந்து வந்து, பாவநாசச்சுனையில் தீர்த்தமாடி, கோணநாயகரையும் பிடியன்னமென்னடையம்மையையும் தரிசித்து, அனேக திருவாபரணங்களையும் திரவியத்தையும் அறைமுதலில் இருப்பாகவைத்து, கருகுலக்கணக்கிலும் செப்பேட்டிலும் பதிப்பித்து, கோணநாயகரிடம் விடைபெற்றுத் தனது தேசத்திற்குச் சென்று அரசு செய்திருந்தான்.

# தனியுண்ணாப் பூபாலவன்னிமை கனகசுந்தரப்பெருமாளிடம் திரவிய இருப்பு விசாரித்த சரித்திரம்

பின்பு ஒருநாள், தனியுண்ணாப் பூபாலவன்னிமையும் கோயிற் பூசகர்களாகிய இருபாகை முதன்மையும் ஏவலாளரை நோக்கி, நீங்கள் நிலாவெளியூருக்குப் போய், கனகசுந்தரப்பெருமாளைக் கண்டு, பெரியவளமைப் பத்ததியையும், செப்பேட்டையும் எடுத்துக்கொண்டு நாங்கள் வரும்படி சொன்னதாகச் சொல்லி, சீக்கிரம் அழைத்துவாருங்கள் என்று அனுப்பினார்கள். அவர்கள் நிலாவெளிக்குப் போய், வன்னிமையும் இருபாகை முதன்மையும் சொல்லிய யாவற்றையும் கனகசுந்தரப் பெருமாளுக்கு அறிவித்து, சீக்கிரத்தில் அழைத்து வந்தார்கள். அப்போது, தனியுண்ணாப் பூபாலவன்னிமையும் இருபாகைமுதன்மையுந் தவிர மற்றுஞ் சகலரும் எதிர்கொண்டு அழைத்துவந்து, வசந்த மண்டபத்தில் இருத்தினார்கள். அவ்வேளை, தனியுண்ணாப் பூபாலவன்னிமை கனகசுந்தரப் பெருமாளைப் பார்த்து, காற்றையும் கடலையும் கனலையும் முகிலையும் கூற்றையும் கோதையர் மனதையும் அளவிட்டாலும் உம்முடைய இருதயம் அளவிடற்கரியதா மென்று சொல்லிப் புன்முறுவல் செய்தார். அதைக்கேட்ட கனகசுந்தரப் பெருமாள் வன்னிமையை நோக்கி, தாங்கள் என்பேரில் எத்துணை அபிமானம் வைப்பீர்களோ அத்துணைப் புத்தியும் விசாரமும் எனக்கு உண்டாகும் என்று சொல்ல, வன்னிமை சந்தோஷங்கொண்டு, வரராமதேவர் முதலிய ராசாக்கள் ஆதியாகிய கோணநாயகருக்காக அறை முதலில் வைத்த பொன் எவ்வளவென்றும், நகைகள் எவ்வளவென்றும் நான் அறிய விரும்புகிறபடியால் விபரமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டார். அப்போது கனகசுந்தரப் பெருமாள் பெரியவளமைப்பத்ததியைப் பார்த்துச் சொன்னதாவது:

| | |
|---|---|
| வரராமதேவர் அறைமுதலில் வைத்த | |
| பொன் களஞ்சு ... ... | 68000 |
| பொன்நகை களஞ்சு | 634 |
| குளக்கோட்டுமகாராசா அறைமுதலில் வைத்த | |
| பொன் களஞ்சு ... ... | 80481 |
| பொன்நகை களஞ்சு | 1512 |
| கயவாகுராசன் அறைமுதலில் வைத்த | |
| பொன் களஞ்சு ... ... | 150022 |
| பொன்நகை களஞ்சு | 24000 |

| | |
|---|---|
| நளச்சக்கரவர்த்தி அறைமுதலில் வைத்த | |
| பொன் களஞ்சு ... ... | 80211 |
| பொன்நகை களஞ்சு | 2048 |
| புவனேகவாகு அறைமுதலில் வைத்த | |
| தங்கம் களஞ்சு ... ... | 100284 |
| தங்கநகை களஞ்சு | 3206 |
| பரராசசேகரனும் செகராசசேகரனும் | |
| அறைமுதலில் வைத்த | |
| பொன் களஞ்சு ... ... | 72000 |
| பொன்நகை களஞ்சு | 781 |
| ஆரியச்சக்கரவர்த்தி அறைமுதலில் வைத்த | |
| பொன் களஞ்சு ... ... | 21000 |
| பொன்நகை களஞ்சு | 1206 |
| ஊரவர்கள் கோயிற்படியில் வைத்துக் கும்பிட்ட | |
| பொன் களஞ்சு ... ... | 21000 |

இவையாவும் குகைக்குள்ளே பெரியபண்டகசாலையில் இருக்கும் இருப்பு. கருகுலக் கணக்கனிடத்திலும் இக் கணக்கு உண்டு. இதுவன்றி, நித்தியபூசைச் செலவுக்கு எடுப்பதற்கு பெரிய அறைமுதலில் இப்போது இருக்கின்ற பொன் களஞ்சு (48000). இது வெளியில் இருக்கின்ற திரவியம், இதுவன்றிக் குளக்கோட்டுமகாராசா தொகையான திரவியங்கள் வைத்திருக்கு மிடங்கள் வேறேயுண்டு. அது எவ்விடங்களெனில், திருக்கோணமலை உச்சியில் நின்று பார்க்க நாலுதிக்கிலும் தெரிகின்ற மத்தளமலை, நாகமலை, பல்லவமலை, வெள்ளைக்கல்மலை என்பவைகளேயாம். அவற்றில், மத்தள மலையில் (150000) களஞ்சு பொன் உண்டு. அதற்கு சொர்ண வைரவரும், சொர்ண கணபதியும், ஆபதோத்தாரண வைரவரும், பத்திர காளியும், நாகமலைத் தேவதைகள் அனைத்தும் சொர்ணகணபதியில் அடக்கம், கடலரசனும், கடலரசு நாயகியும், ஒன்பது லக்ஷம் வைரவர்களும் காவலாக நிற்பார்கள். இவர்களெல்லாரிலும் எண்மடங்கு பெலமுடைய பொத்தக மொட்டையனும் காவலாக நிற்பான். பல்லவமலையில் (5000000) களஞ்சு பொன் உண்டு. அதற்கு சொர்ண வைரவரும், உதிரமாகாளியும், லக்ஷம் வைரவர்களும் காவலாக நிற்பார்கள். வெள்ளைக்கல் மலையில் (400000) களஞ்சு பொன் உண்டு. அதற்கு ஆபதோத்தாரண வைரவரும், இரத்த சாமுண்டியும், இரண்டு லக்ஷம் வைரவர்களும் காவலாக நிற்பார்கள். நாகமலையில் (8800000) களஞ்சு பொன் உண்டு. அதற்கு அகோர வைரவரும், துர்க்கையும், மூன்று லக்ஷம் வைரவர்களும் காவலாக நிற்பார்கள். பல்லவமலைத் தேவதைகள் அனைத்தும் பத்திரகாளியிலடக்கம். வெள்ளைக்கல்மலைத் தேவதைக ளனைத்தும் ஆபதோத் தாரண வைரவரி

லடக்கம். மத்தளமலைத் தேவதைகளனைத்தும் இடபதேவரிலடக்கம். இவையன்றி, திருக்குளக்கட்டில் ஏழு இடத்தில் (150000) களஞ்சு பொன் உண்டு. அவையாவுக்கும் மகாகாள வைரவர் காவலாக நிற்பார். இவை யாவும் மதுரைக் களஞ்சுக் கணக்காக விருக்கும். இதுவன்றி, பாவநாசக் குளத்துக்கு உத்தரதிக்கில் ஒரு தாதகிவிருக்ஷம் உண்டு. அதனடியில் ஆறுகோணமுள்ள கல்லொன்று நாட்டப்பட்டிருக்கும். அதில் நாகரபாஷையில் எழுத்துக்கள் வெட்டப்பட்டிருக்கும். அக்கல்லின் கீழாக ஒரு செந்தூரக் கிடாரமுண்டு. அதில் அறுநூற்று நாற்பத்தெட்டுப் பலஞ் செந்தூரம் உண்டு. பன்னிரண்டு களஞ்சு இரும்பை உருக்கி, ஒருபணவெடை செந்தூரமிட்டால் ஏழுமாற்றுப் பொன்னாகும் என்று கனகசுந்தரப் பெருமாள் சொன்னார்.

(முன்சொல்லப்பட்ட மலைகளில், நாகமலையென்பது கட்டுக்குளப் பகுதியிலுள்ள குச்சவெளியென்னும் ஊரிலிருக்கின்றது. அதை நாச்சியார் மலை, வெள்ளாட்டிமலை, நாகமலை என்றும் வழங்கிவருகிறார்கள். மாசி பங்குனி மாதங்களில் அம்மலையிலிருந்து ஊறிவருகின்ற நீரருவிகள் மலையடிவாரத்திற் பாய்கின்ற உப்பாற்றில் வந்து கலக்கின்றன. அக்காலத்தில் அவ்விடத்தில் வருகின்ற நண்டுகள், மச்சங்கள் யாவும் கல்லாகப் போகின்றன. அக்கல்நண்டுகளை அவ்விடத்துள்ளவர்கள் எடுத்து வந்து விற்கின்றார்கள். அவை நீர்க்கடுப்பு முதலிய சில ரோகங்களுக்கு மிகுந்த உபயோகமான மருந்தென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். பல்லவமலையென்பது கொட்டியாபுரத்தில் இருக்கின்றது. மத்தளமலையென்பது சமுத்திரத்திலிருக் கின்ற புறாமலைக்கு வடக்குப்பக்கத்திலுள்ள மலை, வெள்ளைக்கல்மலை எவ்விடத்திலென்பது தெரியவில்லை.)

அப்போது, தனியுண்ணாப்பூபாலவன்னிமை கனகசுந்தரப் பெருமாளை நோக்கி, இராசாக்கள் கொடுத்த திரவியங்களும் திருவாபரணங்களும் எவ்விடத்தில் இருக்கிறதென்பதை விபரமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்க, கனகசுந்தரப் பெருமாள் பெரியவளமைப் பத்ததியைப் பார்த்துச் சொல்லியதாவது: ஆலயத்தின் கிழக்குவாயிலில் ஏழு கற்படிக்குக் கீழாக தெற்குப் பக்கத்தில் முக்கோணக்கல்லொன்று வைத்துக்கட்டியிருக்கும். அதனடியில் முற்கோணக் கற்கதவுண்டு. அக்கதவைத் திறந்து உட்பிர வேசித்தால் முப்பத்தாறு முழத் தாழ்வுக்கப்பால் ஒரு பண்டகசாலை உண்டு. அதில் இராசாக்கள் கொடுத்த திரவியங்கள் இருப்பாக வைக்கப்பட்டிருக் கின்றன. அதற்கு வீரபத்திரரும், ஐந்துதலைநாகமும், வைரவர்களும் காவலாக நிற்பார்கள். இவர்கள் மூத்தநயினாரிடத்திலடக்கம். வடக்குவாயிலில் ஒன்பது கற்படிக்குக் கீழ் மேற்குப்பக்கமாக அறுகோண முள்ள கல்லொன்று வைத்துக்கட்டியிருக்கும். அதன்கீழ் முப்பத்தாறுமுழத் தாழ்வுக்கப்பால் ஒரு பண்டகசாலை உண்டு. இராசாக்கள் கொடுத்த நகைகள் அங்கு இருக்

கின்றன. அதற்குப் பத்திரகாளியும் ஐயனாரும் இரண்டு துவாரபாலகர்களும் நாலுவைரவரும் காவலாக நிற்பார்கள். இவர்கள் ஆபதோத்தாரண வைரவரிலடக்கம். இதுவன்றி, கோணநாயகர் எழுந்தருளியிருக்கும் சிங்காசனத்துக்கு வடக்குப்பக்கமாக முக்கோணக்கல்லொன்று பரவுகல்லோடு பரவியிருக்கும். அக்கல்லை எடுத்தால் வாசலொன்று தோற்றும். அவ் வாயிலின் வழியாகப் பந்தவிளக்குக் கொண்டுபோக, அறுபத்து நாலுமுழ நீளத்துக்கு மிகுந்த நெருக்கமான பாதையாக விருக்கும். அதற்கப்புறம் வெகுவிசாலமான மண்டபமொன்றுண்டு. அதில், உற்சவகாலங்களில் எடுக்க வேண்டிய திருவாபரணங்களும், பட்டுப்பீதாம் பரங்களும் தங்கம் பொன் வெள்ளி முதலியவற்றால் செய்து முத்து பவழம் இவைகளாற் குஞ்சங்கள் தூக்கிய குடைகளும் ஆலவட்டங்களும் நவரத்தினமிழைத்த திருவாசிகளுமிருக்கும். திருவிழாக்காலங்களில் இவைகளை எடுக்கும்போது விநாயருக்குப் பூசைசெய்து எடுத்துக்கொள்ள வேண்டியது. சிங்காசனத்திற்குத் தெற்குப்பக்கமாக ஆறு கோணமுள்ள கல்லொன்று பரவு கல்லோடு பரவியிருக்கும். அக்கல்லை உயர்த்தினால் வாயிலொன்று தோன்றும். அவ்வாயில் வழியே பந்தவிளக்குக் கொண்டுபோக, நாற்பதுமுழத்துக்கப்பால் ஆறுமுழ அகலத்தில் ஒரு கிணறுண்டு. அதன்மேற் பலகை போட்டு அப்பாற் போக, நூற்றிருபது முழத்துக்கப்பால் மிகுந்த விசாலமுள்ள மண்டபமொன்றுண்டு. அதில், ஒரு கோடி களஞ்சு பொன்னுண்டு. அந்தத் திரவியம் கோயில்வருமானங் குறைந்த காலத்தில் எடுத்துச் செலவிட வைத்தது. எடுக்கும் போது விநாயகருக்கும், சொர்ண வைரவருக்கும் பூசை செய்து, மன்றாட்டம் பெற்று எடுக்க வேண்டியது. நித்திய நைமித்திகங்கள் குறைவின்றி நடத்தி, நாளொன்றுக்குப் பதினாறரைப் பொன் மிச்சங்கண்டு வருகின்றது. அந்தப்பொன் முழுவதும் கருகுலக் கணக்கிற் பதிந்து, கருகுலக் கணக்கனுடைய களஞ்சிய வீட்டில் இருப்பாக இருந்து வருகின்றது. குளக்கோட்டு மகாராசா முன் சொல்லப்பட்ட திரவியங்கள் யாவையும் அந்த அந்த இடங்களில் திட்டம்பண்ணி வைத்து, பெரியவளமைப் பத்ததியென்னுஞ் செப்பேட்டிற் பதித்து, எங்கள் முன்னோர் கையில் அவ்வேட்டைக் கொடுத்துச் சொல்லிய கட்டளைப்படி நாங்கள் நடந்து வருகிறோமென்று கனகசுந்தரப் பெருமாள் சொன்னார். அதைக் கேட்ட தனியுண்ணாப் பூபாலவன்னிமையும், இருபாகமுதன்மையும் அளவிடற்கரிய சந்தோஷங் கொண்டு, கனகசுந்தரப் பெருமாளுக்கு வெகுபூஷணாதி திரவியங்களுங்கொடுத்து, நிலாவெளியூருக்கு அனுப்பினார்கள். (குளக்கோட்டுமகாராசா கனகசுந்தரப் பெருமாளிடத்திற் கொடுத்த செப்பேடு "பெரியவளமைப் பத்ததி", கனகசுந்தரப் பெருமாளின் சந்ததியில் உள்ளவர்களிடம் தற்காலத்திலும் இருக்கின்றது.) அதன்பின்பு, தனியுண்ணாப் பூபாலவன்னிமை முதலாக மற்றுஞ் சகலரும் கோணநாயகருக்கு நித்திய நைமித்திகங்களில் குறைவுவராமல் நடாத்தி, அவருடைய திருத்தொண்டுகளைச் செய்து வாழ்ந்திருந்தார்கள்.

# தம்பலகமச் சரித்திரம்.

அப்படியே கோணநாயகருக்கு நித்திய நைமித்திகங்கள் குறைவு வராமல் நடந்துவருங் காலத்தில், பறங்கிக்கலக முண்டானது. அப்போது, இருபாகைமுதன்மையும் மற்றுஞ்சகலரும் குளக்கோட்டுமகாராசா முன் செப்பேட்டில் எழுதிவைத்திருக்கும் பிரகாரம் கோணநாயகர் முதலாக மற்றும் எழுந்தருளிநாயகர் சகலரையும், திருவாபரணங்களிற் சிலவற்றையும், தூப தீபம் முதலிய மற்றுஞ் சாமான்களையும் எடுத்துக் கொண்டு போய்க் கழனிமலையில் வைத்துப் பூசைசெய்து வந்தார்கள்.

அப்போது, கண்டியலிருந்து அரசுசெய்த இராசசிங்க னென்பவனுக்குக் கோணநாயகர் ஒரு பிராமணவடிவமாகச் சொப்பனத்தில் தோன்றி, நாமும் தேவியும் இப்போது கழனிமலையி லிருக்கின்றோம். நாம் எழுந்தருளியிருப்ப தற்குத் தம்பலகமத்தில் ஓர் ஆலயத்தைக் கட்டிமுடிப்பாயாக என்று சொல்லி மறைந்தருளினார். உடனே அரசன் விழித்து, இந்த வசனங்களை நம்மிடம் வந்து சொல்லியவர் கோணநாயகர்தானென்று தீர்மானித்து, வேண்டிய திரவியங்களை விடுத்து, தன்னிடம் கணக்கப்பிள்ளையாக விருந்த இப்றாம் முகாந்திரம் என்னும் தம்பன்கடவைச் சோனகனொருவனை முதலாளியாக வைத்து, இற்றைக்கு ஏறக்குறைய இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன் தம்பலகமத்தில் தற்காலமிருக்கும் கோயிலைக் கட்டிமுடித்து, கோணநாய கரையும் தேவியையும் மற்றுந் தேவர்களையும் கழனி மலையிலிருந்து எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோய்த் தம்பல கமத்தில் தான்முடிப்பித்த ஆலயத்தில் வைத்து, பிரதிஷ்டைசெய்து, நித்திய நைமித்திகங்களெல்லாம் முன்போல நடக்கும்படி திட்டம் பண்ணி, இருபாகை முதன்மை கனகசுந்தரப் பெருமாள் சித்திரவித்தாரப்புலவன் தானத்தார் வரிப்பத்தார் முதலிய சகலரையும் நோக்கி, ஆதியில் குளக்கோட்டுமகாராசா உங்களுக்குக் கற்பித்தபடி கோண நாயகருக்கு நித்திய நைமித்திகங்களை நடத்திவர வேண்டுமென்று கட்டளைசெய்து, கண்டிநகருக்குப் போய்ச் சத்துருக்களை வெற்றிகொண்டு இராச்சியபரிபாலனஞ் செய்திருந்தான்.

பறங்கிக்காரர் திருக்கோணாசலத்துக்கு வந்து, குளக்கோட்டுமகாராச னாற் கட்டப்பட்ட கோயிலையும், ஆயிரக்கான் மண்டபம் முதலியவைகளையும் இடித்து, பாவநாசக்குளத்தையும் மூடி, பின்பு கோயில் முதலிய வற்றிலிருந்த சாதிக்கருங்கற்களை எடுத்துத் தற்காலமிருக்கும் கோட்டையைக் கட்டி முடித்து, திருக்கோணாசலநகரை அரசுசெய்தார்கள். அக்காலத்திற் திருக் கோணாசலத்துக்குப் போய் பூசைசெய்யப்படாதென்று நிட்டூரமான கட்டளை செய்தார்கள். தற்காலமிருக்கும் கோட்டையின் வாசலுக்குக் கதவு

நிலையில் வைக்கப்பட்டிருக்கும் கல்லில், "முன்னங் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப் பின்னும் பறங்கி பிரிப்பான்" என்னும் பாட்டு வெட்டப்பட்டிருக்கின்றது. மற்ற இரண்டு வரிகளும் அதிகம் விளக்க மில்லாமல் அழிந்திருக்கின்றன.

# தற்கால சரித்திரம்

தற்காலத்தில் அரசு செய்யும் ஆங்கிலேயர் இந்நகரியை அரசாளத் தொடங்கிய பின்பு, சோமவாரம், சுக்கிரவாரம், திருக்கார்த்திகை, சிவராத்திரி, பங்குனி உத்தரம், ஆனி உத்தரம், மார்கழித்திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம் முதலிய புண்ணியகாலங்களில், யாவரும் தங்கள் இட்டப்படி திருக்கோண சலத்துக்குப் போய் பூசைசெய்து வணங்கி வருவதற்கு உத்தரவு கொடுத்தார்கள். அப்படியே சர்வசித்து வருடம் புரட்டாதி மாதம் வரையிலும் நடைபெற்று வந்தது. பின்பு, ஐப்பசி மாதந் தொடக்கம் மாதத்தின் முதலாம் மூன்றாம் சுக்கிர வாரங்களிலும், திருக்கார்த்திகை சிவராத்திரி மாசிமகம் என்னும் மூன்று புண்ணிய காலங்களிலும் மாத்திரம் இருநூறு சனத்துக்கு மேற்படாமல் யுத்தவீரர்களின் காவலோடு திருக்கோணாமலைக்குப் போய், பூசைசெய்து வணங்கி வரவேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார்கள். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன், இவ்வூரிலிருந்த கதிரவேலு முதலியார் என்னும் ஒரு பிரபு, ஆங்கிலேய அரசாட்சியாருடைய உத்தரவைக் கொண்டு, பறங்கிக் காரரால் மூடப்பட்ட பாவநாசக்குளத்தின் மையத்தில் ஒரு கிணற்றை வெட்டிக் கட்டிவைத்தார். ஆடி அமாவாசை முதலிய புண்ணிய காலங்களிற் சிலர் அக்கிணற்றில் ஸ்நானஞ் செய்து வந்தார்கள். பின்பு அவ்வழக்கையும் அரசாட்சியார் தடைசெய்துவிட்டார்கள். அக்கிணறு, இப்போது கோட்டையி லிருக்கும் யுத்த வீரருக்காகக் கட்டப்பட்ட வைத்திய சாலையின் பாவிப்புக்காக விடப்பட்டிருக்கின்றது. இது வன்றித் தம்பலகமத்திலிருக்கும் கோணநாயகர் கோயிலில் இப்போதும் நித்திய நைமித்திகங்களும் திருவிழா முதலியவைகளும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. பறங்கிக் கலகத்துக்குச் சிலகாலத்தின் முன் வன்னிமைகள் சந்ததியற்றுப் போனபடியால், அவ்வம்சத்தைச் சேர்ந்த பெண்கள் சிலர் திருக்கோணநகரை அரசுசெய்து வந்து, பின்பு பறங்கிக் கலகத்துடன் பெண்ணடிகளும் அற்றுப்போய்விட்டன. ஆதலால் இப்போது அரசாட்சியாரால் தம்பலகமத்துக்கு நியமிக்கப்படும் வன்னிமைகளே கோண நாயகர் கோயிற் பராபரிப்பையும் நடத்திவருகிறார்கள். இருபாகைமுதன்மை, கனகசுந்தரப பெருமாள், சித்திரவித்தாரப்புலவன், தானத்தார், வரிப்பத்தார் இவர்களின் சந்ததியார்கள் இப்போதும் குளக்கோட்டு மகாராசாவினால் தங்கள் முன்னோர்களுக்கு முற்காலத்தில் கொடுக்கப்பட்ட விளைநிலம் முதலியவை களின் வருமானங்களைப் பெற்றுச் சீவனஞ் செய்துகொண்டு, குளக்கோட்டு மகாராசன் தங்கள் தங்களுக்கு நியமித்த பிரகாரம் கோணநாயகரின் தொழும்பு களைச் செய்து வருகின்றார்கள். திருக்கோணாசலநகரில் பறங்கிக்காரருடைய கலகத்தின் பின் பதினாறு தேவாலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. குளக்கோட்டு மகாராசாவினால் தாபிக்கப்பட்ட நகரிகாவற்காளி யென்னும் பத்திரகாளிகோயில் பட்டணத்துநடுவில் இப்போதுமிருக்கின்றது.

# வெள்ளை வில்வத்தடி கோணநாயகர் கோயிற் சரித்திரம்

முற்காலத்தில் குளக்கோட்டுமகாராசா கோணநாயகருக்குத் தெப்பத்திருவிழா நடத்துவதற்கு ஒரு தெப்பக்குளத்தை உண்டுபண்ணி, அகற்குத் தெற்குப்பக்கமாக நின்ற ஒரு வெள்ளைவில்வவிருக்ஷத்தின் கீழ் தெப்பத்திருநாளுக்குக் கோணநாயகர் கோயிலிலிருந்து எழுந்தருளிவந்து வீற்றிருப்பதற்கு ஒரு மண்டபத்தையுங் கட்டினார். பறங்கிக் கலகத்தின் பின்னுள்ளவர்கள் அம்மண்டபத்தை ஒரு கோயிலாக்கி, இலிங்கப்பிரதிஷ்டை செய்து, வெள்ளை வில்வத்துக் கோணநாயகர் கோயிலெனப் பெயரிட்டு வழங்கிவந்தார்கள். அக்காலத்தில் கும்பகோணத்திலிருந்த குருசிரேஷ்ட ராகிய சங்கராச்சாரியாரவர்கள் இவ்விடம் வந்து, வெள்ளை வில்வத்தடி கோணநாயகர் கோயிலிற்றங்கியிருக்கும்போது ஒருநாள், அவ் வெள்ளை வில்வ விருக்ஷத்தை உற்றுப்பார்த்து, நீ இனி ஏன் நிற்கின்றாயெனச் சொல்லி விபூதியை அள்ளி யெறிந்துவிட்டுப் போனதன் பின்பு இவ்விருக்ஷம் பட்டுப் போனதென்று கர்ண பரம்பரையாகக் கேள்வி.

# குளக்கோட்டு மகாராசா மதுரையிலிருந்து அழைத்துவந்த திருமலை நாடான் தனியுண்ணாப் பூபாலவன்னிமை முதலாக திருக்கோணநகரியை அரசு செய்த வன்னிமைகளின் நாமங்கள்

| | | |
|---|---|---|
| திருமலைநாடான் | தனியுண்ணாப்பூபால | வன்னிமை |
| சுந்தரநாத | ” | ” |
| அரசுநிலைதவறாத | ” | ” |
| தன்தாரதார பிறர்தாரகுமார | ” | ” |
| மனுநீதிதவறாத | ” | ” |
| மண்டலநாயக | ” | ” |
| பசுபதி | ” | ” |
| இலங்கைகாவல | ” | ” |
| குணதுங்கராம | ” | ” |
| அமராபதி | ” | ” |
| சந்திரசேகர | ” | ” |
| யுவனேயகாவல் | ” | ” |
| குறும்பர்கள் கோமான் | ” | ” |
| மாற்றலர்பெருமான் | ” | ” |
| செகதுங்கபோச | ” | ” |
| கைலாசநேச | ” | ” |
| வெற்றிநாயக | ” | ” |
| தன்னாண்மைகுன்றாத் | ” | ” |
| பொன்னவராய | ” | ” |
| உத்தமமொழியான் | ” | ” |
| செல்வநாயக | ” | ” |
| வெற்றிநாயக | ” | ” |
| மருதநாயக | ” | ” |
| முருகநாயக | ” | ” |
| சுப்பிரதேக | ” | ” |

| | | |
|---|---|---|
| நல்லநாயக | தனியுண்ணாப்பூபால | வன்னிமை |
| வல்லிகாவல் | ” | ” |
| பிள்ளைநாயக | ” | ” |
| பெரியகாவல் | ” | ” |
| சிதம்பரநாயக | ” | ” |
| பரமநாயக | ” | ” |
| கதிரைநாயக | ” | ” |
| சேதுகாவல | ” | ” |

இவருக்குச் சந்ததியில்லாததினால், சந்திரகுலத்தில் வந்தவதரித்த திருமலைநாடன் தனியுண்ணாப் பூபாலவன்னிமை வம்சம் அற்றுப்போய் விட்டது. பின்பு, இரண்டு இராயரும், இரண்டு பண்டாரத்தாரும் காரைமா நகரத்துக்குப் போய், கங்கை குலாதிபர்களில் ஒரு ஆண்பிள்ளையையும், மதுரையில் திருமலைநாடன் தனியுண்ணாப் பூபாலவன்னிமையின் வம்சத்தில் ஒரு பெண்பிள்ளையையும் அழைத்துவந்து, இருவரையும் மணஞ்செய்வித்து, திருக்கோணநகரி அரசுரிமையையும் ஒப்பித்தார்கள்.

| | |
|---|---|
| செகராசநாத | பூபாலவன்னிமை |
| குருநாதராம | ” |
| உலகாண்ட | ” |
| கைலாய | ” |
| கனகராய | ” |
| படைகாத்த | ” |
| எதிரிகளிரியும் | ” |
| கணபதிராய | ” |
| ஐந்தருராம | ” |
| தருமநெறிப் | ” |
| படைவீரங்கொண்ட | ” |
| மதுரைவாசக | ” |
| தியாகராச | ” |
| கரசைகாவல | ” |
| அன்னசத்திர | ” |
| வரையாதளிக்கும் | ” |
| கதிரைமாமலைப் | ” |
| ஏகாந்த | ” |
| ஏரம்ப | ” |
| நல்லைநாத | ” |
| சொக்கநாயக | ” |

| | |
|---|---|
| சுந்தரநாத | பூபாலவன்னிமை |
| பாலகராய | " |
| வீரராமப் | " |
| குணதுங்கராம | " |
| நாகமாமணிப் | " |
| கைலாயநாயக | " |
| புவிராம | " |
| சோமநாயக | " |
| உலகநாயக | " |
| சூரிய நாயக | " |
| நந்தி நாயக | " |
| இலக்குமிநாயக | " |
| சந்திரதேவ | " |
| வெற்றிநாயக | " |
| உலகநாயக | " |
| வைரவநாயக | " |
| அரசுகாவல | " |
| திருமலைப்பெருமாள் | " |
| சிதம்பரநாத | " |
| புட்பநாயக | " |

இவருக்குப் பின் சந்ததியில்லாததினால் இராயரும் பண்டாரத்தாரும் சோழமண்டலத்துக்குப் போய், காராளகுலத்தில் ஒரு ஆண்பிள்ளையையும், தனியுண்ணாப்பூபாலவன்னிமையின் வம்சத்தில் ஒரு பெண்பிள்ளையையும் அழைத்துவந்து, விவாகம் முடித்து, திருக்கோணநகரியை அரசுசெய்யும்படி வைத்தார்கள்.

| | |
|---|---|
| காராளசிங்க | பூபாலவன்னிமை |
| நந்தியசிங்க | " |
| மதராசசிங்க | " |
| திருமலைராயசிங்க | " |
| இராமசிங்க | " |
| இலக்குமிசிங்க | " |
| சந்திரசிங்க | " |
| அடைக்கலங்காத்தசிங்க | " |
| கங்கைகாவலசிங்க | " |
| மருதநாயகசிங்க | " |
| கனகநாயகசிங்க | " |
| இலங்கைகாவலசிங்க | " |

| | |
|---|---|
| கைலாயசிங்க | பூபாலவன்னிமை |
| குமாரவேற்சிங்க | ” |
| திருவம்பலசிங்க | ” |
| பரமானந்தசிங்க | ” |
| அம்புயாபதிச்சிங்க | ” |
| சிவஞானமுத்துச்சிங்க | ” |
| சித்தநாயகசிங்க | ” |
| நாகமாமணிச்சிங்க | ” |
| சிதம்பரநாயகசிங்க | ” |
| நல்லநாயகசிங்க | ” |
| அருணநாயகசிங்க | ” |
| வீரசுந்தரசிங்க | ” |
| சொக்கநாயகசிங்க | ” |
| தருமநாயகசிங்க | ” |
| அத்திநாயகசிங்க | ” |
| முத்தையநாயகசிங்க | ” |
| பசுபதிநாயகசிங்க | ” |
| இராசரத்தினசிங்க | ” |
| எதிரிவீரசிங்க | ” |

இவருக்குப் பின் சந்ததியில்லாததினால் முன் சொல்லிய இராயரும் பண்டாரத்தாரும் மருங்கூருக்குச் சென்று, அவ்விடத்திலுள்ள காராளகுலத்தில் ஒரு ஆண்பிள்ளையை அழைத்துவந்து, திருக்கோணநகரில் வன்னிமை வம்சத்திலிருந்த ஒரு பெண்ணுக்கு விவாகஞ் செய்து அரசுரிமையை ஒப்பித் தார்கள்.

| | | |
|---|---|---|
| நடராச | குமாரசிங்க | பூபாலவன்னிமை |
| வெற்றிக் | ” | ” |
| இராமநாத | ” | ” |
| இலக்குமிநாத | ” | ” |
| நல்லைநாயக | ” | ” |
| தில்லைநாதக் | ” | ” |
| எல்லைகாவல | ” | ” |
| சாரங்கநாயக | ” | ” |
| கங்கைகாவல | ” | ” |
| இலங்கைகாவல | ” | ” |
| தனிமைநாயக | ” | ” |
| சந்திரராய | ” | ” |

| | |
|---|---|
| கைலாய | குமாரசிங்க பூபாலவன்னிமை |
| இரகுநாத | ” ” |
| சுப்பிரதேக | ” ” |
| தருமநாயக | ” ” |
| வேதநாயக | ” ” |
| கொற்றவராச | ” ” |
| தண்டுவார்மிண்டக | ” ” |
| எதிரிகள் நாயக | ” ” |
| கோமளராம | ” ” |
| திருமலைராய | ” ” |
| அடைக்கலங்காத்த | ” ” |
| படைவீரங்கொண்ட | ” ” |
| அம்புயாபதிக் | ” ” |
| சரவண | ” ” |
| சேதுநாத | ” ” |
| சித்திரமொழிக் | ” ” |
| மனுநேபநாயக | ” ” |
| ஆரியநேய | ” ” |
| குணரத்தின | ” ” |

இவருக்குப் பின் சந்ததியில்லாததினால் வன்னியவம்சத்தைச் சேர்ந்த பெண்கள் இருபத்துநான்குவருடம் அரசு செய்தார்கள். அவர்கள் நாமங்கள் காணப்படவில்லை. அதன்பின் பெண்களின் வம்மிசமும் சந்ததியற்றுப் போய் விட்டது. அக்காலத்தில் ஆரியச்சக்கரவர்த்தி திருக்கோணாசலத்துக்கு வந்து எழுபத்தைந்து வருடத்தின்பின் பறங்கிக்காரருடைய கலகமுண்டானது. அக் காலத்தில் வன்னியருடைய ஆளுகை இல்லை. இதிற் சொல்லப்பட்ட வன்னிமைகள் சகலரும் திருக்கோணாசலநகரிற் குடியிருந்த இடத்திற்கு இப்போதும பூபால கட்டு என்று பெயர் வழங்கிவருகின்றது.

# வெருகற் சரித்திரம்

பூர்வீகத்தில் வெருகற்பதியில் ஒரு சித்திரவேலானது சுயம்பாக எழுந்தருளியிருந்தது. அக்காலத்தில் இருந்தவர்கள் அதைப் பூசித்து வணங்கி வந்தார்கள். பின்பு திருநெல்வேலியிலிருந்து திருக்கோணமலையில் வந்து குடியிருந்த நல்லை நாதச்செட்டியார் என்னும் ஒருவர் கதிர்காமத்துக்குப் போகும் பொருட்டுப் பிரயாணப்பட்டுப் போய், வெருகற்பதியில் ஒருநாள் இரவு தங்கினார். அன்றிரவு சுப்பிரமணியக்கடவுள் அவருக்குச் சொப்பனத்தில் தோன்றி, அன்பனே! நீ நமக்கு இவ்விடத்தில் ஓர் ஆலயத்தைக் கட்டிமுடிக்கக் கடவாய் என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே நல்லைநாதச்செட்டி கண்விழித்து, ஆனந்தவருவி சொரியச் சந்நிதிவாயிலிற் சென்று, சுவாமி! ஏழையாகிய யான் திருப்பணி செய்துமுடிப்பது எவ்வாறென்று சொல்லிப் புலம்பி, மிகுந்த வியாகூலத்துடன் இருந்தார். மறுநாளிரவு சுவாமி அவருக்குச் சொப்பனத்தில் வந்து தோன்றி, நீ யாதுக்கும் அஞ்சவேண்டாம். இவ்விடத்தில் இருந்து நாலுநாழிகை தூரத்திலுள்ள அரிப்பு என்னுமிடத்திற் பாதைக்கருகாக ஒரு புற்றிருக்கிறது. அதன் அருகில் ஒரு மாவிலங்கைமரம் நிற்கின்றது. அப்புற்றின் பக்கத்தில் திரவியக் கிடாரங்கள் புதைந்திருக்கின்றன. அவற்றில் ஒரு திரவியக் கிடாரத்தை நீ எடுத்து வந்து திருப்பணியைச் செய்து முடிக்கக் கடவாய் என்றுசொல்லி மறைந்தருளினார். மறுநாட் காலையே நல்லைநாதச் செட்டியார் அவ்விடத்துக்குப் போய்த் தான் கண்ட கனவின்படி திரவியக் கிடாரம் இருப்பதைக் கண்டு, எடுத்துவந்து, மிகுந்த சிங்காரமாகத் தற்காலத்தில் இருக்குங் கோயிலைக் கட்டிமுடித்தார். பின்பு கும்பாபிஷேகஞ் செய்வதற்கு எத்தனித்து, எழுந்தருளி நாயகர் வேண்டுமே என்று மன வியாகூலங் கொண்டிருக்கும் போது, சித்திரவேலாயுத சுவாமியானவர் ஒருநாளிரவு நல்லைநாதச் செட்டியாருக்கு சொப்பனத்தில் தோன்றி, நாமும் தேவிமாருமாகக் கங்கைத்துறையில் எழுந்தருளியிருக்கின்றோம். எம்மைக் கொண்டுவந்து நீ கட்டிமுடித்த ஆலயத்தில் வைத்துப் பிரதிட்டைசெய்வாய் என்று சொல்லி யருளினார். பின்பு நல்லைநாதச் செட்டியார் சுவாமியுடைய கட்டளைப்படி கங்கைத் துறைக்குப் போய், அவ்விடம் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியக் கடவுளையுந் தேவிமாரையும் எடுத்துவந்து திருக்கோயிலுள் வைத்துப் பிரதிட்டை செய்துமுடித்தார். பின்பு நல்லைநாதச் செட்டியார் அநேக திரவியங்களைச் செலவிட்டு விலையேறப்பெற்ற திருவாபரணங் களையும் மற்றும் பொருட்களையுஞ் செய்வித்து, அறைமுதலில் இருப்பாக வைத்து, நித்தியநைமித்திகங்களைக் குறைவின்றி நடப்பித்துவந்தார். அதன்பின்பு கண்டிநகரை அரசுசெய்த அரசனிடம் மதித்தற்கரிய விலையுள்ள மாணிக்கங்கள் இருக்கும் என்பதை நல்லைநாதச் செட்டியார் அறிந்து, கண்டிநகருக்குப் போய், அரசனைக் கண்டு, தான் இரத்தினப்பரீட்சையில்

மிகுந்த வல்லவன் என்று அறிவித்தார். கண்டிராசன் செட்டியாரை நோக்கி, நம்மிடமிருந்து பலவித இரத்தினங்களையும் பரீட்சை செய்பவர்களுடன் நீரும் ஒருவராக இரும் என்று சொன்னார். நல்லைநாதச்செட்டியார் அதற் கியைந்து சிலகாலம் அவ்விடம் தங்கியிருந்தார். அக்காலத்தில் அரசன் ஒருநாள் சில மாணிக்கங்களைப் பரீட்சை செய்யும்படி இவரிடங் கொடுத்தான். செட்டியார் மூன்றுநாள் வரையில் அம்மாணிக்கங்களைப் பரீட்சிப்பவர் போலத் தனது பொறுப்பில் வைத்திருந்து, பின்பு ஒரு மாணிக்கத்தைக் களவாய் எடுத்துக்கொண்டு, வெருகலுக்கு வந்து சேர்ந்தார். அதை அறிந்து அரசன் மிகுந்த கோபங்கொண்டு, தூதர்களை விடுத்துச் செட்டியாரைப் பிடிப்பித்து, சிரசு தெரியும்படியாகப் பூமிக்குட் புதைத்துச் சிரசானது இடறுண்ணும்படி பட்டத்துயானையை மதங்கொடுத்து விடுங்கள என்று கட்டளை பண்ணினான். அரசன் சொற்படி யானைப் பாகர்கள் யானைக்கு மதங்கொடுத்து வந்து விட்டார்கள். பாகருடைய சொற்படி செய்கின்ற யானையானது நல்லை நாதச் செட்டியாருக்குக் கிட்டவும் போகாமற் பின்னின்று உரத்த சத்தமிட்டது. அப்போது அரசன் மிகுந்த ஆச்சரியங் கொண்டு, செட்டியாரைப் பூமியினின்றுந் தோண்டி எடுப்பித்து, அவரை நோக்கி, நீர் யார்? உமது தொழில் யாது? நீர் இருப்பது எவ்விடம்? என்று விசாரித்தான். நல்லைநாதச் செட்டியார் அரசனை நோக்கி, இராசனே! நான் திருக்கோணமலையில் வசிப்பவன். சித்திரவேலா'யுத சுவாமியின் கிருபையினால் வெருகல் என்னுந் தலத்தில் ஒரு கோயில் கட்டிப் பிரதிட்டை செய்திருக்கின்றேன். அந்தச் சித்திரவேலாயுத சுவாமிக்கு ஒரு பதக்கம் செய்விப்பதற்காகவே தங்களுடைய மாணிக்கத்தைக் களவாக எடுத்தேன் என்று உண்மையைச் சொன்னார். அப்போது அரசன் மிகுந்த சந்தோஷங் கொண்டு, செட்டியாரையும் அழைத்துக் கொண்டு வெருகற்பதிக்கு வந்து கங்கையில் இறங்கி ஸ்நானஞ் செய்து, திருக் கோயிலுட் சென்று சித்திர வேலாயுதசுவாமியையும் வள்ளிநாயகி தெய்வ நாயகியையுந் தரிசித்து, அன்பு மிகுதியினால் அநேக திருவாபரணங்களை அறை முதலில் வைத்து, சுவாமிக்குப் பதக்கம் செய்து சாத்தும்படிக்கு அம்மாணிக்கத்தையுஞ் செட்டியாரிடங் கொடுத்து, அநேக வயல் வெளி களையுந் திருத்துவித்துச் சித்திரவேலாயுத சுவாமிக்காக விட்டுக் கண்டி நகருக்குப் போய் அரசு செய்திருந்தான். பின்பு நல்லைநாதச் செட்டியார் விலையேறப்பெற்ற ஒரு பதக்கத்தைச் செய்வித்து, அதில் நடுநாயகமாக அம்மாணிக்கத்தை வைத்து இழைப்பித்துச் சித்திரவேலாயுதசுவாமிக்குச் சாத்தி மிகுந்த சந்தோஷ மடைந்தார். பின்பு நல்லைநாதச் செட்டியார் சித்திரவேலாயுதசுவாமியின் திருவடிகளை வணங்கி அவருடைய திருத் தொண்டுகளைச் செய்துகொண்டு சில காலம் இருந்து பின்பு சிவபத மடைந்தார். அப்பதக்கம் இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன் களவுபோய் விட்டது. இதுவன்றிக் கொட்டியாபுரத்தில் திருமங்கலாய் என்னுமிடத்தில் வன்னியவம்மிசத்தைச் சேர்ந்த திருமங்கலை என்னும் ஒருபெண்ணினால்

ஒரு சிவன்கோயில் கட்டப்பட்டது. பின்பு அக் கோயிலிலிருந்த சிவலிங்கத்தை அவ்விடத்தில் உள்ளவர்களும் ஒரு வன்னிமையுமாக எடுத்துவந்து கரசையம்பதிக்கு அருகாயுள்ள கங்குவேலி என்னுமிடத்தில் ஒரு கோயிலைக் கட்டி, அதில் வைத்துப் பிரதிட்டை செய்தார்கள். அது கங்குவேலிச் சிவன் கோயிலென மிகவும் பிரபல்யத்துடன் வழங்கிவருகின்றது. இதுவன்றி, சம்பூரில் ஒரு பத்திர காளி கோயிலும், இலங்கைத் துறையிலிருந்து இப்போது ஈச்சிலம்பற்றையில் எடுத்துவந்து வைத்துப் பிரதிட்டை செய்திருக்கும் செண்பகநாச்சியம்மன் என்று அழைக்கப்படும் ஒரு காளிகோயிலும், நீலாப்பனை என்னுமிடத்தில் ஒரு பத்தினியம்மன் கோயிலும் இருக்கின்றன. இம் மூன்றும் குளக்கோட்டு மகாராசா காலத்தில் உள்ளவைகளாக வழங்குகின்றன.

முற்றும்.

# கோணேசர் கல்வெட்டு

சீர்கவி இராஜவரோதயம் ஆக்கியது.

சொல்லுற்ற சீர்குளக் கோட்டுமன் சொல்லிய சொற்படியே
கல்வெட்டுப் பாடெனப் பாடினன் பாதிக தைபொருளாய்
அல்லுற்ற கண்டரின் பாதத்தை நெஞ்சி லழுத்திமிகல்
வெல்லுற்ற சீர்க்கவி ராசவ ரோதய விற்பனனே. (1)

திருமருவு மனுநீதி கண்டசோழன்
செகமகிழு மரபில்வரு ராமதேவன்
தருமருவு திரிகயிலைப் பெருமைகேட்டுத்
தானுமவன் வந்ததுவு மவன் சேய்பின்பு
மருமருவு மாலயங்கள் கோபுரங்கள்
மணிமதில்சூழ் மண்டபங்கள் மலிநீர்வாவி
கருமருவு முகினீர்சேர் திருக்குளஞ்செய்
காதையதுங் கல்வெட்டாய்க் கழறுவாமே. (2)

சொல்லரிய திரிகயிலைப் பெருமையெல்லாந்
தூயபுரா ணக்கதையிற் சொன்னதுண்டு
வல்லமைசேர் வன்னிமையு மற்றுந்தானம்
வரிப்பத்தா ராதியோர் வந்தவாறும்
நல்லதொரு பூசைவிதி நடத்துமாறும்
நடப்பதின்மே லினிநடக்கு நடத்தையாவும்
சொல்லெனவே சோதிடத்தி னிலையேகண்ட
கவிராசன் வருங்காலஞ் சொல்லுஞ்சீரே. (3)

சீரிலங்கு நாடதனா னாளொன்றுக்
கிரண்டவணச் செம்பூச்சம்பா
ஏரிலங்கு மரிசிவரக் கறியமுது
பலசெலவு மீந்தேயீசன்
பாரிலங்கு பூசைதனை நடத்துகின்றேன்
பின்பீது பகிர்வாராரென்
றேரிலங்கு குளக்கோட்டன் நாற்கால்மண்
டபத்திருந்தே யெண்ணினானால் (4)

திருந்துதிரி கயிலைவெற்பிற் சிவாலயமுங்
கோபுரமுஞ் சிறக்கநாட்டிப்
பரிந்துலகோர் பவமறுக்கும் பாவநா
சச்சுனையும் பரிவாய்ச்செய்து
தெரிந்தபுகழ்த்திருக்குளமும் வயல்வெளியுந்
திருத்தியரற் கென்னவீந்து
பரிந்தரனின் றொழும்புசெய வாள்வேண்டு
மெனநினைத்தான் பருதிவேந்தன். (5)

பருதிகுலத் துதித்தகுளக் கோட்டிராசன்
பங்குனியுத் தரம்பதினைந் தேதிதன்னில்
வரிசையுடன் சென்றுமருங் கூரிலேகி
வளவரினல் லோரைமரக் கலத்தினேற்றி
அரியதிருக் கோணமலை நாதற்கென்றே
யங்நகரி லையாறு குடியுமேற்றி
உரிமையிது வுங்கள்பர வணியாமென்றே
உரைசெய்தான் சதுர்வேத ஞானமூர்த்தி. (6)

இத்தலத்தி லரன்கயிலை யாலயத்தி
லியற்றுமறை முதலதனி லிருப்பும்வைத்து
நித்தம்வரும் வரவினொடு நிதம்பூசைக்கு
நேர்ந்திடுஞ் செலவெழுத நியமஞ்செய்து
அத்தர்முன்ன ராலாத்தி நடனமாடல்
பன்றிகுற்ற லதிகபட்டு அரசற்கீதல்
இத்தனையுந் தானத்தார் செய்வீரென்ன
வெழுகுடிக்கு ராயபட்ட மீந்தான் வேந்தன். (7)

வேந்தனின்னு மரன்றொழும்புக் காட்போதா
தெனநினைந்து மீண்டேகாரை
வாய்ந்தவள நாடுசென்று வரிபிடித்தான்
· மூவேழு குடி வாழ்வோரைச்
சேர்ந்திடப மாதமதி வீரைந்தாந்
தேதிதிங்கள் சிறந்தசோதி
ஏய்ந்தகன்னி முகூர்த்தமதி லரன்றொழும்பு
செயவிடுத்தா னிராசராசன். (8)

சந்நிதியி னீவீர்செயுந் தொழும்புமக்குச்
சவித்தார நாமுரைக்கத் தானீர்கேளும்
நன்னயஞ்சேர் பட்டாடை கொய்தல்கட்டல்
நல்லபுட்ப பத்திரங்களெடுத்தல் தூர்த்தல்
மின்னுநிறை விளக்கேற்றல் தளிசைதட்டு
முட்டிவைக ளழகுறவே விளக்கல் தீர்த்தம்
உன்னிதமா யெடுத்தல் நெல்லுக் குற்றல்சாணி
யொழுகுதல்மற் றெரிதுரும்பு முவந்தேயீதல். (9)

செய்யநட னத்திரிக்கு முட்டுவகை
கொட்டலொடு சிறக்கப்பாடல்
ஐயமற நரபெலியா டனக்கரும்பா
வாடையிட லதுவேயன்றித்
துய்யகண்ணங் கொடியேற்ற லிறக்கல்கட்டல்
சுமத்தலொடு சந்தனம தரைத்தேயீதல்
மெய்யெனவே ஆலயத்துட் பணிகளெல்லாம்
விளக்கமுடன் துப்பரவாய் விரைவாய்ச் செய்தல் (10)

நீர்பாயும் பள்ளவெளி நெல்விளையுந்
தரையவர்க்கு நிசமாயீந்து
பார்க்கரிய வைங்குடிக்குப் பண்டாரத்
தாரெனவே பவிள்சுமீந்து
வார்குலவு களபமுலைப் பிடிநடையைக்
கோணமலை வரதன்றாளை
நேர்த்தியதாய் வழிபடுசீர்க் குளக்கோட்டன்
றன்னுளத்தி னினைக்கலானான். (11)

தானம்வரிப் பத்தாரென் றிசைத்தனம்யா
மிவர்க்குறிகல் தானேவந்தால்
மானபங்கமடைய மனடுத்தீர்ப்ப
தாரெனவே மதுரைக்கேகித்
தானமதிக் குலத்துதித்த தனியுண்ணாப்
பூபாலன் தனைக்கொணர்ந்து
தேனமர்பூக் தொடைமார்பன் றிருக்கோணை
நகர்க்கரசு செய்ய வைத்தான். (12)

வைத்தபுகழ் வன்னிமையே சொல்லக்கேளாய்
மகத்தான பாசுபதர் மறையோர்தங்கள்
சித்தமது நோகாமனீதிசொல்வாய்
சிவபூசை முதலொழுக்கந் தவறினாலுங்
குற்றமென வெண்ணிமிகக் கோபங்கொண்டாற்
கோணமலை நாதரிடஞ் சொல்வர்சொன்னாற்
சுற்றுமே பிரமகத்தி வம்சமுற்றுந்
தொலையாது மற்றவர்க்குச் சொல்வேங்குற்றம். (13)

சுத்தமிகு வன்னிமையே குற்றஞ்செய்தாற்
றுலங்குவிலங் கடியுருக் குமிரேவாங்கு
நிர்த்தமிடு மடவியர்கள் குற்றஞ்செய்தா
னிறைபுனலி னிறுத்தி வைத்துத் தேங்காய்வாங்கு
மற்றமதி நுதன்மடவார் குற்றஞ்செய்தால்
மண்கடக மேற்றியடி வழமைபார்த்தே
இத்தகைய விராசாங்கஞ் செய்நீயென்றே
இரத்னமணி யாசனத்தி லிருத்தி வைத்தான். (14)

வையமகிழ் வன்னிமையே யின்னுங்கேளாய்
மனுநீதி தவறாதே கோபம்பாவம்
ஐயமற உன்தாரந் தாரமாகு
மயலகத்தோர் தாரமெல்லா நின்றாயாகும்
மெய்யையெடு பொய்யைவிடு வினைசெய்யாதே
வெறுமையுளோர்க் குதவிசெய்வா யிகல்பண்ணாதே
மையனைய கண்டர்திருக் கோணைநாதர்
மகாபூசை திருப்பணியும் வழங்கச் செய்யே. (15)

வைத்தகட்டுக் குளத்துரா ரரன்றொழும்பு
செய்யவிந்து வெளியோர்மேலோர்
அத்தர்முன்னர் காப்பணிதல் முன்னீடு
விழாநடத்த லவணமாறு
சுத்தநெல்லாங் கொப்புவித்த லடையாயத்
தீர்வைகடல் வரத்துங்கோணை
அத்தனுக்கித் தனையுமென வருள்புரிந்த
னரசர் முடி யழுத்துந்தாளான். (16)

தானதிக திருமலைக்கு நாற்காத
வழிதிருத்தித் தானுங்கோணை
மானபரற் கெனவளித்தேன் கொட்டியா
புரப்பதியோர் மகிழ்ந்தேசெய்தல்
ஆனவலர் வெற்றிலைபாக் கருங்கதலிக்
கனியுனுட னரைத்தசாந்தும்
ஊனமறு பாறயிர்நெய் யரிசியொடு
நூறவண முகந்தேயீதல். (17)

ஈதலதே ரண்டமுட னிருப்பைபுன்னைப்
பருப்பிவைக ளிறையாத்தீவிற்
சேதமற ஒப்புவிக்கச் செக்காட்டி
யெண்ணெயவர் திருந்தக்கட்டி
ஓதரிய செவுரிமுனை மீகாம
னிடங்கொடுக்க வுகந்தேகோணை
நீதமுறு கருகுலநற் கணக்கிலுள்ள
படிகிணற்றி னிறைவாயூற்றல். (18)

வாசலுக்குத் தென்கிழக்கா யெண்ணெய் நெய்குக்
கிணறேழு வரைந்துகட்டி
மாசகலத் துலாப்போட்டு வாளியிட்டு
மதில்கட்டிக் கதவுமிட்டு
ஏசகல வெண்ணெயதி காரமென
நிலமையும் வைத் திதயங்கூர்ந்து
ஓசைதிக ழெண்ணெய்நெய்க ளொருநாளுங்
குறையாத வூற்றுங்கண்டான் (19)

ஊற்றிருந்து தாதுக்குந் தாதகித்தா
ரணிமார்ப னுகந்தேகோணை
நாற்றிசைக்குந் திட்டமிட்டு நவரத்ன
மணியணையி னன்பாய்வந்து
வீற்றிருந்து பாசுபதர் வருகயாந்
திருக்குளத்தை விளங்கச்செய்ய
ஏற்றுகைக்குங் கோணமலை யிறையிடம் போய்
விடைவாங்கி யிவண் சொல்லென்றான். (20)

சொல்லவந்த பாசுபதர் திரிகயிலைப்
பரமனடி தொழுதெங்கோமான்
நல்லதிருக் குளமியற்ற விடைவாங்கி
வாருமென்றார் நாதாவென்ன
எல்லையிலா நீர்தாங்கி நீடூழி
நெல்விளையு மென்னச்சொல்ல
மல்லணையுந் திரடோளான் குளக்கோடற்
குரைக்கவவன் மகிழ்வுபூத்தான். (21)

தானதிக கணபதியே கோணமலைப்
பெருமானே சண்முகனேமாலே
நானுமொரு திருக்குளத்தை மியற்றுதற்கு
உங்களரு ணடக்கச் செய்வீர்
வானவரே யெனவணங்கி விடையும் பெற்று
மவுனமுட னிரத்தினமண்டபத்தினின்று
தேனமருந் தொடைமார்பன் சேனைசூழத்
திருக்குளத்தின் றிசைநோக்கித் திருந்தச் சென்றான்.

திருந்துகலி பிறந்தைஞ்னூற் றொருபதுட
னிரண்டாண்டு சென்றபின்னர்
புரிந்திடப மாதமதி லீரைந்தாந்
தேதிதிங்கள் புநர்தநாளில்
தெரிந்தபுக ழாலயமுஞ் சினகரமுங்
கோபுரமுந் தேரூர்வீதி
பரிந்திரத்ன மணிமதிலும் பாவநா
சச்சுனையும் பகுத்தான் மேலோன் (23)

மேலான திருக்குளமு மிதற்கடுத்த
நாலாண்டில் விளங்கச் செய்து
சேல்பாயு மாவலிநீர் வரவழைத்துத்
திசைசெல்லுஞ் சிறப்புங்கண்டு
சீலமுட னீர்மிகுதி வரவெருவி
மதகடையார் திறப்பாரென்று
பாலாழி தனிற்றுயிலும் பச்சைமுகி
றனைநினைத்தான் பருதிவேந்தன் (24)

வேந்தனுளந் தனினினைக்கப் பரந்தளிடை
துயின்மாயன் விழித்துப் பார்த்தே
ஏந்திலங்கா புரியதனிற் றிருக்குளத்துக்
கெமைநினைந்தா னிறைவ னென்றே
காந்தண்மலர்ப் பதஞ்சிவப்பக் கடுகெனவங்
கரிவரலுங் காலில் வீழ்ந்து
பூந்திருசேர் மணிமார்பா மதகினடை
திறப்பதுநின் புகழ்ச்சி யென்றான். (25)

என்றருள மாலவனு மிறையவனுக்
கஞ்சலென்றே யிலங்கைத் தீவில்
மன்றல்கமழ் செஞ்சடையான் கோணலிங்கற்
கேகுளநீ வருந்திச் செய்தாய்
இன்றமரர் முதலெவரு மடையாத
பவிள்சுபெற்றா யிறைவாவென்று
வன்றிறல்கொள் விசுவசுரூ பத்துடனம்
மதகினடை திறந்தான் மாலோன் (26)

மாலோன்மா மதகினடை திறப்பவைத்து
கரத்தோனை வலமாய்நீத்தம்
பால்போலத் திரைகொழித்துப் பழனமெங்கும்
பரவிநிற்கும் பான்மைகண்டு
ஆலால முண்டவர்க்கு மம்பிகைக்கு
மாமெனவே யகம்பூரித்துச்
சேல்பாயுந் திருக்குளநின் கிருபையினாற்
றினநடக்குஞ் செய்கை கண்டேன். (27)

கண்டருளு மாலவனே திருக்குளநின்
காவலெனக் கரியோன் சொல்வான்
எண்டிசையும் புகழ்மருவு மிபமுகனு
மெழின்முனியு மிறைவரேழும்
மண்டடல்சேர் புத்தியரு மங்கலரும்
வீரனொடு வதனனையன்
அண்டர்புகழ் வயிரவரு மிலங்கைசந்தி
காவலன் சீரண்ணமாரும். (28)

எட்டிசைமண் வெட்டிகொண்டே யேழரைச்சுற்
றாமரத்தை யினிதாய் வெட்டித்
தட்டியொரு காலாலே யெற்றியது
வீழமுன்னந் தரணிமீதில்
ஒட்டியொரு குளஞ்சமைத்தாங் குறுநீருங்
கண்டருளை யுற்றவீரன்
அட்டதிக்கும் புகழ்மருவு நீலசோ
தையன்படையு மரசன்மாரும். (29)

மாருதிநேர் முன்னோடி மாபூதர்
பப்பரரு மற்றுளோரும்
நீர்தாங்கு திருக்குளத்துக் கட்டுவழி
நில்லுமென நிறுத்திவைத்துப்
பார்தாங்கு பத்தினியைக் கன்னியரைக்
காளிதனைப் பரிவினோடு
கார்தாங்கு திருக்குளக்கட் டினையகலா
திருத்திரென்றான் கமலக்கண்ணன். (30)

நன்னயஞ்சேர் பாகிலையும் பாலடிசி
திருவிளக்கு நல்லதூபஞ்
சொன்னபடி யேதருவார் குறைவுறினுந்
திருவுளத்திற் சோர்வுவேண்டாம்
மன்னுபச்சைப் பட்டுவரின் மழையுதவுஞ்
சிவப்பு மகாவெயிலே காட்டும்
இன்னலின்றி யிருமிருபத் தெண்ணூழி
சென்றபின்யாம் வருவோமிங்ஙன் (31)

என்றவருக் கரியுரைப்ப விறைவனுமங்
கரியடியை யிறைஞ்சியேத்தப்
பொன்றிகழு முகமலர்ந்து முகமனுமங்
கிறைக்கருளிப் போன பின்னர்
அன்றிறையு மங்கலர்க்கு நூற்றறுபான்
மேதிகட்டி யழகாய் வில்லை
ஒன்றதிபா லடிசிலுடன் பாகிலையுந்
திருவிளக்கு முவந்து செய்தான். (32)

செய்யுணிதம் விளைவதற்குத் திருக்குளத்தி
னீர்தாங்கி சிறக்கக்கட்டி
ஐயமறக் காவனிற்கு மனைவர்களு
மனமகிழ வன்பாயென் றுந்
துய்யவொரு வருடமடை யொருவருடம்
பாலடிசி றுலங்கச் செய்தே
வையகம துள்ளளவுங் கோணலிங்கர்
கிருபையினால் வழங்கச் செய்தான். (33)

தானிரண்டா மிரத்தெழுநூ றவணவிதைப்
புத்தறையைத் தான்செய்வித்துத்
தேனிருக்கு மலர்க்காடு வெகுவாகத்
திருத்துமெனத் திட்டம்பண்ணிக்
கூனிருக்கு மதிநுதலாள் பிடிநடையம்
பிகைசரணங் குறித்துள் வைத்து
மானிருக்குங் கரத்தானை வலமாய்வந்
தடிபணிந்தான் மன்னர் மன்னன். (34)

மன்னவனு மனைவரையும் வருகவென
மண்டபத்தின் மகிழ்வாய்க்கூட்டி
நன்னயமா யவரவர்க்கு நன்முகம
னெடுத்துரைத்து நாதன்கோணை
அன்னவன்ற னருளாலே திருக்குளமும்
வயல்வெளிசெய் ததுவுஞ்சொல்ல
இன்னலின்றி யரகரசங் கரசிவவென்
றிறையடியை யிறைஞ்சினாரால். (35)

இறைஞ்சுகின்ற அனைவரையு மிருகையா
லுறத்தழுவி யெங்கோன் சொல்லும்
மறம்பெரிது புரிவதற்கும் அறஞ்சிறிது
செய்வதற்கும் மனமேகண்டீர்
கறங்குதிரைக் கடல்புடைசூ ழுலகமெலாந்
தனிபுரந்துங் காண்பதென்னோ
திறக்கொளுஞ்சீர்க் கோணலிங்கர் திருப்பணியும்
பூசைகளும் செய்யவேண்டும். (36)

செய்யதிருக் கோயிலெங்கும் பதினொரா
யிரம்விளக்குச் சிறக்கவையும்
மையனைய கண்டர்திரு வுட்பணிக்கா
யிரமானெய் வார்த்துவையும்
செய்யசந்தம் புனுகுபன்னீர் தனிற்கரைத்துத்
தெளித்தெங்குஞ் சிறக்கச்செய்யும்
துய்யகந்தப் புகைக்குடங்க ளிடையிடைவா
சனைகமழத் துலங்கவையும். (37)

ஐங்கரற்கு வெள்ளியினா லறுதளிசை
யறுமுகவற் கிரட்டிபொன்னால்
தங்கமதா லரன்றனக்கெண் ணெண்டளிசை
யரன்மூர்த்தஞ் சார்ந்துளோர்க்குத்
துங்கமிகு மைம்பொன்னா னூற்றிருபத்
தெண்டளிசை சொன்னோமின்னும்
இங்கதிக பிடியமுதுக் கிசைந்தகிண்ண
முன்நூறு மியற்றிவையும். (38)

மையனைய கண்டருக்குத் துய்யசம்பா
வரிசிவகை வகுத்தெடுத்தே
ஐயமற வமுதுசெய்து அலங்காரத்
தளிசைகளி லழகாய்வைத்துத்
துய்யதிருக் கறியமுது சுரபியின்பாற்
குழம்பினொடு துகடீர்துய்ய
வெய்யதிருப் பணிகாரம் வகைவகைவா
சனைகமழ விளங்கவையே. (39)

வையமகிழ் கற்கண்டு சீனிவெல்லம்
வடிவாஞ்சர்க் கரைகிழங்கு வதைத்தேன்நெல்லி
துய்யகனி வருக்கமெலா மங்ஙன்வைத்துச்
சுத்தமுள புத்துருக்கு நெய்யுமூற்றி
ஐயமற முன்புவைத்தே யிளநீர்வைத்தாங்
கழகான பத்திரமுந் தூபம் வைத்து
மெய்யதிருப் பூசையுமக் காகுமென்று
விளங்குமகா மண்டபத்தின் மீண்டுஞ்செய்யே. (40)

செய்யமகா மண்டபத்தி னாப்பணங்ஙன்
சிறந்தவொரு முழமகல நீளமாகத்
துய்யசம்பா வடிசிலது சொரிந்துதட்டித்
துகளிலொன்பான் மூன்றுபிடி சுற்றில்வைத்து
வெய்யதிருக் கறியமுது பணிகாரம்பால்
வேண்டியசர்க் கரைகனிதேன் வெகுவாய்நெய்யும்
பெய்துவைந்து திரிநிறுத்தி மகிழ்வாய்நீரும்
பெட்புடன் பா கிலைதூபம் பெருகச் செய்யே. (41)

எப்போது முப்போது மிப்படித்தென்
கோணமலை யிறைவன் பூசை
தப்பாம னீவிர்செய்க தந்திரமந்
திரங்கிரியை தானாசாரம்
இப்படியே செய்திடுவீ ரிதுதவறி
லெளியவரை யிறைஞ்சி நிற்பீர்
மெய்ப்புடனிவ் வெல்லையுளோர் செய்தொழும்பு
தவறிலிடர் மூழ்கிவீழ்வார். (42)

வாரிவளஞ் சூழிலங்கை வேந்தரானோர்
மகாகோணை நாதருக்கு வளவர்வேந்தன்
பாரிலங்கு பூசைதனக் கீந்தசொர்னம்
பலவரவு மெடுத்தழிவு பண்ணுவாரேற்
கூரியதோர் குட்டமுதல் வியாதிக்காளாய்க்
கூட்டுமன்றி நாட்டவர்க ளீட்டுசெம்பொன்
நேரிகலிற் கொள்கைகொண்டு சூறையாடி
நீசருமிப் பதியாள்வார் நியமந்தானே. (43)

தானதிக வரசருட னமைச்சர்தாமுந்
தக்கபிர தானியொடு தருமஞ் செய்வோர்
ஆனநெறி முறைதவறா மறையோர்தாமும்
அகலாத கற்புடைய அரிவைமாரும்
ஈனரொடு மூடர்மொழி தன்னைக் கேட்டே
யிவர்கள்புரி நெறிமுறையை யிகழுமந்நாள்
மானபர னாலயத்துப் பூசைதானு
மகிழ்ச்சிமங்க விகழ்ச்சியுமங் கெழும்புந்தானே. (44)

எழுகிரணத் திரிகயிலைப் பெருமான்பூசை
மிப்படியே முறைதவறி நடக்குங்காலம்
பழுதிறிகழ் கயவாகு வருவானந்நாட்
பாசுபத ரிறப்பர்பழ மறையோர் சேர்வார்
பொழுதுகுலக் கயவாகு ராசராசன்
பூசைவிதிக் கேகனக நாடுமீந்து
தொழுதுநின்றே யாலயத்திற் றொழும்புதிட்டஞ்
சொல்லியவ னனுராச புரியிற்சேர்வான். (45)

சேர்ந்த பின்னர் மறையவர்கள் கோணைநாதர்
திருப்பூசை வெகுகாலஞ் செய்யும் போதில்
மாந்தளிர்போன் மேனியுடைப் பறங்கிவந்து
மாகோணைப் பதியழிப்பன் வருமந்நாளில்
எந்ததென்பாற் கழனிமலை யென்றொன்றுண்டாங்
கீசனுக்கு ஆலயமங் கியற்றும் பின்பு
கோந்தறைசே ருலாந்தரசு வருமந்நாளிற்
குலவுசிங்க இரவிகுலங் குறைந்தேபோகும். (46)

போனபின்ன ரிலங்கைவடு கரசராள்வார்
போதிலங்கைப் பதிசிறிது பிடிப்பன்லாந்தா
தானிலங்கை யரசனுக்கு வேறோர்மன்னன்
தானுதவ மாற்றானைக் கடலிற்சேர்ப்பன்
தேன்மருவு மலங்கல்புனை வடுகராசன்
செப்பமுடன் மற்றெவரு மகிழக்கோணை
மானபரன் றனைமணிப்பொற் கோயிலுள்ளே
மாதனத்து மீதுவைத்து வணங்குவானால். (47)

வணங்குமரன் பூசைமுன்போல் நடக்கும் போது
மகாவிலங்கைப் பதியதனை மருவுஞ்சிங்கன்
இணங்குநவ ரத்தினத்தாற் பொன்னான் முத்தா
லிறையவருக் காலயமங் கியற்றுங்காலம்
சுணங்கலில்லை மானுடர்க்குத் துக்கமில்லைச்
சொல்லரிய போகமெல்லாந் துய்த்துவாழ்வர்
மணங்கமழுந் திரிகயிலைப் பெருமான்பாதம்
மனத்திருத்தி மகிழ்ச்சியுடன் வாழ்வார்மாக்கள் (48)

மாதமதின் மும்மாரி மகிழ்ந்து பெய்யும்
மகத்தான சைவநெறி வளர்ந்தேயோங்கும்
ஓதரிய முற்கதையுஞ் சொன்னேன்பின்ன
ருற்றுவருங் காதையெல்லா முற்றுஞ்சொன்னேன்
ஆதரவா யாறுபத்து நாலதான
அறிவுடைய சோதிடர்க ளன்பாய்முன்பு
நீதியுட னெழுதிவைத்த சரிதமீது
நிச்சயமென் றறிந்து கொள்வீர் நியமந்தானே (49)

தானதிக வாரிதிப்பொற் கரையிற்கல்லாற்
சரிவரப்பொற் கோயில்கட்டிக் குளமுங்கட்டி
மானபர னாலயத்துச் சோலைதோப்பு
மண்டபநீர் வாவிமணி மதிலுங்கட்டி
ஆனதிருப் பணியாறு பத்துநாலா
மாலயமுஞ் சுற்றிமிக வழகாய்க்கட்டித்
தானதிக வரனருளாற் பூசையாதி
தவறாம னடத்தினனித் தரணிமீதே. (50)

மீதெழுந்து நாற்றிசையு மதிலுங்கட்டி
வெளிக்கதவு மிரண்டிட்டுப் பூட்டும்போட்டு
ஆதிபர னாலயம்பொற் றகட்டால்வேய்ந்து
அவிர்கிரணத் தேர்மூன்று மழகாய்ச் செய்தே
பாதிமதி தரித்தபர னருளினாலே
பங்குனியுத் தரத்திருநாட் பவிசுங்கண்டேன்
நீதியுட னிப்படிநீர் தவறில்லாம
னிச்சயமாய் நடத்துமென்றான் நிருபர்கோமான் (51)

மாறாத புனல்பாயும் திருக்குளமும்
வயல்வெளியும் வருந்திச் செய்தே
வீறாக வென்மரபோர்க் கீயாமற்
கோணமலை விமலற்கீந்தேன்
பேறான பெரியோரே யிதற்கழிவு
நினைப்பவர்கள் பெட்புநீங்கி
நீறாரப் போவரிது நிச்சயநிச்
சயங்கோணை நீமலராணை. (52)

ஆணையிது வரன்றொழும்பு செய்வோர்யாரு
மவரவருக் கமைத்தபணி யதையெஞ்ஞான்றுங்
கோணமலை நாதருக்கு செய்குவாரேற்
குற்றமின்றி மகிழ்ச்சியுடன் குணமாய்வாழ்வார்
நாணமுற்றுச் சொர்னமெத்திக் கூலியாளை
நயந்தேவி யரன்பணியை நடப்பிப்பாரேல்
ஆணையினா லாக்கமுஞ்சந் ததியுமற்று
அல்லலுற்று வறுமையினா லலைவாரன்றே. (53)

அன்னவரன் பூசைவிதி யபிஷேகம்
விழாநடத்த லழகாயெங்கும்
மின்னுநிறை விளக்கேற்றல் கிராமதே
வதைபூசை விளங்கச் செய்தால்
இன்னலின்றி மாக்களெலா மிருநிதிசந்
ததிகளுட னினிதாய்வாழ்வார்
சொன்னவிந்த முறைதவறில் விளைவழிந்து
பஞ்சமுற்றுச் சோருமாக்கள். (54)

மாதயவார் வன்னிமையே தானம்வரிப்
பத்தவரே மற்றுளோரே
ஆதரவா யாலமுஞ் சினகரமு
மணிமதிலு மழகுவாய்ந்த
சேதமிலாப் பூங்காவுந் தினநடத்திக்
கொள்ளுமெனத் திட்டஞ்செய்து
காதலுடன் றிரிகயிலைப் பெருமைதனைக்
கண்டிதயங் கருணை பூத்தான். (55)

தானதிக பவநாசந் தன்னின்மூழ்கிச்
சரீரசுத்தி பண்ணித்தர்ப் பணமுஞ்செய்தே
ஆனதிரு மணிநீறு தரித்துக்கொண்டே
யதிகபட்டா டையுமுடுத்தங் கலர்பூவேந்தி
மானபர னாலயத்தை வலமாய்வந்து
வருபாதங் கழுவியுட்போய் வணங்கக் கண்டார்
போனவர சன்றிரும்பாப் புதுமையென்னோ
போய்ப்பாரும் பாசுபதர் புகுந்தேயென்றார். (56)

என்றுசொலப் பாசுபத ரெங்கும்பார்த்தே
　　யிரத்னமணி வாயிலினின் றெட்டிப்பார்த்தார்
பொன்றிகழும் பதத்தருகோர் சிவக்கொழுந்து
　　புஷ்பித்தே யலர்ந்துநிற்கும் புதுமைகண்டு
இன்றயற்கு மாலோற்கு மெவர்க்குங்கிட்டா
　　விரும்பதவி கிடைத்ததுவோ விறைவர்கோவே
என்றவர்கள் வெளியில்வந்தே யெவர்க்குஞ்சொல்ல
　　விருகண்ணீர் மழை பொழிந்தா ரிருந்தோரெல்லாம் (57)

எல்லார்க்கும் பெரியவனே யெளியவர்க்கு
　　மெளியவனே யெங்கள்கோவே
மல்லாருந் திண்புயனே திரிகயிலைத்
　　தொழும்பு செய்து மவுனத்தோடே
அல்லாருங் கண்டர்பத மடைந்தனையோ
　　வெனவாழ்த்தி யன்பினோடும்
எல்லாரு மரன்றொழும்பு தனை நடத்தி
　　மகிழ்ச்சியுட னிருந்தாரன்றே. (58)

சீர்மேவு கயிலைமலை தன்னில்வாழுஞ்
　　சேடனுடன் பிரசண்ட வாயுதானும்
ஏர்மேவு மெதிரிடைவந் துற்றபோது
　　எழிற்சிகண்டு சேடனுட னினிதாய்த்தானே
கூர்மேவு கொடு முடியைப் பிடுங்கி வாயு
　　கோணேச மலையென்று குறித்தபோது
தார்மேவு மீஸ்வரனு மகிழ்ந்தந்நாளிற்
　　சாற்றுவா னுமையவட்குத் தனித்துத்தானே. (59)

தானாக மூன்றுகமுஞ் சென்ற பின்பு
　　தனிமைபெறு கலியுகத்தின் சரிதஞ்சொல்வேம்
சேணாடர் புகழ்ந்திடவே பறங்கிவந்து
　　சிவசமயந் தனைமாற்றித் தீங்குசெய்வான்
கோனான ராசசிங்கம் வந்துதோன்றிக்
　　குவலயத்தோர் புகழ்ந்திடவே யீழநாட்டில்
தானாக வரசுசெய்யும் பறங்கிதன்னைத்
　　தடித்தாள்வான் றாரணியோர் தழைக்கத்தானே. (60)

# திருக்கோணமலைத் திருப்பதிகம்

## திருஞானசம்பந்தர்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

1. *நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்*
*நிமலர் நீறணி திருமேனி*
*வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த*
*வடிவினர் கொடியணி விடையர்*
*கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்*
*அளப்பருங் கனமணி வரன்றிக்*
*குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

பொழிப்புரை –

முறையாகப் பொருந்திய வீரக்கழலின் ஒலியும், அழகிய சிலம்பின் ஒலியும் முறையே வலப்பாதத்திலும், இடப்பாதத்திலும் ஒலிக்கின்ற திருவடிகளையுடைய வரும், மும்மலங்கள் இல்லாதவரும், திருநீறணிந்த திருமேனியை யுடையவரும் மலையரசன் மகளாகிய மாதுமையம்பாளை இடப்பாகத்திற் பொருந்திய வடிவத்தை யுடையவரும், இடபக்கொடியை யுடையவருமாகிய கோணேஸ்வரப் பெருமான் சந்தனம், அகிற் கட்டைகளையும், அளவற்ற இரத்தின மணிகளையும், முத்துக்களையும், அலைகளால் கடற்கரையிற் குவிக்கின்ற சப்திக்கின்ற சமுத்திர நீராற் சூழ்ந்த கோணமாமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

கழல் – ஆண்களணிவது, சிலம்பு – பெண்களணிவது, மும்மலம் – ஆணவம், கன்மம், மாயை, சந்து – சந்தனம், ஓதம் – நீர்

2. *கடிதென வந்த கரிதனை யுரித்து*
*அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்*
*பிடியன நடையாள் பெய்வளை மடந்தை*
*பிறைநுத லவளொடும் உடனாய்க்*
*கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து*
*கொள்ளமும் நித்திலஞ் சுமந்து*
*குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

பொழிப்புரை –

தேவர்கள், முனிவர்களைக் கொல்ல விரைவாக வந்த கயாசுரனாகிய யானையின் தோலை உரித்து அதனைத் தனது திருமேனியில் அணிந்தவரும், பெண்யானையின் நடையையொத்த அழகிய நடையையுடையவளும், வளையல்களை யணிந்தவளும், பிறைபோன்ற நெற்றியுடையவளுமாகிய மாதுமையோடு சேர்ந்து கோணேஸ்வரப் பெருமான், பயங்கரமாக ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்டுச் சேற்றினையும், முத்துக்களையும் தாங்கி வந்து கரைகளிற் சேர்த்துக் குடிமக்களை நெருங்குகின்ற அலைப்பெருக்கத்தையுடைய கோணமாமலையில் எழுந்தருளி யிருக்கின்றார்.

கொள்ளம் – சேறு, பிடி – பெண்யானை, கரி – யானை.

3. *பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்*
*படர்சடை முடியிடை வைத்தார்*
*கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக*
*முன்கலந்தவர் மதில்மேல்*
*தனித்த பேருருவ விழித்தழல் நாகந்*
*தாங்கிய மேரு வெஞ்சிலையாக்*
*குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

பொழிப்புரை –

குளிர்ச்சி பொருந்திய இளம்பிறைச் சந்திரனையும், அழகிய தலையை உடைய நாகபாம்பினையும், பரந்த சடைமுடியிற் தரித்தவரும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினையுடைய மாதுமையை இடப்பாகத்திலே கொண்டவரும், மூன்று புரங்களாய் வந்து அழிவுசெய்த தாரகாரக்கன், கமலாரக்கன், வித்துன்மாலி என்னும் அசுரர்களின் மீது ஒப்பற்ற பெருவடிவங்கொண்டு மேருமலையை வில்லாக வளைத்து, வாசுகியென்னும் பாம்மை நாணாகப் பொருத்தித் தாங்கி நெற்றிக் கண்ணால் விழித்து அவ்வசுரர்களை அழித்து அருள்புரிந்த கோணேஸ்வரர் ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த கோணமாமலையில் எழுந்தருளியிருக்கிறார். குனித்தல் – வளைத்தல்.

4. *பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்*
*பாங்குடை மதனனைப் பொடியா*
*விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த*
*விமலனார் கமலமார் பாதர்*

தெளித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமாமலை அமர்ந்தாரே.

பொழிப்புரை –

புதிதாகப் பெருகி வந்த கங்காநதியைத் திருச்சடையிற் தரித்தவரும், அழகிய மன்மதனைப் பழித்தது போல நெற்றிக் கண்ணால் விழித்துச் சாம்பராக்கிப் பின்னர் மன்மதனுடைய மனைவி இரதியானவள் பணிந்து வேண்டிய பிரகாரம் மன்மதனை முன்போல் உயிர்பெற்றெழச் செய்தவரும், மலமற்றவரும், செந்தாமரை போன்ற பாதங்களையுடையவருமாகிய கோணேசர், ஒலிக்கின்ற கடலானது முத்துக்களையும், செம்பொன்னையும், சிப்பிகளையுஞ் சுமந்துவந்து வலிய அலைகளால் கரைகளிலே சேர்க்கின்ற கோணமாமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

தரளம் – முத்து, திரை – அலை

4. தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண் பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.

பொழிப்புரை –

பெற்றதாயினும் மேலான அன்புள்ள தாயாகிய தலைவனென்று மெய்யடியார்கள் கோணேசப்பெருமானுடைய திருவடிகளில் வணங்கி வாயினால் வாழ்த்தியும் மனத்தினால் நினைத்தும் துதிப்பார்கள். என்றும் நீங்காது நிற்கின்ற மகாஞானிகள் காணும்படியாகப் பலபல வேடங்களையுடையவராகியும், நோயினாலும், தீராப்பிணியினாலும் வருந்துகின்ற அன்பர்களின் துன்பத்தை நீக்குபவரும், இடப்பாகத்தை விலக்கிப் பூநூலை அணிந்தவருமான கோணேசர், கோயில்களாலும், சுனைகளாலும், கடலாலும் சூழப்பட்டு பூமியின்கண் சிறந்துவிளங்கும் திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

பிணி – மும்மலப்பிணியுமாம்.

6. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடாவண்ணம் உதைத்தவர்க் கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வண்செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமாமலை அமர்ந்தாரே.

பொழிப்புரை –

பக்தியோடும், பரிவோடும், தூய உள்ளத்தோடும் வழிபட்ட அடியவனாகிய மார்க்கண்டேயனுடைய உயிரை எடுக்க வந்த கூற்றுவனை அழிந்துபோகும்படி உதைத்து மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்த மேலான அருளாளரும், கருணையினால் நம்மையெல்லாம் ஆட்கொண்டருளுகின்றவருமாகிய கோணேசப்பெருமான் பரந்து உயர்ந்து வளர்ந்த வனமல்லிகையும், குருக்கத்தியும், புன்னையும், வேங்கையும் வண்மையான செருந்தியும் செண்பகமும், குருந்தும், இவைகளில் முல்லைக்கொடிகளும் படர்ந்து விளங்கும் சோலைகள் சூழ்ந்த கோணமாமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

மாணி – பிரமச்சாரி, (மார்க்கண்டேயர்) கூற்று – இயமன், மௌவல் – முல்லை, மாதவி – குருக்கத்தி. வேங்கை – வேங்கை மரம், செருந்தி – செருந்திமரம், குருந்து – காட்டுநாரத்தை

7. பாடல் கிடைக்கவில்லை

8. எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பறியாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருள் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமாமலை அமர்ந்தாரே.

பொழிப்புரை –

கயிலாயமலையை எடுத்த இராவணனுடைய அகங்காரத்தைத் தனது காற்பெருவிரலால் மிதித்து அழித்தவரும், இராவணன் வருந்தி இறைவனாகிய கோணேசரைத் துதிக்க அவனுக்கிரங்கி இஷ்டமான அதிகாரச் செல்வத்தைக் கொடுத்தவரும், பிறப்பிறப்பு இல்லாதவரும் தம்மைப் புறக்கணித்த தக்கனுடைய வேள்வியை அழித்துப் பின்னர் அவன் மீது கொண்ட கருணையினால் அருள் புரிந்து வாழ்வளித்தவரும் எல்லோராலும் விரும்பப்படும் பெரிய கீர்த்தியையுடைய வருமாகிய கோணேசப்பெருமான் திருக்கோணமலையில் எழுந்தருளியுள்ளார்.

ஆத்தம் – இஷ்டம், வேள்வி – யாகம்

9. *அருவரா தொருகை வெண்டலை ஏந்தி*
*அகந்தொறும் பலியுடன் புக்க*
*பெருவராயுறையும் நீர்மையர் சீர்மைப்*
*பெருங்கடல் வண்ணனும் பிரமன்*
*இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்*
*உயர்ந்தவர் பெயர்ந்த நன் மாற்கும்*
*குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

பொழிப்புரை –

அருவருப்படையாமல் ஒரு கையில் மண்டையோட்டை (பிரம்மகபாலம்) ஏந்தி வீடுகள் தோறும் பிச்சையேற்ற பெருமைக்குரிய குணத்தையுடையவரும், சிறந்த கரிய கடல் போன்ற நிறத்தையுடைய மகாவிஷ்ணுவும், பிரம்மாவும் ஆகிய இருவரும் முறையே அடியையும், முடியையும் தேடி அறிய முடியாதபடி ஒளிப் பிளம்பாய் உயர்ந்து விளங்கியவரும், திருவடியைக் காணமுடியாது மீண்டு வந்த திருமாலுக்குக் குருவாய் நின்றவருமாகிய இறைவன் திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

வெண்டலை – பிரம்மகபாலம், சீர்மை – சிறப்பு

10. *நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்*
*நெறியல்லாதன புறங் கூற*
*வென்று நஞ்சுண்ணு பரிசினர் ஒரு பால்*
*மெல்லியளொடும் உடனாகித்*

துன்றுமொண் பௌவ மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம் வந்துலவும்
கோணமாமலை அமர்ந்தாரே.

பொழிப்புரை –

நின்றநிலையில் உண்ணுகின்ற சமணரும், இருந்து உண்ணுகின்ற தேரரும் (புத்தர்) குதர்க்கமாக வாதஞ் செய்து சைவநெறியைப் புறங்கூறி, நன்னேறியல்லாத சமயநெறிகளைக் கூற அவர்களின் சமயக்கொள்கைகளை மறுத்து வென்றவர்களும் அவர்கள் ஊட்டிய நஞ்சையுண்டவர்களாகிய அடியார்கள் இருபக்கமும் சூழ்ந்து நிற்க, இடப்பாகத்தை மாதுமைக்குப் பகிர்ந்தளித்த அர்த்தநாரீச்வர வடிவினராகிய கோணேசர் நெருங்கி அலைமோதுகின்ற சமுத்திரக்கரையில் வளர்ந்த மல்லிகையின் மணமும் கடல் அலைகளால் மோதப்படும் குன்றுகளிலுள்ள சோலைமலர்களின் நறுமணமும் வந்து வீசுகின்ற திருக்கோணமாமலையில் எழுந்தருளியிருக்கின்றார். பௌவம்– சமுத்திரம்

11. குற்றமில்லாதார், குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞான சம்பந்தன்
உற்ற செந்தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே

பொழிப்புரை –

இறத்தல் பிறத்தலாகிய குற்றமற்றவராயும், ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட கோணமாமலையில் எழுந்தருளியிருப்பவருமாகிய கோணேசப் பெருமானைக் கற்றுங் கேட்டும் நல்லுணர்வு பெற்றுச் சீர்காழியில் அவதரித்த ஞானக் குழந்தையும், உயர்ந்த ஞானக் கருத்துக்களைக் கூறுகின்றவருமாகிய திருஞானசம்பந்தர் அருளிய செந்தமிழ் மாலையாகிய பத்துப் பாடல்களையும் படிப்போரும், அதனைக் கேட்போரும் சான்றோர்களுக்கு உறவாகி முன்னை வினை வந்து சூழாமல் மேலான உலகங்களில் சிறப்போடு வாழ்வார்கள்.

திருச்சிற்றம்பலம்

# திருக்கோணமலைத் திருப்புகழ்

தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன தனதான

*விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை*
*தரித்த ஆடையு மணிப்பூணு மாகவெ*
*மினுக்கு மாதர்க ளிடைக்காம மூழ்கியெ மயலூறி*

பொழிப்புரை –

உடலைவிற்று வாழும் பெண்கள் தங்கள் உடம்பில் ஆடைகள் அணிந்து, அணிகலன்கள் பூண்டு, மேகலை என்று சொல்லப்படுகின்ற ஒட்டியாணம் கட்டி உடம்பை அழகுபடுத்தி மினிக்குகின்றார்கள். அவர்களுடைய காமஇச்சையில் மயங்கினேன்.

*மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்*
*நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல*
*வெறுப்ப தாகியெ உழைத்தேவி டாய்படு கொடியேனைக்*

பொழிப்புரை –

அந்தக் காம மயக்கத்தினால் என்னை இந்தப் பூமியிலுள்ளவர்கள் இவனும் ஒரு காமியென என் கண் முன்னேயே நின்று இகழவும் நான் அவமானத்தையும் புறந்தள்ளி இந்த உடம்பின் காமவேட்கையால் மீண்டும் மீண்டும் காமதாகந் தணியாத கொடியவனானேன்.

*கலக்க மாகவெ மலக்கூடி லேமிகு*
*பிணிக்கு ளாகியெ தவிக்காம லேயுனை*
*கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயும் ஒரு வாழ்வே*

பொழிப்புரை –

காமக் கலக்கத்தினால் மலஞ்சோரும் இந்த உடம்பின் மிகுந்த நோய்களுக் காளாகித் தவிக்காமல், உன்னைக் கவிமாலையால் போற்றித் துதிக்கும் என்னை ஈடேறச் செய்கின்ற ஒப்பற்ற பெருவாழ்வுடையவனே!

கதிக்கு நாயக உனைத்தேடி யேபுக
முரைக்கு நாயெனை அருட் பார்வை யாகவே
கழற்கு ளாகவெ சிறப்பான தாயருள் தரவேணும்

பொழிப்புரை —

மேலான மோட்சகதி அருளுகின்ற தலைவனாகிய கோணேசப்பெருமானே! உன்னைத் தேடித்தேடி, உன்புகழையே பாடுகின்ற, நாயிற் கடைப்பட்ட என்னையும் உனது அருட்பார்வையாகிய கருணையினால் உன்திருவடிப் பேறடைவதற்குஅருள் புரியவேண்டும்.

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாழ்மகிழ் தருவேளே

பொழிப்புரை —

தென்கயிலைமலையின் தலைவனாகிய உன்னையே இச்சித்துச் சிவகாமியா யமர்ந்துள்ள மாதுமையாளின், திருக்குமாரனாகிய ஆறுமுகங்கொண்ட சண்முக தேசிகனே! அழகிய வடிவுடைய குறமகளாகிய வள்ளியம்மையாருக்கு இன்பத்தைத் தருகின்றவனே!

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுநி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு முருகோனே

பொழிப்புரை —

வசிட்டர், காசிபர், தவப்பேறுடைய யோகியர்கள், அகத்தியமா முனிவர், இடைக் காட்டுச் சித்தர், நக்கீரன் என்பவர்கள் பாடிய பாக்களின் தத்துவப் பொருளையே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளுகின்ற முருகப்பெருமானே!

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே

பொழிப்புரை —

நான்கு வேதங்களையும் நிலைக்கச் செய்கின்ற மேலான அந்தணர்கள், திருக்கோணமலைத் தலத்தில் உயர்ந்து விளங்கும் கோபுரவாசலில் நின்று பாடும் அனுபூதிப் பாடலின் பொருளாக விளங்கி வருகின்றவனே!

*நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ*
*எடுத்த வேல்கொடு பொடித்தூள தாவெறி*
*நினைத்த காரியமநுக் கூல மேபுரி பெருமாளே*

பொழிப்புரை –

புண்ணிய பாவங்களுக்கேற்ப நிகழுகின்ற ஏழு பிறப்புக்களையும், தனது திருக்கரத்திலேந்திய, கடல்கோள் போன்று அழிக்கும் ஒப்பற்ற வல்வேலினால் பொடிப் பொடியாகும்படி செய்து, நினைத்த காரியங்களெல்லாம் அனுகூலமாக முடியும்படி அருள்புரிகின்ற பெருமாளே.

# திருக்கோணேசர் பஜனை

சுவாமி கெங்காரனந்தாஜீ அவர்கள் இயற்றியது

இராகம்: காபி
தாளம் : ஆதி

மரகதமலை போன்ற தென்கயிலை மாமலையில்
நர்த்தனம் ஆடும் நர்த்தக மணியே
மரகதக்கால் சிலம்பொலி கேட்க திருமலை இறைவா
வந்தேன் உன் தாள் இணைக்கு

வருக வருக என்று வரவேற்று வரம் தந்த வரதநாயகா
வரருஜி ருஜித்தோர் இகருஜி அறியார்சிவனே சிவனே

இராகம்: சகானா

நீராம்பல் பூமணத்தை நீர்வாழ் நீரினம் நுகர்வதில்லை
நீரலையில் கலந்து வரும் சிலம்பொலி நாதத்தை
மூடர்கள் மூடதையால் உணர்வாரில்லை
மூர்த்தி ஸ்தலம் தீர்த்தம் என்ற முப்பெரும் ஸ்தல
பெருமையை உணர்ந்தோர்
மூப்பும் பிணியும் அகற்றி முக்தி இன்பம் அடைவார்
ஐயம் இல்லை என் ஐயனே

இராகம்: சிந்துபைரவி

உளக்கண் திறக்கும் திறவுகோல் இங்குதான்
உண்டுவேறு எங்கும் தேடவேண்டாம்
உச்சிமலையில் தவக்குகையில் உள்ளடக்கி உள்நோக்கி
இருந்தால் அகக்கண் திறக்கும் உண்மை
கோரக்க முனிவர் செய்த தவப்பயனால்
திருமலையில் வந்தமர்ந்ததிருமலை தேவா
கொடுமைகளை மாளவைத்து அருள்புரியும்
அருட்பெரும் கருணைக் கடலே

இராகம்: மலஹரி

வேதனையும் சோதனையும் நிறைந்த உயிரோட்டம்
நிற்கும் வேளையில் உயிர்ப்பிக்கவும் இரட்சகனே
வத்சலப்பிரியனே உன் திருத்தாள் மகிமையை
எவ்வாறு எடுத்துரைப்பேன் சின்மயானந்தனே
தெட்சண கயிலைமலை அமிர்தா உன் பொற்பாதத்தை
பத்ரபுஷ்பம் தூவி பூஜிக்க அருள்புரிவாய்

இராகம்: மத்யமாவதி

மிலேச்சரால் அழித்தும் அழியாமல் நின்று செங்கதிர்
வீசிநிற்கும் செஞ்சடையவனே
மானசீகலிங்கத்தை மனதால்பூஜை செய்து மௌனமாய்
இருக்கும் மௌனிகளால் அன்றி உன்னை வேறாரறிவார்
தங்கத் தமிழில் நொந்து உருகி உன்
திருப்புகழ் பாடி வாழுநல்லடியாரை
தங்கப் பாதமலரில் வைத்து அணைத்திடுவாய்
சோபிதலிங்க அருள்மணியே

## * இலங்கையில் உள்ள வரலாற்றுத் தொன்மை வாய்ந்த சைவ ஆலயங்களும், தீர்த்தங்களும்

| | |
|---|---|
| தக்ஷணகைலாயம் | - திருக்கோணமலை. பதிகம் பாடல் பெற்ற சிவஸ்தலம். |
| திருக்கேதீச்சரம் | - மன்னாருக்குச்சேர்ந்த மாதோட்டத்திலுள்ளது. பதிகம் பாடல் பெற்ற சிவஸ்தலம். |
| முனீச்சரம் | - சிலாபத்துக்கருகாயுள்ள சிவஸ்தலம். புவனேக வாகுராசனாற் பிரதிட்டை செய்யப்பட்டது. |
| கரசையம்பதி | - திருக்கோணமலைக்குத் தெக்ஷிணதிசையிலே மாவலிகங்கைக் கருகாயுள்ள சிவஸ்தலம் அகத்திய முனிவருக்குத் திருமணக்கோலங் காட்டிய ஸ்தலம். |
| குமரபுரம் | - முல்லைத் தீவுக்கும் முள்ளியவளைக்கும் நடுவாயுள்ளது. சுப்பிரமணிய ஸ்தலம். |
| மாவிட்டபுரம் | - யாழ்ப்பாணத்திலுள்ளது. மாருதப்புரவீகவல்லி என்னும் இராசகுமாரி தனது முகம் குதிரை முகத்தை ஒத்திருந்தமையால் நகுலகிரித் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சுயரூபம் பெற்றுக் கொண்டஸ்தலம். சுப்பிரமணியஸ்தலம் |
| வல்லிபுரம் | - யாழ்ப்பாணத்திலுள்ளது. விஷ்ணுஸ்தலம். |
| பொன்னாலயம் | - யாழ்ப்பாணத்திலுள்ளது. விட்டுணுதலம். தற்காலம் புன்னாலையென வழங்குகின்றது. |
| பிரளயவைரவர் கோயில் | - யாழ்ப்பாணத்திலுள்ளது. தற்காலம் பளையில் வைரவர்கோயிலென வழங்குகின்றது. |
| திருக்கோயில் | - மட்டுக்களப்புக்குச் சேர்ந்தது. சுப்பிரமணிய ஸ்தலம் |
| நகுலகிரி | - யாழ்ப்பாணத்திலுள்ள கீரிமலை சிவஸ்தலம் |
| சோதிஷ்காமகிரி | - கதிர்காமம்.சுப்பிரமணியஸ்தலம். |
| உகந்தகிரி | - கதிர்காமத்திலுள்ள உகந்தமலை. |
| கந்தபருவதம் | - திருக்கோணமலையிலுள்ள கந்தசாமிமலை. |
| மச்சேந்திரபருவதம் | - திருக்கோணமலைக்கு அருகிலுள்ள மலை. |
| தேனுபருவதம் | - மாத்தறைக்குக் கிட்டவிருக்கிறது. அது பசு ரூபம் போன்ற ஒரு மலை. |

| | |
|---|---|
| திரிகூடபருவதம் | - திருக்கோயிலுக்கு நேரே சமுத்திரத்துக்குள் அமிழ்ந்திக்கிடக்கின்றது. அது இராவணன் கோட்டையென்று வழங்கி வருகின்றது. |
| சிவசோதிபதம் | - சிவனொளிபாதம் என்னும் மலை |
| விநாயகாசலம் | - கதிர்காமத்திலுள்ள பிள்ளையார் மலை |
| சப்பிரகாமம் | - கண்டிக்குச் சேர்ந்தது |
| சுவேலகிரி | - இராவணனைச் சம்மாரஞ்செய்யும் பொருட்டு இராமர் இலங்கைக்கு வந்து பாசறைவீடு கட்டியிருந்த மலை. அது தற்காலம் பசறையென வழங்குகின்றது. வதுளைக்குச்சேர்ந்த மலை. |
| கழனிமலை | - திருக்கோணமலைக்குச் சேர்ந்தது. அகத்தியர் திருமணக்கோலங் காணும் பொருட்டு தக்ஷணகைலாயத்துக்கு வந்து சிவபெருமானைத் தியானித்துக் கொணடிருந்த மலை. |
| நல்லூர் | - யாழ்ப்பாணத்திலுள்ள சுப்பிரமணியஸ்தலம். புவனேகவாகு ராசனாற் பிரதிட்டை செய்யப் பட்டது. |
| வெருகல் | - திருகோணமலைக்கு இருபத்தைந்து நாழிகை தூரத்துக்கப்பாலுள்ள சுப்பிரமணியஸ்தலம். |
| மகாவலிகங்கை | - சிவனொளிபாத மலையிலிருந்து உற்பத்தி யாகிப் பிரவாகிக்கின்றது. |
| மாணிக்கங்கை | - கதிர்காமத்திலுள்ளது |
| காவேரிகங்கை | - திருக்கேதீச்சரத்திலுள்ளது. |
| நகுலகிரித்தீர்த்தம் | - யாழ்ப்பாணத்திலுள்ள கீரிமலைத்தீர்த்தம். மாருதப்புரவீகவல்லியுடைய குதிரைமுக ரூபத்தை மாற்றிய தீர்த்தம் இதுவேயாம். |
| கன்னியாத்தீர்த்தம் | - திருக்கோணமலைக்கு நாலு நாழிகை தூரத்தி லுள்ளது. இராவணனுடைய தாய்க்கு அந்தி யேட்டி செய்யும் பொருட்டு விட்டுணுமூர்த்தி யால் உண்டாக்கப்பட்டது. |
| நவக்கிரித்தீர்த்தம் | - யாழ்ப்பாணத்திலுள்ளது. |
| யமுனாரித்தீர்த்தம் | - யாழ்ப்பாணத்திலுள்ளது. |
| அமிர்தகளி | - மட்டுக்களப்பிலுள்ளது. |

# அனுபந்தம்

அன்பர்களே!

உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் தாம் வசிக்கும் இடத்தின் பெருமை இத் தன்மைத்தென விபரமாக அறிந்திருக்க வேண்டியது அவசியமாகையால், நாம் வசிக்கும் இத் திருக்கோணமலையின் மகத்துவங்களை அறிய அநேகர் விருப்ப முடையவர்களா யிருப்பீர்களென நினைத்து இத்தலத்தின் மகிமையை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். இவ்வூருக்குத் திருக்கோணமலை எனவும், தக்ஷணகைலாய மெனவும், மச்சேச்சுர மெனவும், திரிகூடமெனவும் நாமங்கள் உண்டு. இத் திருக்கோணமலை இலங்கா தீபத்துள் ஒன்றாயிருப்பதால், இலங்கை மகிமையைச் சுருக்கமாகத் தெரிவித்து, பின்னர் திருக்கோணமலையைப் பற்றிப் பேசுவோம். இலங்கையானது உத்தர கைலையின் உற்பத்தி எவ்வாறெனில்:

இத் தக்ஷணகைலாயத்திலே வெள்ளரசு கண்டகீவடம், சோதிவிருக்ஷம் சாயாவிருக்ஷம் சுவேதகூவிளம் சுவர்ணதரு கருநெல்லி முதலிய மேன்மையுடைய விருக்ஷங்களும், சுகந்த புஷ்பசாதிகளும், நூதனமான பக்ஷிசாலங்களும், விசேஷ மான மிருகசாதிகளும், கிருஷ்ணசர்ப்பம் மகாசர்ப்பம் முதலிய சர்ப்பசாதிகளும் உண்டு. திருக்கோணமலைக்கு நான்கு திக்கிலும் நான்கு யோசனைக்குள்ளாக வசிக்கப்பட்டவர்கள் சகலரும் தத்தமக்குரிய தொழில்களைச் செய்து, பிரயாச மில்லாமல் அதிகம் திரவியத்தைச் சம்பாதித்து, தேக சௌக்கியத் தோடும் சந்தோஷத்தோடும் வசிப்பார்கள். இத் தலத்தில் யாசகஞ் செய்து சீவிப்பவனும் தேக சுகத்தையுடையவனாய் இருப்பான். இத் திருக்கோணமலைக்கு நான்கு திக்கிலும் நான்கு யோசனை தூரத்துக்குள்ளாக இறக்கப்பட்ட சீவசெந்துக்க ளெல்லாம் யம தூதருடைய ஆக்கினைக்குள் அகப்படாமல் மோக்ஷவீட்டைச் சேருவார்கள். இந் நகரியில் வசிப்பவர்கள் தங்கள் தங்கள் தேட்டங்களை மூன்று பங்கிட்டு, ஒரு பங்கு தருமத்துக்கும், இரண்டு பங்கு தங்கள் பாவிப்புக்கும் வைத்திருக்க வேண்டும். இவ் விடத்தில் உண்டாக்கப்படும் காய் கனி கீரை தானியம் முதலியவைகளில் நாலில் ஒரு பங்கு கோணைநாயகருக்குக் கொடுத்தல் வேண்டும். அப்படிக் கொடாதிருப்பார்களாயின் சமுத்திரத்தில் ஆமையாகப் பிறப்பார்கள். சிதம்பரத்தில் கனகசபையும், மதுரையில் இரசதசபையும், தக்ஷண காசியில் இரத்தினசபையும், திருநெல்வேலியில் தாம்பிரசபையும், தக்ஷண கைலாயத்தில் சூடாமணிசபையும் உண்டு. தக்ஷணகைலாயத்தில் வசிப்பவர் களுக்குப் போகம் மோக்ஷம் இரண்டையுங் கொடுப்பதற்காகக் கோணைநாயகர் சகளநிட்கள ரூபியாக எழுந்தருளியிருக்கின்றார். முற்செனனங்களில் தாங்கள் செய்த தபோபல மேலீட்டினால் இத் திருக்கோணமலையில் பொன் முதலிய தாதுவர்க்கங்களும் அதிகமாக விளையும், இத்திருக்கோணமலைக்கு மேலான தலமும், மாவலிகங்கைக்கு மேலான தீர்த்தமும் எவ்விடத்திலுங் கிடைப்பதரிது. இத்

துணைப் பெருமிதங்களையுடைய தக்ஷணகைலாயத்திலே சோழ மண்டத்திலிருந்த மனுநீதி கண்ட சோழனின் வம்சத்தைச் சேர்ந்தவரும் வரராமதேவரின் புத்திரரு மாகிய பாலசிங்கமகாராசா என்பவர். பரதகண்டத்தினுள் தொண்ணூற்றெட்டுச் சிவஸ்தலங்களுள் மிக மேலானது தக்ஷணகைலாயமென வேத சிவாகமங்களா லுணர்ந்து, அக் கைலாயத்திலே ஒரு சிவாலயத்தை உண்டு பண்ணுவது மிக மேலான தருமமெனக் கருதி, இற்றைக்கு 4479 வருடங்களுக்கு (கிறீஸ்து பிறக்க 2590 வருடங்களுக்கு) முன் இவ்விடத்துக்கு வந்து, கைலாயமலையில் ஒரு சிவாலயத்தை உண்டு பண்ணினார். அவர் கோணைநாயகருடைய பதமுத்தி யடைந்தபின், பறங்கிக்காரரால் அவர் கட்டிய சிவாலயம் இடித்துக் கடலிற்றள்ளப் பட்டது. பின் குளக்கோட்டு மகாராசன் இவ்விடம் வந்து, ஆலயத்தை உண்டு பண்ணிக் குடிசனங்களையு மிருத்திய அக்காலத்தில், சைவசமயப் பயிரானது வளர்பிறைச் சந்திரன்போல நாளுக்குநாள் வளர்ந்தேறிவந்தது. பறங்கிக்காரர் இவ்விடம் வந்தபின், மிலேச்ச கண்டங்களிலிருந்து பரசமயப் பறவைகள் சில ஒருங்குகூடிப் பறந்துவந்து, இலங்கையிலெங்கும் பரவி, சைவசமயப் பயிரை ஒருவாறு மேயத் தொடங்கின. அவற்றிற் சில பறவைகள் வந்து நாமிருக்கும் திருக்கோணமலைச் சார்பிலும் பதுங்கியிருந்து, சில காலஞ்சென்றதன்பின், தாம் வசிப்பதற்குத் தக்க கூண்டு களையுங் கட்டி, நம்மூரிலுள்ள சைவசமயப் பயிரை மேய்வதற்கு ஒருவாறு முயற்சி செய்துவருகின்றன. அப்பறவைகள் நம்மூரிலுள்ள சைவசமயப் பயிரை மேய்வதற்கு முன், அப் பயிர் மோசம் போகாமற் பாதுகாப்பதும் வளர்ப்பதும் நம்மனோர் கடனேயாம். ஆயின், அப்பயிரானது வளர்வதற்கு நாம் செய்யவேண்டிய முயற்சிகள் சிலவுள. அவையாவையெனில், முதலில் வித்தியா சாலைகளென்னும் வேலிகளை யடைத்து, பின்பு, சைவசமயக் குருமாரும் அறிவாளி களுமாகிய முகிற் கூட்டங்க ளெல்லாம் ஏகோபித்துத் திரண்டு, கல்வியென்னும் நன்னீர்ச் சமுத்திரத்திலே சலத்தைக் குடித்து, ஒற்றுமையென்னும் மலையிலே காலையூன்றி, பரசமயபண்டிதர்களுடைய மனமென்னும் தேசத்திலே இடித்து முழங்கி, விடா முயற்சியென்னும் மின்னலை இடைவிடாது மின்னி, பத்திரிகை வாயிலாகவும் புத்தகங்கள் வாயிலாகவும் சைவசமய உண்மையென்னும் பிரசண்ட மாருதமாகிய சுழல்காற்றையும் வீசி, பிரசங்கமென்னும் மழையையும் மாதமும்முறை பொழிந்து, சைவசமயப் பயிர் மோசம்போகாது காத்துக்கொள்வதற்குக் கைலாயபதி யாகிய கோணைநாயகருக்கு அன்பென்னும் சம்பளத்தைக் கொடுத்து, அவரையே காவலாளியாக நியமிப் போமாயின், நம்மூரிலுள்ள சைவசமயப் பயிர்வளர்ந்து சிறப்படைவதற்கு யாதுஞ் சந்தேகமுண்டா? இல்லை, இல்லை. அப்போது நம்மூர்ச் சைவசமயப் பயிரை மேய்வதற்கு நோக்கங்கொண்டு வந்திருக்கும் பரசமயப் பறவை களெல்லாம், அறிவாளிகளும் பிறருமாகிய முகிற் கூட்டங்கள்யாவும் ஒற்றுமை என்னும் மலையிலே காலூன்றியிருப்பதையும், விடாமுயற்சியாகிய மின்னல் மின்னு வதையும், சைவசமய உண்மையென்னும் பிரசண்டமான காற்று வீசுவதையும், பரசமயப் பண்டிதர்களுடைய மனமாகிய ஆகாயத்திலே இடிமுழக்க முண்டா வதையும், பிரசங்கமழை மாதம் மும்முறை பொழிவதையும் சச்சிதானந்த சிவஞானப் பிரகாச சபையென்னும் மணிவாலசூரியனுடைய வெப்பம் அதிகமாயிருப்பதையும்,

வித்தியாசாலைகளென்னும் வேலிகள் நான்கு பக்கலிலும் மிகப் பெலமாயிருப்ப தையும், காவலாளியாகிய கோணைநாயகர் சைவசமயப் பயிர் மோசம் போகாது எப்போதும் விழிப்பாயிருந்து காப்பதையும் கண்டு, நாம் இனிமேல் இவ்வூரிலுள்ள சைவசமயப் பயிரை மேய்வதற்கு இடம் வாயாதெனக் கருதி, மழை காற்று மின்னல் இடிமுழக்கம் முதலியவைகளைச் சகிக்கமாட்டாமல் அஞ்சி நடுங்கி, ஒடுங்கி, தாம் இருந்துவந்த மிலேச்சகண்டங்களை நோக்கி ஓட்டெடுக்கு மென்பதிற் சந்தேக மில்லை. ஆதலால், அன்பர்களே! இப் பூமி தக்ஷணகைலாய பூமியாக இருப்பதால், பூமிநயம் பற்றிச் சைவ சமயப் பயிரானது மிகவும் செழிப்பாக வளர்ந்தோங்கும். ஆனால், நீங்கள் எல்லீரும் அப் பயிரை வளர்க்க மிகவும் விருப்பமுடையவர்களா யிருக்கின்றீர்கள் என்பதையும் நான் நன்கறிந் திருக்கிறேன். ஆதலால், நீங்கள் இப்போது முதலாக ஆவசியகம் செய்யவேண்டியது வித்தியாசாலைகளென்னும் வேலிகளைக் கட்டுவதேயாம். இதற்குப் பிரயத்தனங்களைச் செய்ய முயலுங்கள்! முயலுங்கள்!!

வே.அகிலேசபிள்ளை

# முடிவுரை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தமது ஞானக்கண்ணால் கண்டு திருப் பதிகம் பாடிய திருக்கோணாசலம் சிவனின் அழியாவரம் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக இன்றும் திகழ்கின்றது. இத் திருத்தலத்தின் மகிமை வடஇந்திய மாகா ணங்களில் உள்ளவர்களால்கூட நன்கு உணரப்பட்டுள்ளது என்பதை அங்குபோய் வந்தவர்களைக் கேட்டால் நன்கு புரியும். அத்தனை சிறப்புக் கொண்ட இத்திருத் தலம் இன்று அதன் புனிதத்திற்கு களங்கம் விளைவிக்கும் வகையில் பொறுப்பற்ற சிலரால், உரிய கவனிப்பின்றி இந்து மதத்தின் தெய்வ வழிபாட்டுக் கொள்கைக்கு மாறாக வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இத் திருத்தலத்தின் பெருமைகளை அறியாதவர் எவருமிலர். இயற்கை யாகவே தெய்வீகத்தையும், சிறப்பையும் ஒருங்கே கொண்ட இத் திருத்தலம் இன்று ஒரு சில புறம்போக்குக் கொள்கையினரால் மக்களின் வழிபாட்டுக்கு தடையாக அமைந்திருப்பது வருந்தத்தக்கது. இத்திருத்தலத்தில் காணப்படும் குறைபாடுகளை உரியகாலத்தில் களைந்தெறியாவிட்டால், இந்துக்களின் பாரம்பரியத்துக்கு காவல் அரணாகவுள்ள இது பிற மதத்தவர்களைக் காலூன்றச் செய்யும் காலனியாக மாறி விடவும்கூடும். இதற்கான அறிகுறிகளைத் தற்போது நாம் காணக் கூடியதாகவுள்ளது.

படித்தும் அறிவில்லாத, சில சுயநலமிகள் தங்களின் எழுத்துத் திறமையை, வரலாற்று உண்மையை மறைத்து, பிற மதத்தவர்களின் அடிவருடிகளாக மாறி, பெருமை மிகுந்த எமது உயர் இந்துக் கலாசாரத்தை துவசம் செய்கின்றாகள். இவர்களுக்கு நாம் கூற விரும்புவது என்னவென்றால், "மனிதனை மனிதன் ஏமாற்றலாம். வரலாற்றை மாற்றலாம் ஆனால் தெய்வத்தின் சந்நிதியில் இப்படிப் பட்ட ஏமாற்று வித்தைகளுக்கு இடமேயில்லை. அரசு இன்று இருக்கும் தெய்வம் என்றென்றும் இருப்பது. ஆகவே தெய்வத்துக்குப் பயந்து உண்மைக்கு உழைக்க முற்படுங்கள்." என்பதே.

**1889** ஆம் ஆண்டளவில், இந் நூலுக்கான கைப்பிரதியை எழுதிய இந் நூலின் ஆக்கியோனாகிய ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளை அவர்கள் தமது நூலின் அனுபந்தத்தில் கூறியுள்ள கருத்துக்கள் எவ்வளவு தீர்க்கதரிசனமானவை என்று இன்று நாம் உணரக்கூடியதாகவுள்ளது. சுமார் 110 வருடங்களுக்குப் பின் என்ன நடக்குமென்பதை உணர்ந்து எழுதி வைத்த அவரது மாட்சி அவருக்கு கோணேசப்பெருமானால் வழங்கப்படடது, சற்று நிதானமாகவும் ஆழமாகவும் சிந்திப்போமானால் சிவனின் சக்தி நன்கு புரியவரும்.

இத் திருத்தலத்தினை முதன்மைப்படுத்தி நிர்வகிக்க முன்வரும் சிவனேயச் செம்மல்கள், இத் திருத்தலத்தின் பெருமைக்கும், சிறப்புக்கும் எவராலும் மாசு ஏற்படவோ, கற்பிக்கவோ இடம் தராதும். தெய்வ சினத்துக்கு மக்களும் நாடும் ஆளாகாதவாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்,

திருத்தலத்தினை நிர்வகிக்க முன்வரும் சிவனேயச் செம்மல்கள், இத் தலத்திற்கு வரும் அடியார்கள், பக்தர்கள் கோவிலுக்குப் போய் வருவதில் உள்ள முட்டுக்கட்டைகளை களைதல், தமது இயற்கைக் கடன்களை நிறைவேற்றக் கழிவறை அமைத்தல், பசியாறிப் போக உணவகம் வகுத்தல். ஆதிமூல லிங்கப் பெருமானின் அபிஷேகத்துக்கு வேண்டிய சுத்த நீரைப் பெறும் வசதிகள் செய்தல் இன்னோரன்ன அத்தியாவசியச் சிவப்பணிகளை புரிந்துணர்வோடும், பரிந்துணர்வோடும் செய்து, குளக்கோட்டன் கண்ட கனவை நனவாக்க வேண்டிது, தமது தலையாய கடன் என உணரவேண்டும்.

"சிந்தை முழுவதும் சிவனை நினைத்திருந்தால் சகலதும் தடையின்றி நடந்தேறும்", "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" "அசையவும் கூடாது" என்ற கருத்தில் ஊறிய, "அன்பு இல்லம்" என்ற குழந்தைகள் காப்பகத்தை நடத்திவரும் "அன்பு சுந்தரலிங்கம்" ஐயா அவர்கள், தன்னிடம் தஞ்சம் கோரிவந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை சிவமயத்தில் வைத்த விசுவாசம், பக்தி காரணமாக அவர்களை அரவணைத்துப் பராமரித்து வருகின்றார். தஞ்சமென வந்த பிள்ளைகளைக் காப்பாற்ற திருக்கோணேசரை இரந்து நின்றார். கோணேசர் அருளைச் சுரந்தார். சுந்தரலிங்கத்தார் மற்றவைகளை மறந்தார். சிவத்தை துணையாகக் கொண்டு தடையின்றி தமது தொண்டைச் செய்கின்றார். தம் அருட்பணியைத் தொடரக் கிடைக்கும் நன் கொடைகள் போதவில்லை. ஆனாலும் அவர் தளரவில்லை. மாறாகத் தன்னை வருத்தி தனம் சேர்த்து ஏழைகளுக்கு தானம் வழங்குகின்றார். அவருக்குள்ள பணப்பளுவை ஓரளவு குறைக்கும் நோக்கத்திலேயே இந்நூலை மறுபதிப்பு செய்து, விற்று வரும் தொகையை அன்பு இல்லத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளேன். "அன்பு சுந்தரலிங்கம்" ஐயா அவர்களின் அயராத சேவைக்கு உதவ எனக்கு கிடைத்த பேறு என்றுதான் இதைக் கூறவேண்டும்.

இந் நூல் வெளியீட்டில் இரண்டு பெரிய காரியங்கள் கைகூடுகின்றன. ஒன்று "திருக்கோணாசல வைபவம்" என்னும் இந்நூல் மறுபதிப்புச் செய்யப்படுவது, இரண்டாவது பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளின் அவலநிலையைத் துடைக்க உதவுவதுமாகும். எனவே இந்

நோக்கங்கள் நன்கு ஈடேற உங்கள் பங்கை நல்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இந்துக்களின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் காக்கவென உள்ள எத்தனையோ ஸ்தாபனங்கள் இன்று பணம் பண்ணுவதிலேயே கண்ணும் கருத்து மாக உள்ளன. எத்தனையோ கோயில்கள்கூட சொத்துச் சேர்ப்பதிலேயே ஆர்வம் காட்டி வருகின்றன. ஆனால் உண்மையான இறையருள், வழிபாடு என்னவென்று போதிக்கத் தவறுகின்றன. பணம் இருந்தால் தான் பக்திவரும், அருளைப் பெறலாம் என்ற இழிநிலைக்கு இன்றைய இந்துக்கள் தள்ளப்பட்டு விட்டனர். பதவி மோகமும், பணமோகமும் இன்று தலைவிரித் தாடுகின்றது. ஏன் இந்த இழிநிலை?

குன்றின் மேல் ஒரு கோயில் அமையக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். எமக்குக் குன்றின் மேல் திருக்கோணேசப் பெருமான் அமர்ந்து இருந்தும், எம்மில் பலருக்கு அவரை போற்றி வழிபடக் கொடுத்து வைக்க வில்லை. இந்நிலை மாறவேண்டும். இலங்கைத் தீவில் எத்தனை தலங்கள் இருந்தாலும் வரலாற்றுச் சிறப்புமிக்க இத் திருத்தலத்தைக் கண்ணின் மணியாகப் பாதுகாக்க வேண்டும். அம்முயற்சியில் இன்றே நாம் எம்மை அர்ப்பணிப்போம். இதற்கும் எம்பெருமானார் தான் எமக்கு நல்லறிவை அளிக்கவேண்டும்.

இன்றைய எமது தேக்கநிலைக்கு எம்மிடம் தோன்றியுள்ள தலைமை விரும்பி களான புண்ணியவான்களின் கையாலாகாத்தனம் தான் காரணம். என்பது வெள்ளிடை மலை.

இது இந்நூலின் முடிவுரை என்றாலும், நம்முன் பரந்து கிடக்கும். பாரிய பணிக்கு முன்னுரையே.

தம்பு தம்பையா ஞானேஸ்வரன்

C1 11/60



வே.அகிலேசபிள்ளை

சைவத்தமிழ் திருமுறைகள் பன்னிரண்டில் மூன்றாம் திருமுறையில் சம்பந்தப்பெருமானால் பதிகம் பாடப்பெற்ற பெருமை மிக்கது திருக்கோணேஸ்வரம். சிவபெருமானின் கட்டளைப்படி, சித்திரை மாதமும், ஞாயிற்றுக் கிழமையும், பூரணை திதியும், அத்த நக்ஷசத்திரமும், விருத்தி யோகமும், பத்திர கரணமும் கூடிய சுபவேளையில், குரு ஓரையில், வாயுபகவானால் ஈழத்திருநாட்டின் கீழைக்கரையில் ஸ்தாபிக்கப்பட்ட திருத்தலம் ஆகும்.

இதன் வரலாறு வடமொழி நூலாகிய தக்ஷிண கைலாய மான்மியத்தில் விரிவாகச் சொல்லப் பட்டுள்ளது. அந்நூல் கோணைநாயகர் கோயிற் பூசகர்களாக விளங்கிய இருபாகை முதன்மைகளிடமிருந்து, பின் அழிந்து போய்விட்டது. அதன் வழிநூல்களாக தமிழ் மொழியில் செகராசசேகர மகாராசாவினாற் பாடப் பெற்ற தக்ஷிணகைலாய புராணத்தையும், பிற்காலத்தில் சில வித்துவான் களால் அந்நூலை ஆதாரமாகக்கொண்டு பாடப்பெற்ற கோணவரைப் புராணம், கரசைப் புராணம் எனும் நூல்களையும், குளக்கோட்டு மகாராசா வினால் ஆக்கப்பட்ட கம்பைச் சாத்திரம், பெரியவளமைப் பத்ததி, கோணேசர் கல்வெட்டு என்னும் மூன்று நூல்களையும் விடா முயற்சியுடன் தேடியெடுத்து, அவற்றின் கண்ணுள்ள வரலாற்று உண்மைகள் அனைத் தையும் ஒன்றுதிரட்டி, எளிய வசன நடையிலியற்றி இந் நூலை எமக்கு தந்துள்ளார் ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளை அவர்கள்.

1889ல் இவரால் ஆக்கப்பட்ட இந்த வரலாற்றுப் பொக்கிஷம், அவர் மறைவிற்குப் பின் அறுபது ஆண்டுகளின் பின் 1950ல் முதன் முறையாக அவரது வழித்தோன்றலாகிய திரு. அளகைக்கோன் அவர்களால் அச்சேற்றப்பட்டது. அதுவும் இன்று கிடைப்பதற் கரியதாகிவிட்டது. அதன் காரணமாக பல வரலாற்றுத் திரிபுகள் புகுத்தப்பட்டு கோணேஸ்வரத்தின் பெருமையும் புனிதமும் மூடிமறைக்கப்பட்டு இழிநிலை அடைந்து வருகிறது. அதனால் காலத்தின் தேவைகண்டு இது இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

அதுவும் "அன்பு இல்லம்" எனும் குழந்தைகள் காப்பக நிதிக்காக இந்நூலின் விற்பனையால் வரும் நிதி அர்ப்பணிக்கப்படுவது வெளியீட் டாளரின் புரவலத் தன்மைக்கு நற்சான்று. குளக்கோட்டன் வாழ்ந்த மண்ணின் வாசனை திரு. த.தம்பையா, அவரது புதல்வர் திரு. த.ஞானசேகரன் பொதுப்பணியில் வீசுகிறது. முகர்ந்து நுகருங்கள்.

— அடியார்க்கடியன்